கல்கி



ALKI ஜூன் 6, 1954 4 அணா



3. 220-50 TM

இந்தியாவில் தயாரித்தது

கல்கி பொருளடக்கம்

மலர் 13
இதழ் 45

1954 ஜூன் 6

ஜய வருஷம்
வைகாசி 24

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

ஒரு வினாடிகூட கவலை வேண்டாம்

ஏனெனில் அவள் லாக்டோஜெனின்
குழந்தை. லாக்டோஜன் தாய்ப்
பாலுக்கு சமமான போஷாக்கை
கொடுக்கிறதுமல்லாமல்
லகுவில் ஜீரணமும்
ஆகிறது.



நம்புங்கள்

LACTOGEN

தாய்ப்பால் இல்லாதபோது

இலவச லாக்டோஜென் போஸ்டர்
பெற இந்தக் கூப்பனை எழுதி தபா
லில் இவ்விலாசத்துக்கு அனுப்புக:


பெயர் ....

விலாசம் ....


....

நெஸில்ஸ் புராடெக்ட்ஸ் (இந்தியா)
லிட்., தபால் பெட்டி 396, கல்கத்தா.


LG/G/8



ஆரம்பப் பள்ளியிலிருந்து
பட்டதாரியாகும் வரை



ஜே. பி. மங்காராமின்
போஷாக்கு மிக்க பிஸ்கோத்துகளினால்
குழந்தைகள் வளரட்டும்



பால், க்ளுகோஸ் மற்றும் வைட்டமின் சத்துக்கள் சேர்த்து தயார் செய்த ஜே. பி. மங்காராமின் முறுகலான ருசிமிக்க பிஸ்கோத்துகள் பள்ளியிலோ, கல்லூரியிலோ நாள் முழுவதும் கடினமாக உழைக்கும் இளைஞர்களுக்கு உற்சாகமளிக்கும் ஒரு சிற்றுணவாகிறது.

பிரதி தினமும் காலையில் உங்களுடன் கொஞ்சம் ஜே. பி. மங்காராமின் பிஸ்கோத்துகளை எடுத்துச் செல்லுங்கள்.

உங்களுக்கு மிக இஷ்டமான சில உயர்ரக பிஸ்கோத்துகள்

சால்டோ	ராயல் க்ரீம்	எனர்ஜி வேபர்ஸ்
நரிஷ்	ஆப்டர்நூன் டீ	க்ரீம் வேபர்ஸ்

எல்லா கடைகளிலும் கிடைக்கும்

ஜே. பி. மங்காராம் அண்டு கம்பெனி, குவாலியர்

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 45

பயங்கரப் படுகொலை

உலகச் சரித்திரத்தில் எத்தனை எத்தனையோ கோரமான படுகொலைகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம்.

முதலாவது, இரண்டாவது உலக மகா யுத்தங்களிலும், கொரியா, இந்தோ சீனப் போர்களிலும் லட்சோப லட்சம் பேர்கள் கொலையுண்டனர்.

சகல வசதிகளும் அளித்துப் பாதுகாக்கப்பட வேண்டிய யுத்தக் கைதிகள் உலக தர்மத்துக்கும் யுத்த தர்மத்துக்கும் விரோதமாகப் படுகொலை செய்யப்பட்டதைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளோம்.

இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிக்கப்பட்டபோது மத வெறியர்கள் புரிந்த படு கொலைப் பாதகங்களைக் கண்டு மனம் துடிக்காத நாகரிக மனிதர்கள் இருக்க முடியாது.

ஆனால் மேற்படி படுகொலைகளைக் காட்டிலும் பயங்கரமான படுகொலை இப்போது பாகிஸ்தானில் நடந்திருக்கிறது.

அங்கு இப்போது பாகிஸ்தான் மத்திய சர்க்கார் ஜனநாயகத்தையே படுகொலை செய்திருக்கிறார்கள்.

இது உலகம் முழுவதையுமே கலங்கவைக்கும் சம்பவம் என்று கூறுவது மிகையாகாது.

உலகில் ஜனநாயகம் செத்து விட்டால், பிறகு சர்வாதிகார ஆட்சி, ஆயுத வலிமை யுள்ளவர்களின் தான்தோன்றி ஆட்சி முதலிய கொடுங்கோல் ராட்சத ஆட்சி முறைகள் தாண்டவமாட ஆரம்பித்து விடும் அல்லவா ?

புனித அரசியல் தர்மமும் நாகரிகமும் மறைந்து, மறுபடியும் உலகம் காட்டுமிராண்டி சகாப்தத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு விடும் அல்லவா ?

* * * *

சென்ற பல நாட்களாகப் பாகிஸ்தானில் குமுறிக் கொண்டிருந்த அரசியல் எரிமலை கடைசியாகக் குபீரென்று வெடித்து விட்டது.

அதிலிருந்து கிளம்பிய பயங்கரமான அக்னிஜ்வாலை, கிழக்கு பாகிஸ்தானில் இரண்டு மாதங்களுக்கு முன் ஏற்பட்ட உண்மையான ஜனநாயக அரசாங்கத்தை விழுங்கி விட்டது.

அதன் விளைவாக அங்கு சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டு விட்டது ; பாகிஸ்தான் மத்திய சர்க்காரின் பொம்மையான கவர்னரின் ஆட்சி உருவாகி விட்டது.

சென்ற மார்ச்சு மாதம் நடந்த தேர்தலில் சட்டசபையிலே பெருவாரியான ஸ்தானங்கள் பெற்று அமைக்கப்பட்ட பஸ்லுல் ஹக் மந்திரி சபையைப் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் குலாம் முகமது 'டிஸ்மிஸ்' செய்து விட்டார்.

ஜனாப் பஸ்லுல்ஹக் கைதியாகிக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

மற்றும் நூற்றுக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த பல நகரங்களிலும் துருப்புகளின் காவல் தடபுடலாக இருந்து வருகிறது.

தொண்ணூறு சத விகித ஜனங்களின் ஆதரவு பெற்றுப் பிரதமர் பதவிக்கு வந்த ஜனாப் ஹக்கை, 'தேசத் துரோகி' என்று பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் முகமது அலி கூசாமல் கூறியிருக்கிறார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுஜனப் பிரதிநிதிகள் அடங்கிய கிழக்கு பாகிஸ்தான் சட்டசபை கூடவும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக, கிழக்கு பாகிஸ்தானில் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டிருக்கிறது.

பெரும்பாலான மக்களின் ஆதரவு பெற்ற மந்திரி சபையை, பொது மக்களின் போதிய ஆதரவில்லாத மத்திய சர்க்கார் விலக்குவது ஜனநாயகப் படுகொலை ஆகாதா ?

பாகிஸ்தான் தேசம் உருவாகியதிலிருந்து, அங்கு மந்திரிகள் விலக்கப்படுவதும் கவர்னர் ஆட்சி ஏற்படுவதும் சர்வ சகஜமாக இருந்து வந்திருக்கிறது.

ஏன், ஜனாப் முகமது அலிக்கு முன் பாகிஸ்தான் பிரதம மந்திரி பதவியை வகித்த காஜிமுத்தீன் அப் பதவியிலிருந்து விலக்கப்படவில்லையா?

சமீப காலத்தில்கூட சிந்து மந்திரிகளும் ஆஸாத் காஷ்மீர் மந்திரிகளும் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

ஆனால் அவர்கள் விலக்கப்பட்டதற்கும் ஜனாப் பஸ்லுல் ஹக்கும் அவரது சகாக்களும் விலக்கப்பட்டதற்கும் மிகுந்த வேற்றுமை உண்டு.

இதற்கு முன் பாகிஸ்தானில் மந்திரிகள் விலக்கப்பட்டதற்கு, சொந்த விருப்பு வெறுப்பும் பதவிப் போட்டா போட்டியும் காரணங்கள் ஆகும்.

விலக்கியவர்கள், விலக்கப்பட்டவர்கள் யாவரும் ஒரே கட்சியை, அதாவது முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்கள்தான்.

ஆனால், இப்போது கொள்கை சம்பந்தமாகப் பாகிஸ்தான் மத்திய சர்க்காருக்கும் கிழக்கு வங்காள சர்க்காருக்கும் வேற்றுமை ஏற்பட்டுள்ளது.

உள்நாட்டு நிர்வாகம் சம்பந்தமாகப் பாகிஸ்தான் சர்க்காரின் ஊழல்கள் ஒருபுறமிருக்க, அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் இராணுவ உதவி பெறத் தீர்மானித்திருப்பதைக் கிழக்கு பாகிஸ்தான் மக்கள் விரும்பவில்லை என்பது சமீபத்தில் நடந்த தேர்தலில் வெளியாகியது.

கிழக்கு பாகிஸ்தான் தேர்தல்கள் முடிந்த உடனேயே அங்கு பெரும் கிளர்ச்சி எழுந்தது.

பொது மக்கள் டாக்காவில் மாபெரும் கூட்டம் கூடி ஜனாப் முகமது அலி மந்திரி சபை ராஜிநாமா செய்ய வேண்டும்; அல்லது சர்வ கட்சி அடிப்படையில் மத்திய மந்திரி சபையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரினர்.

அமெரிக்காவுடன் பாகிஸ்தான் செய்து கொண்ட இராணுவ ஒப்பந்தத்தைக் கைவிட்டு விட வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

அதற்குச் செவி சாய்க்காத பிரதம மந்திரி ஜனாப் முகமது அலி, பெரும்பாலான ஜனங்களின் ஆதரவு பெற்ற பஸ்லுல் ஹக் மந்திரி சபையைக் கவிழ்க்க முற்பட்டது, பாகிஸ்தானின் பெரும் அக்கிரமம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

** ** **

கிழக்கு பாகிஸ்தான் தேர்தல் முடிவு வெளியானதும், அம் முடிவு அமெரிக்கா – பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தத்தை எவ்விதத்திலும் பாதிக்காது என்று பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க ஸ்தானிகர் ஸ்ரீ ஹெல்டிரீச் கூறினர்.

இப்போதும், கராச்சியில் ஜனாப் முகமது அலிக்கும் ஜனாப் பஸ்லுல் ஹக்குக்கும் நடந்த பேச்சு வார்த்தைகள் உருப்படாமல் போனதற்கு அமெரிக்க ஸ்தானிகரே காரணம் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்கா–பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தம் ஏற்படுவதற்கு அரும் பாடுபட்ட அமெரிக்க ஸ்தானிகர், அந்த ஒப்பந்தத்தை வன்மையாகக் கண்டிக்கும் ஹக் மந்திரி சபையை ஒழிப்பதில் அக்கறை கொண்டதைக் குறித்துச் சிறிதும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

அமெரிக்காவுடன் பாகிஸ்தான் சர்க்கார் செய்து கொண்ட இராணுவ ஒப்பந்தத்தின் முதல் பலனை இப்போது பாகிஸ்தான் மக்கள் அனுபவிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள்!

அந்த ஒப்பந்தத்தின் விளைவாகப் பாகிஸ்தானில் அமெரிக்காவின் ஆதிக்கம் தலை காட்ட ஆரம்பித்து விட்டது என்பதையே, கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்ட ஜனநாயக மந்திரி சபையின் வீழ்ச்சி உலகத்துக்குக் காட்டுகிறது.

** ** **

பாகிஸ்தான் இராணுவ நிர்வாகக் காரியதரிசியாக இருந்த மேஜர் ஜெனரல் இஸ்கந்தர் மிர்சா இப்போது கிழக்கு பாகிஸ்தான் கவர்னராக நியமிக்கப் பட்டுள்ளார்.

எனவே கிழக்கு பாகிஸ்தானில் சிவில் ஆட்சி மறைந்து இராணுவ ஆட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதையே கவர்னரின் நியமனம் காட்டுகிறது.

மேற்படி நியமனத்திலிருந்து, கிழக்கு பாகிஸ்தானில் காற்று எந்தப் பக்கம் அடிக்கத் தொடங்கி யிருக்கிறது என்பதையும் சந்தேகமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

ஜெனரல் இஸ்கந்தர் மிர்சா பாகிஸ்தான் சர்க்கார் சார்பில் ஏற்கெனவே அமெரிக்கா, துருக்கி முதலிய நாடுகளுக்குச் சென்று அவ்விரு நாடுகளுக்கும் பாகிஸ்தானுக்கும் இராணுவ ஒப்பந்தம் ஏற்படுவதற்கு அடிகோலியவர்; அமெரிக்கா சர்க்கார் தலைவர்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் கிழக்கு பாகிஸ்தான் கவர்னராக நியமிக்கப் பட்டிருப்பதன் உண்மைக் காரணத்தை அறிந்து கொள்வது அவ்வளவு கஷ்டமல்ல.

அமெரிக்கா – பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தத்தைக் குறித்துப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ள கிழக்கு பாகிஸ்தானில், மேற்படி ஒப்பந்தத்தின் காரண கர்த்தாக்களில் ஒருவரையே கவர்னராக நியமிப்பதன் மூலம் அந்த எதிர்ப்பைத் தகர்த்து விட முடியும் என்பது பாகிஸ்தான் மத்திய சர்க்காரின், அமெரிக்க ராஜ தந்திரிகளின் அபிப்பிராயமாக இருக்கலாம்.

அது எப்படியாயினும், பாகிஸ்தானில் நிகழ்ந்துள்ள சம்பவத்தைப் பாகிஸ்தானின் உள் நாட்டு விஷயம் என்று இந்திய மக்கள் சிறிதும் அலட்சியம் செய்வதற்கில்லை.

கிழக்கு பாகிஸ்தானில் ஜனநாயக மந்திரிசபை மறைந்து, கவர்னரின் ஆட்சி ஏற்பட்டிருப்பதன் மூலம் மறுபடியும் அங்கு வகுப்பு வெறி தலை தூக்கத் தொடங்கலாம்.

அதன் விளைவாக, அங்குள்ள சிறு பான்மையோரான ஹிந்துக்களுக்கு மறுபடியும் அனர்த்தமும் ஆபத்தும் ஏற்படலாம்.

இதைத் தவிர, இந்தியா கவலைப்படுவதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது.

கிழக்கு பாகிஸ்தானில் அமெரிக்கர்களின் ஆதிக்கம் ஏற்படும் பட்சத்தில், தென் கிழக்கு ஆசியாவில் அவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளைத் தொடருவதற்கு அதை இராணுவ தளமாக உபயோகிக்க முற்படுவார்கள்.

இந்தியாவின் எல்லையை அடுத்துள்ள கிழக்கு பாகிஸ்தான் அமெரிக்க இராணுவ தளமாகி விட்டால், சோவியத் ருஷ்யாவையும் சீனாவையும் வலுச் சண்டைக்கு இழுப்பதாகவே முடியும். அதன் மூலம் ஏற்படக் கூடிய அனர்த்தங்களைச் சொல்லவும் வேண்டுமா!

காந்தி மண்டப நிதி

ராஜாஜி வேண்டுகோள்

பத்திரிகைகளைப் படித்து உலக வியவகாரங்களை யெல்லாம் ஆராய்ந்து வருகிறீர்கள். நம்முடைய தேசத்தை முன்னுக்குக் கொண்டு வந்தவர் யார் என்பதை மறந்துவிட வேண்டாம். நம் நாளில் நம்மிடையில் நம்மோடு ஒருவராக வாழ்ந்து நமது தாய் நாடும் நாமெல்லாரும் புகழ் பெறச் செய்து இந்தப் புண்ணிய பூமியில் ராக்ஷச பலத்துடன் ஸ்தாபிதமாயிருந்த அந்நியஆட்சியை முப்பது ஆண்டுகளுக்குள் நம்மைக் கொண்டு "மாயாஸ்திரம்" செலுத்தச் செய்து ஒழித்துவிட்டுச் சுதந்திர வாழ்க்கையை நமக்குக்கொடுத்து விட்டார் மகாத்மா காந்தி. மூர்க்கர்கள் சிலர் அவருடைய உயிரை மாய்த்து விட்டனர். ஆயினும் அதற்குள் சுதந்திரம் ஸ்தாபிதமாகி விட்டிருந்தது; பிழைத்தோம். இப்போது இந்தியாவும் உலகத்தில் மற்ற உயர்நிலை நாடுகளுடன் சரிநிகர் சமான மதிப்பும் இடமும் பெற்று நிற்கிறது.

அந்த மகாத்மா காந்திக்காகத் தமிழ் நாட்டின் பிரதான நகரத்தில் நல்ல இடம் பார்த்து ஒரு கீர்த்தி கோபுரமும் பிரார்த்தனை அம்பலமும் கட்ட வேண்டியதென்ற என் விருப்பம் சீக்கிரத்தில் நிறைவேறும்போல் தோன்றுகிறது. இதில் நீங்கள் அனைவரும் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது என் பெரிய ஆசை. அதற்காகத்தான் இதை எழுதுகிறேன்.

இந்திய அரசாங்கத்தின் ஸ்தலபதியின் மாளிகையான ராஜ பவனத்துக்கருகில் இந்தக் கோயிலைக் கட்ட ஏற்பாடுகள் முடிந்து கல் தச்சர்கள் மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கீர்த்தி கோபுரமும் சர்வமத சம்மதப் பிரார்த்தனை நடத்த மண்டபமும் கூடமும் முடிந்து நம்முடைய நகரத்தை அலங்கரித்தால் அதில் அனைவருக்கும் ஒரு பங்கு இருந்தால் அதிகமாகச் சோபிக்கும். ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் இப்படியாகச் சேர்த்து இந்தக் கோயில் கட்ட வேண்டும் என்பது இதில் சம்பந்தப் பட்டவர்களுடைய ஆசை. இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று இதைப் படிக்கும் பெரியோர் சிறுவர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன். பணம் அனுப்ப வேண்டிய விலாசம்: "சென்னை கவர்னர், (காந்தி மண்டப நிதி), ராஜபவன், கிண்டி." தபால் வழி யனுப்புவது சிறந்த முறை. பத்திரிகைகளுக்கு அனுப்பினாலும் பெற்றுக் கொண்டு சரியாகச் சேர்த்து விடுவார்கள்.

தியாகராயநகர்
29—5—54

[signature]

உங்கள் ஊர்ப் பஞ்சாயத்து

கட்டுரைப் பரிசுப் போட்டி

சுமார் ஒரு வருஷத்துக்கு முன்பு தமிழ் நாட்டுக் கிராமங்கள் பலவற்றில் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின்படி கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டன. கிராமங்களில் வயது வந்தோர் அனைவரும் கூடி, சர்வஜன வாக்குரிமை அடிப்படையில், பஞ்சாயத்து அங்கத்தினரையும் பஞ்சாயத்துத் தலைவர்களையும் தேர்ந்தெடுத்தார்கள். முன்னொரு காலத்தில் 'யூனியன்' என்று அழைக்கப்பட்டுப் பிறகு மேஜர் பஞ்சாயத்து என்று ஆன பெரிய பஞ்சாயத்துச் சபைகள், 'மைனர்' பஞ்சாயத்து என்று குறிப்பிடப்பட்ட சிறிய கிராமங்களின் பஞ்சாயத்துச் சபைகள் எல்லாமாகச் சேர்ந்து தமிழ் நாட்டின் பதினொரு ஜில்லாக்களிலும் சில ஆயிரம் பஞ்சாயத்துச் சபைகள் அமைக்கப்பட்டு வேலை செய்து வருகின்றன. கிராமங்களின் முன்னேற்றத்துக்குரிய பல ஆக்க வேலைகளைச் செய்வதற்கும், அவற்றுக்காகப் புதிய வரிகள் போட்டு வசூலிப்பதற்கும் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு சுமார் ஓராண்டு காலமாக இயங்கி வரும் பஞ்சாயத்துச் சபைகளின் வேலைகளைப் பற்றி நேயர்களின் கருத்தை அறிவதற்காக இந்தக் கட்டுரைப் பரிசுப் போட்டியை ஏற்படுத்துகிறோம்.

கட்டுரைகளில் குறிப்பிட்டு அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டிய அம்சங்களுக்குக் கீழே சில உதாரணங்கள் தந்திருக்கிறோம்:—


1. உங்கள் ஊரில் ஏற்பட்டுள்ள பஞ்சாயத்து நல்ல முறையில் நிர்வாகம் நடத்தி வருகிறதா?
2. உங்கள் ஊரில் புதிய முறையில் பஞ்சாயத்து ஏற்பட்ட பிறகு கிராம வாழ்க்கையில் உண்மையான முன்னேற்றம் காணப்படுகிறதா? எந்தெந்தத் துறையில் முன்னேற்றம் காணப்படுகிறது?
3. உங்கள் ஊர்ப் பஞ்சாயத்தின் தலைவர் அந்தப் பதவிக்குத் தகுதியுடையவர் என்று கருதுகிறீர்களா? அவர் தம்முடைய கடமைகளைச் சரிவர ஆற்றி வருகிறாரா? அவர் பஞ்சாயத்துத் தலைவர் ஆனபிறகு ஊர் ஜனங்களிடையில் அவருடைய செல்வாக்கு வளர்ந்திருக்கிறதா? குறைந்திருக்கிறதா?
4. உங்கள் ஊர்ப் பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் தங்கள் கடமைகளைத் திருப்திகரமாகச் செய்து வருகிறார்களா?

முதல் கைதி!



கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தான் திடீரென்று ஜனநாயக மந்திரி சபையை விலக்கி விட்டு, கவர்னர் ஆட்சியை நிறுவியதற்கு அமெரிக்காவின் தூண்டுதல்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

வீண் முயற்சி



இந்தியா-இலங்கை உடன்படிக்கைக்கு விரோதமான காரியங்களைச் செய்வதில் இப்போது இலங்கை சர்க்கார் முழு கவனத்தையும் செலுத்தி வருகிறார்கள்.

5. உங்கள் ஊரில் பஞ்சாயத்து ஏற்பட்ட பிறகு என்னென்ன புது வரிகள் விதித்திருக்கிறார்கள்? அந்த வரிகள் நியாயமான வரிகளா? வரிவசூல் சரியாக நடந்து வருகிறதா? வசூலித்த வரிப் பணம் நல்ல முறையில் பொதுஜன நன்மைக்கு உகந்த காரியங்களுக்காகச் செலவழிக்கப்பட்டு வருகிறதா?

6 பஞ்சாயத்தார் செய்யத் திட்டமிடும் பொது நன்மைக்கு உகந்த காரியங்களுக்குச் சர்க்கார் அதிகாரிகள் அனுகூலமாக இருக்கிறார்களா? அல்லது வீண் தாமதம் செய்தும் அனாவசியமான ஆட்சேபங்களைக் கிளப்பியும் முட்டுக்கட்டைபோட்டு வருகிறார்களா?

உதாரணமாக, ஊரில் குடி தண்ணீருக்காக ஒரு கிணறு எடுக்க வேண்டும் என்றோ, தூர்ந்து போன குளத்தை வெட்டி ஆழமாக்க வேண்டும் என்றோ, பஞ்சாயத்தார் திட்டமிட்டால், அதை நிறைவேற்ற மேலதிகாரிகளிடமிருந்து நியாயமான கால வரம்புக்குள் அநுமதி கிடைக்கிறதா?

அல்லது அதிகாரிகளின் மத மதப்பினால் திட்டங்களை நிறைவேற்றுவதில் வீண் கால தாமதம் ஏற்படுகிறதா?

7. இப்போது நடப்பதைவிட நல்ல முறையில் தீவிரமாகக் கிராம நலத்துக்குகந்த காரியங்களைச் செய்ய முடியுமா? அப்படியானால் அவ்விதம் செய்யும்படி பஞ்சாயத்தாரைத் தூண்டுவதற்கு என்ன என்ன முறைகளைக் கையாளலாம்?

8. சர்வஜன வாக்குரிமை அடிப்படையில் கிராம ஜனங்களை ஒன்று கூட்டி, கையைத் தூக்கச் செய்து பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை நல்ல முறை என்று நீங்கள் கருதுகிறீர்களா? அல்லது சட்டசபைத் தேர்தல்களில் நடப்பது போல், இரகசியமாக வோட்டுப் பெட்டியில் வோட்டுப் போடும் முறையையே பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் உபயோகிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

9. பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் இப்போது அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் விட அதிகமாகக் கொடுக்கலாமா?

10. சமீபத்தில் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் காரியதரிசி கிராமப் பஞ்சாயத்துக்களுக்குக் குற்ற விசாரணை செய்து நியாயத் தீர்ப்புச் சொல்லும் உரிமை அளிக்க வேண்டும் என்று ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்.

நீங்கள் இதை அங்கீகரிக்கிறீர்களா? அல்லது கிராமப் பஞ்சாயத்தாரிடம் நீதி மன்றத்தின் பொறுப்பையும் அளித்தால், பட்சபாதமான தீர்ப்புக்கள் ஏற்பட ஏது வாகும் என்றும், தங்களுக்கு வோட்டுக் கொடுத்து ஆதரித்தவர்கள் பக்கம் தீர்ப்புச் சொல்லுவது என்று ஏற்பட்டு விடும் என்றும் கருதுகிறீர்களா?

மேலே குறிப்பிட்ட பத்து அம்சங்களைப் பற்றியும், இன்னும் உங்கள் ஊர்ப் பஞ்சாயத்தைப் பற்றி உங்கள் விசேஷ அபிப்பிராயங்களையும் கட்டுரைகளில் எழுதி அனுப்பலாம்.

அந்தந்த ஊரில் உள்ளவர்கள் அவரவர்கள் ஊர்ப் பஞ்சாயத்து நிர்வாகத்தைப் பற்றி எழுதுவது மிகப் பொருத்தமாயிருக்கும். ஆனால் பக்கத்து ஊர்ப் பஞ்சாயத்துக்களைப் பற்றியும் நேரில் சென்று விசாரித்துத் தக்க ஆதாரங்களுடன் கட்டுரை எழுதலாம்.

ஜூலை மீ 5௳க்குள் கட்டுரைகள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும்.

அவற்றுள் மிகச் சிறந்தது என்று ஆசிரியரால் கருதப்படும் கட்டுரைக்கு ரூ. 25 பரிசு அளிக்கப்படும். மற்றும் மூன்று சிறந்த கட்டுரைகளுக்கு ரூ. 15 வீதம் தரப்படும்.

இன்னும், பிரசுரத்துக்குத் தகுதியாயுள்ள கட்டுரைகள் எல்லாம் பிரசுரிக்கப்படும்.

மேல் உறையில், "பஞ்சாயத்துக் கட்டுரை" என்று தயவுசெய்து குறிப்பிடவும்.

உழைப்பாளியின் உயிர்த் தியாகம்

பெரம்பூரைச் சேர்ந்த ஸ்ரீ சன்யாசி என்ற ஆலைத் தொழிலாளர், தமது சகோதரத் தொழிலாளிகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தமது உயிரையே தியாகம் செய்த சம்பவத்தைக் கேட்டு ரோமாஞ்சனம் அடையாதவர்கள் இருக்க முடியாது. பாதாளச் சாக்கடைக்குள் இறங்கி மரண ஆபத்தில் சிக்கிய மூவரைக் காப்பாற்றும் முயற்சியில் ஸ்ரீ சன்யாசி தமது உயிரை அர்ப்பணம் செய்தார். சாக்கடைக்குள் இறங்கிய மூன்று பேர்கள் விஷவாயுவினால் மூச்சுத் திணறி இறக்கும் தறுவாயில் இருந்தனர். அந்நிலையில் சாக்கடைக்குள் இறங்க யாரும் துணியவில்லை. எனினும் முப்பத்தேழு வயதுள்ள ஸ்ரீ சன்யாசி என்ற தொழிலாளர் ஓடோடி வந்து, தமது உயிரைத் துச்சமாக மதித்துச் சாக்கடைக்குள் இறங்கினார். மிகவும் சிரமப்பட்டு இருவரை வெளியே தூக்கிக் கொண்டு வந்து காப்பாற்றினார். மூன்றாவது நபரைக் காப்பாற்றுவதற்காக அவர் மறுபடியும் சாக்கடைக்குள் இறங்கவும் தயங்கவில்லை. அவ்வாறு அவர் இறங்கிய போது துரதிர்ஷ்டவசமாக விஷ வாயுவினால் தாக்குண்டு மாண்டார். பிறகு தீயணைக்கும் படையினர் வந்து, ஸ்ரீ சன்யாசியின் உடலையும் ஏற்கெனவே இறந்த மற்றொரு தொழிலாளரின் உடலையும் வெளியே கொண்டு வந்து சேர்த்தனர்.

இதற்கு முன் பாதாள சாக்கடைக்குள் இறங்கிய தொழிலாளர்களில் பலர் விஷ வாயுவால் தாக்குண்டு இறந்தது உண்டு. எனவே விஷவாயுவின் கொடுமையை யாரும் உணராதிருக்க முடியாது. அதனால் உயிருக்கு ஆபத்து நேரும் என்பது தெரிந்திருந்தும்கூட ஸ்ரீ சன்யாசி தன்னுயிரைக் காட்டிலும் மன்னுயிரையே பெரிதாகக் கருதினார். இத்தகைய தொண்டு உணர்ச்சியும் தியாக புத்தியும் படைத்த சிலர்கள் நம்மிடையே இருப்பது நம் சமூகத்தின், நமது நாட்டின் எதிர் காலச் சிறப்பையே குறிக்கிறது.

நகரசபைத் தலைமைப் பீடங்களை அலங்கரித்த பிரமுகர்களுக்கும், மற்றப் பெரிய மனிதர்களுக்கும் உருவச் சிலைகள் நாட்டி, படங்கள் திறந்து வைத்துப் பலவிதங்களில் சிறப்புச் செய்கிறார்கள். ஸ்ரீ சன்யாசி போன்ற ஏழைத் தொழிலாளியின் மகத்தான உயிர்த் தியாகத்தைச் சில நாள் போனால் எல்லாரும் மறந்தே போய் விடுவார்கள்! இது என்ன உலகம்!

தமது உயிரைத் தியாகம் செய்து மற்றவர்களுடைய உயிரைக் காப்பாற்றிய ஸ்ரீ சன்யாசியின் குடும்பத்துக்குச் சென்னை நகர சபை அதிகாரிகள் தக்க உதவி செய்ய வேண்டும்.

பாதாள சாக்கடைகளைச் சுத்தம் செய்ய இறங்குவோர் விஷ வாயுவினால் தாக்கப்பட்டு இறப்பது அடிக்கடி நிகழ்ந்து வருகிறது. இனி மேலும் அப்படி ஏற்படாமல் தடுப்பதற்குச் சென்னை நகர சபை தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

என்று வருவார்?

அந்த நந்தவனத்தில் அந்த அழகிய அணங்கும், அவளுடைய ஆருயிர்க் காதலனும் எத்தனையோ நாட்கள் எவ்வளவோ இன்பப் பேச்சுக்கள் பேசிப் பொழுதைக் கழித்திருக்கின்றனர்.

இருவருமாகக் கை கோத்து உல்லாச நடை பழகி உள்ளம் உவந்திருக்கின்றனர்.

ஆனால் இன்று அவள் தனி. அவள் காதலன் ஏதோ காரியமாக எங்கேயோ சென்றிருக்கிறான். எனவே, அவள் தன் காதலனை மறந்திருக்கலாம் என்று உப்பரிகையில் வந்து நந்தவனத்தை நோக்கி அமர்ந்தாள். அங்கே, அவள் கண்ட காட்சிகள் காதலை, இல்லை,-பிரிவாற்றாமைத் துயரை அதிகப்படுத்துவதாகவே இருந்தது. இருந்தாலும், அவள் இதழ்கள் ஏதோ முணுமுணுத்தவண்ணம் இருக்கின்றன.

கூவும் குயிலே
என்றோசொல் உம்மையும்
என்னையும் காணவந்து
எய்துவதே!

—(பழம் பாடல்)

"குயிலே, எனக்காக இல்லா விட்டாலும், உன்னைக் காண்பதற்காகவாவது அவர் வந்தாக வேண்டும்! அப்படி வரும் நாள் என்று! அவர் என்றைக்கு வருவார்! என்றைக்கு......! என்றைக்கு...!" என்று மெல்லக் கேட்கிறாள். ஆனால் அவளுக்குப் பதில் சொல்வார், யார்? யாருமில்லை! எனவே. அவள் உள்ளத்து ஏக்கத்தின் உருவமாகவே உட்கார்ந்திருக்கிறாள்.

இந்த நிலையில் இவளைப் பார்க்கும்போது, இவ்வளவு காதலைப் பெற்ற அந்தக் காதலன் உண்மையிலேயே பாக்கியசாலி என்று எண்ணத் தோன்றுகிறது. அத்துடன் ஒரு மேனாட்டு அறிஞர் கூறிய மொழிகளிலுள்ள உண்மையும் நன்கு தெரிகிறது.

"கடவுளுக்கு அடுத்தாற்போல் நாம் நன்றி செலுத்த வேண்டியது பெண்ணினத்துக்கு. நாம் உலகில் வாழப் பெற்றெடுத்தவள் பெண்—தாய். அந்த வாழ்வும் வாழத் தகுதியானதாகச் செய்பவளும் பெண்—காதலி—அல்லவா!"

நமது சித்திரக்காரர் 'சந்திரா' அந்தக் காதலி தன் காதலனை எண்ணி ஏக்கத்துடன் உட்கார்ந்திருக்கும் காட்சியைத்தான் இவ்வார அட்டைச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார்.

யுத்த முழக்கம்

—கொழும்பு, மே மீ 28உ

பொறுமைக்கு ஒரு எல்லையுண்டு. இந்து மகா சமுத்திரத்தில் ஒரு குந்துமணி போலிருக்கும் சின்னஞ் சிறு தீவு அடுத்தடுத்து அவமதித்து அவமானப் படுத்திக் கொண்டே யிருந்தால் அதைப் பாரதம் எப்படிச் சகித்துக்கொண்டிருக்க முடியும்? நிங்கு புரிபவனையும் திருப்திப்படுத்த முயற்சிப்பது ஒரு அளவுடன் நிற்கும் பொழுது தான் பெருந்தன்மை யென்பதையும் இந்த உயரிய பண்பு பலவீனத்தின் அறிகுறியாக மதிக்கப்படு மானால் தண்டப் பிரயோகம் செய்வது தவிர்க்க முடியாத தென்பதையும் புது டில்லி அரசாங்கம் உணர்ந்து விட்டதின் அறிகுறிகள் இப்பொழுது தென்பட ஆரம்பித்து விட்டன.

அண்டைத் தேசமான இலங்கையுடன் அந்நியோன்யமான உறவு கொள்ள வேண்டுமென்ற ஆவலுடனேயே இந்திய அரசாங்கம் சகல பிரச்னைகளிலும் பெருந்தன்மையோடு இலங்கைக்கு விட்டுக் கொடுத்துச் சென்ற ஜனவரி மாதம் டில்லி ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆனால் இந்தப் பெருந் தன்மையை மதித்து நடக்கும் பண்பு துரதிர்ஷ்டவசமாக இலங்கை நிர்வாகிகளிடம் இல்லாமற் போய் விட்டது. ஒப்பந்தத்துக்கும் சர்வ சாதாரணமான மனித தர்மத்துக்கும் விரோதமாகப் பல லட்சம் இந்திய வம்சாவளியினரைப் பட்டினி போட்டு விரட்ட ஒரு விபரீதத் திட்டத்தைத் தயாரித்து அதை அமுல் நடத்துவதிலும் இலங்கை அரசாங்கம் முனைய ஆரம்பித்து விட்டபடியினால், இதைத் தடுப்பதற்குக் காப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்பட்டு விட்டது.

பல தலைமுறைகளாக இலங்கையில் வாழ்ந்து, இந் நாட்டுக்காக உடல் தேய உழைத்தவர்களை நாடற்றவர்களாக்கி விரட்டுவதைத் தடுக்க ஜூன் மாதம் முதல் தேதி "விஸா" பாணத்தை இந்தியா தொடுக்கிறது. இந்தியப் பிரஜைகளென்று சொல்லி இந்தியா பாஸ்போர்ட் பெற்றவர்களைத் தவிர மற்ற இந்திய வம்சாவளியினர் உள்பட அந்நியர்கள் எவரும் இந்திய ஹைகமிஷனரின் அனுமதியில்லாமல் இந்தியாவில் நுழைய முடியாது. இந்தச் சட்டம் இலங்கையிலிருக்கும் இந்திய வம்சாவளியினர்களை முற்றிலும் இலங்கையின் பொறுப்பாக்குவதோடு அவர்களை இந்தியாவுக்கு நாடு கடத்த முடியாதபடியும், இந்தியாவுக்குப் போனால் இலங்கைக்குத் திரும்பக் கூடாதென்று தடுக்க முடியாதபடியும் செய்கிறது. நாடற்றவர்களைப் பட்டினி போட்டு வதைத்து இந்தியப் பிரஜைகளாகும்படி இலங்கை நிர்ப்பந்திக்குமானால் இப்படி நிர்ப்பந்திக்கப் படுவோரை இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்வதில்லையென்று டில்லி அரசாங்கம் தீர்மானித் திருக்கிறது. இம்மட்டல்ல! தற்சமயம் இந்தியா பாஸ் போர்ட் வைத்திருப்பவர்களிலும் கூட, இந்தியப் பிரஜையென்று சொல்லிப் பெயர் பதிவு செய்து கொண்டவர்களைத் தவிர மற்றவர்களை இந்தியாவில் இறங்க அனுமதிப்பதில்லையென்று டில்லி அரசாங்கம் தீர்மானித்து இலங்கையிலுள்ள ஹைகமிஷனர் தேசாய்க்குப் புதிய உத்தரவுகளை அனுப்பி வைத்திருக்கிறது.

இலங்கையில் பெருந் தொகைகளை முதலீடு செய்துள்ளவர்களை அவர்களது வாச பர்மிட்டும் விஸாவும் காலாவதியாகி விட்டதென்பதற்காக வழக்குப் போட்டு நாடு கடத்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து விட்டால் இவர்களது முதலீடுகளின் கதி என்ன ஆவது! என்று கேட்ட பொழுது "இலங்கை நீதி மன்றங்களின் தீர்ப்புகள் இந்திய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த மாட்டாது. இந்தியாவின் அனுமதியைப் பெறாமல் இந்தியாவுக்கு யாரும் எவரையும் நாடுகடத்த முடியாது. முதலீடு செய்துள்ள இந்தியர்களை இலங்கை நாடு கடத்த முற்பட்டால் அந்த முதலீடுகளைப் பட்டுவாடாச் செய்யும் வரையில் தலையை கேட்போம்" என்று ஸ்ரீ தேசாய் கூறினார்.

நிற்க, இலங்கை ஜனநாயக காங்கிரஸின் காரியக் கமிட்டி சென்ற ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் கூடிப் பத்துலட்ச ரூபாய் போராட்ட நிதி திரட்டத் தீர்மானித்திருக்கிறது. பிரஜா உரிமை மனுக்களை யெல்லாம் வாபஸ் பெற்று உடன் போராட்டத் தீயில் குதிக்க வேண்டுமென்று பல அங்கத்தினர்கள் துடித்தார்கள். இதன் விளைவுகளை மீண்டும் நன்கு பரிசீலனை செய்யுமாறு அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் உப கமிட்டியைக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இலங்கையிலிருக்கும் இதர தொழிலாளர் யூனியன்களையும் அரசியல் கட்சிகளையும் சந்தித்து இந்தியர் உரிமைப் போராட்டத்துக்கு ஒரு ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தும் விஷயத்தையும் மீண்டும் தொடர்ந்து பரிசீலிப்ப தென்று காரியக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது. இவ்வித நெருக்கடியான சூழ் நிலையில் தலைவர் ஸ்ரீ தொண்டமான் காலை ஜினிவாவுக்குச் செல்ல வேண்டியதாகி விட்டது. ஜினிவாவில் ஜூன் 2ம் தேதி ஆரம்பமாகும் சர்வதேச தொழில் ஸ்தாபன மகாநாட்டுக்கு இலங்கையிலுள்ள பெரிய தொழிலாளர் யூனியனின் தலைவர் என்ற முறையில் இலங்கைத் தொழிலாளர்களின் பிரதிநிதியாக ஸ்ரீ தொண்டமானை அரசாங்கம் நியமித்து அனுப்புகிறது. ஜூலை முதல் வாரத்தில்தான் அவர் இலங்கை திரும்புகிறார் அவர் இல்லாவிட்டாலும் காரியக் கமிட்டி கூடித் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலா மென்றும் அவசரமானால் எந்த நிமிடமும் ஸ்ரீ தொண்டமான் இலங்கைக்குத் திரும்பி விடுவாரென்றும் கூறப்படுகிறது. நெருக்கடியான சமயத்தில் காங்கிரஸ் 'வழ வழா' வென்று அசமந்தமா யிருப்பதாகச் சில வட்டாரங்கள் கருதிக் கவலைப்படுகின்றன.

இந்த நிலைமையில் இந்தியர் உரிமைப் போராட்டத்தை அரசியல் போராட்டமா யில்லாமல் சகல வகுப்பு தொழிலாளர் போராட்டமாக மாற்றிப் புதிய உருவில் நடத்தத் தீவிர முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்தியர்களை விரட்டினால் அவர்கள் செய்து வரும் வேலைகள் சிங்களவர்களுக்குக் கிடைக்குமென்று சொல்லித் தொழிலாளர்களுக்கு இடையில் பிந்திரபேதம் செய்யச் சந்தர்ப்பவாதிகளுக்கு இடம் வைக்காமல் சகல வகுப்புத் தொழிலாளருமடங்கிய ஒரு மத்திய தொழிலாளர் யூனியனைப் பொதுவாக நிறுவவும், அதன் மூலம் வகுப்பு ரீதியில் அல்லாமல் வர்க்க ரீதியில் இந்தியத் தொழிலாளரின் உரிமைப் போராட்டத்தை நடத்தவும் முயற்சிகள் நடந்து வருகின்றன. இதற்கிடையில் இங்குள்ள நிலைமையை இந்திய அரசாங்கத்துக்கு நேரில் எடுத்துரைக்க ஹைகமிஷனர் ஸ்ரீ தேசாய் ஜூன் 2ம் தேதி புதன் கிழமை புது டில்லிக்குப் போகிறார். — ரஜனி



மழவராயர் மக்கள்

கி. துளசி ஜெயா

கந்தசாமி மழவராயர் பரம்பரைப் பணக்காரர். பெரிய நிலப் பிரபு. முருகன் கிருபையால் முன்னுக்கு வந்த குடும்பம். ஒரு சமயம் அந்த வட்டாரத்தில் பெரும் பஞ்சம் வந்தது. மக்கள் வறுமை தாங்காது கஷ்டப்பட்டனர். கந்தசாமி மழவராயரின் தந்தையார் பஞ்சத்தில் அடிபடும் மக்கள் துயர் நீக்கக் கிணறு வெட்டினார். கிணறு வெட்டும்போது முருகன் விக்கிரகமும் பெரிய புதையலும் கிடைத்தன. அந்தப் பொருளைக் கொண்டே முருகனுக்குக் கோயில் கட்டித் தாமே அந்தக் கடவுளுக்குப் பூஜை செய்து வந்தார். அதன் பிறகு அவர் குடும்பத்தில் செல்வம் பெருகியது. செல்வாக்கு வளர்ந்தது. தம்முடைய சந்ததியாரையும் முருகனுக்குப் பூஜை செய்யும்படி நியமித்திருந்தார். தந்தையின் கட்டளைப்படி கந்தசாமி மழவராயரும் முருகனுக்குப் பக்தி சிரத்தையுடன் பூஜை செய்து வந்தார். அதனால் அவரை அவ்வூர் வாசிகள் "கந்தன் பட்டி பூசாரி" என்று கனிவுடன் அழைத்து வந்தார்கள்.

கந்தசாமி மழவராயருக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்தனர். இவர்களை நல்ல முறையில் வளர்க்க மிகவும் கஷ்டப்பட்டு வந்தார் மழவராயர். 'மூத்தவன் சந்திரன். அவன் தந்தையைப் போன்ற பெருங் குண முடையவன். பாரிஸ்டர் பட்டம் பெற்றவன். நல்லது கெட்டது அறிந்தவன். திடச்சித்தம் படைத்தவன். இனிமையான சுபாவம் உள்ளவன். அவன் மனைவி பார்வதி அவனுக்கு ஏற்ற உத்தமப் பெண்மணி.

இரண்டாவது மகன் வேலன் சந்திரனுக்கு நேர் மாறானவன். சந்திரனிடம் எந்த எந்த நல்ல குணமிருந்ததோ அதற்கு மாறாக எல்லாவித கெட்ட குணங்களும் இருந்தன. சென்னை நகரில் இருந்து கல்லூரியில் படிக்கும்போதே அவன் தவறான வழிகளில் நடக்க ஆரம்பித்து விட்டான். மழவராயர் கண்ணில் பலமுறை மண்ணைத் தூவிப் பணத்தை விரயமாக்கியிருக்கிறான். மொத்தத்தில் ஒழுக்கக் குறைவால் உடல் நலத்தையே கூடக் கெடுத்துக் கொண்டான் என்று கூடச் சொல்லலாம். அவனை எப்படியும் நல்வழிப்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் பாடு பட்டான் சந்திரன். அவன் எடுத்துக் கொண்ட சிரமம் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயிற்று. சந்திரன் மீது வேலனுக்கு மேலும் மேலும் வெறுப்புத்தான் ஏற்பட்டதே ஒழிய அன்பு உண்டாகவில்லை.

மகள் விஜயாள் பி. ஏ. பட்டம் பெற்றவள். கடைந் தெடுத்த தங்கப் பதுமை போல் இருப்பாள். உயர்ந்த குணம் படைத்தவள். படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும் பண்பு கெடாமல் இருந்தாள். நவநாகரிகம் என்ற அநாகரிகத்துக்கு அடிமைப் படாமல் தமிழ் மகளாகவே இருந்தாள்.

வேலனின் ஒழுக்கக் குறைவால் நாளடைவில் அவன் உடல் நலம் குன்ற ஆரம்பித்தது. கந்தசாமி மழவராயரின் பெயர் குறைய ஆரம்பித்தது. இதைக் கேட்டு அண்ணனும் தங்கையும் வருத்தப் பட்டுக் கொண்டிருந்தனர். கந்தசாமி மழவராயர் மனம் உடைந்து போனார். வேலனின் மனப்போக்கை உணர்ந்த மழவராயர் தமக்குப் பின் குடும்பத்தில் தகராறு ஏற்படாமல் இருக்க வேண்டுமே என்று கவலைப் பட்டார். வேலனால் சொத்து விரயம் ஆவதை எண்ணி அதற்கு ஒரு முடிவு கட்ட விரும்பினார்.

சகோதரர்களுக்குள் சண்டை சச்சரவு இல்லாமல் சொத்துக்களைப் பிரித்து வைத்தார். ஆளுக்கு ஒரு அழகான பங்களா. நூறு ஏக்கரா நிலம். குடும்பத்துக்குக் கௌரவம் கொடுத்து வந்த கோயிலை அண்ணன் ஒரு வருஷம் தம்பி ஒரு வருஷமாகப் பராமரிக்க வேண்டியது. எந்தச் சமயத்திலும் முருகன் பூஜை பிறரைக் கொண்டு செய்விக்கக் கூடாது. கோயில் சொத்திலிருந்து

கிடைக்கும் பதினைந்தாயிரம் ரூபாயையும் கந்தசாமி கோவிலுக்குச் செய்ய வேண்டியதைச் செய்து விட்டுத் தாங்களும் அடையலாம் என்று எழுதி வைத்தார். காலம் வேகமாக ஓடியது. கந்தன்பட்டி கந்தசாமி மழவராயரும் நிம்மதியாகக் கண்ணை மூடினார்.

வேலன் தம் குடும்பத்தோடு பெட்டிப் பாம்பு போல் பேசாமலிருந்தான். ஆனால் அண்ணனுடைய கீர்த்தி நாளுக்கு நாள் உயர்வதைக் கண்ட அவன் உள்ளம் வேக ஆரம்பித்தது.

ஊரில் பணக்காரக் குடும்பத்தில் அண்ணனும் தம்பியும் ஒற்றுமையாக வாழ்வதைப் பார்த்துக் கொண்டிருக்கச் சிலருக்கு மனம் பொறுக்கவில்லை. அவர்கள் வேலனுக்கும் சந்திரனுக்கும் விரோத மூட்டும் திருப்பணியில் ஈடுபட்டனர். அந்தத் தீயர்கள் சொல்லுவதெல்லாம் நல்லதற்கு அல்ல என்பதை எண்ணிப் பார்க்கும் பகுத்தறிவு வேலனுக்கு இல்லை. அவனிடம் இருக்கும் கீழான உணர்ச்சிக்குத் தூபம் போடும் கும்பல் அவனைச் சூழ்ந்து வளர்ந்தது. அவனுக்கும் அவன் தமையனுக்கும் இடையில் விரோதம் ஏற்படும்படி பலப்பல சொல்லிக்கொண்டு வந்தனர். வேலன் தன் தமையனைத் தனக்கு எதிரியாக நினைக்கும் அளவுக்கு அவன் மனத்தை மாற்றி விட்டனர். அப்படிச் செய்தால்தானே அவர்களுக்கு வேலனிடம் இருந்து பணம் கிடைக்கும். அவர்களும் வாழ்ந்து வரலாம். கடவுளே! இது போன்ற அண்டிக் கெடுக்கும் நீசக் கும்பல்கள் இந்த நாட்டை விட்டு என்று தொலையுமோ!

** ** **

சந்திரன் படுக்கும் மாடியறைக்குக் கீழே தினம் ஒரு ஆள் வந்து எட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தான். இதை யாரும் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. ஆனால் சந்திரனின் மனைவி பார்வதிக்கு மட்டும் சற்று பயமாகவேயிருந்தது.

"நம் வீட்டுப் பக்கம் தினம் ஒரு முரட்டு ஆள் வந்து கொண்டிருக்கிறான். எனக்கு என்னமோ பயமாகவே இருக்கிறது" என்றாள் பார்வதி.

"பார்வதி! உன் பயம் இன்னும் போகவில்லையா! வேலன் என்னை என்ன செய்து விடுவான்!" என்றான் சந்திரன் கோபமாக.

"எனக்கு என்னமோ சின்னவரை நினைத்தாலே பயமாயிருக்கிறது" என்றாள் பார்வதி.

"பார்வதி! வாழ்க்கையில் பிறருக்கு இடையூறு செய்யக் கனவிலும் நினையாத நமக்கு யாரால் இடையூறு நேரப் போகிறது!" என்றான்.

இந்தச் சமயத்தில் "ஐயோ! யாரோ கொலைகாரன்!" என்று கூக்குரலிட்டாள் பார்வதி.

துள்ளி எழுந்தான் சந்திரன். 'டுமீல்' என்ற சத்தம் காதைத் துளைத்தது. அவன் கழுத்துக்கு வைத்த குறி தவறி விட்டது. சுவரைத் துளைத்துக் கொண்டு சென்றது துப்பாக்கி ரவைகள்.

பார்வதி மூர்ச்சையாகிக் கிடந்தாள். அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்து அவள் மூர்ச்சையைப் போக்கினான் சந்திரன். கனவிலிருந்து விழித்து எழுந்தவள் போல் 'திரு திரு' வென்று விழித்தாள்; பயங்கரமாக அலறினாள். அவளைத் தேற்றி ஆறுதல் கூறுவதற்குள் சந்திரனுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது!

இந்தச் சதிகார வேலைக்கு மூலகாரணம் வேலன் தான் என்பதை யாவரும் அறிந்து கொண்டனர். சந்திரனுக்குத் தன்னையுமறியாத ஒரு அருவருப்பு வேலன்மேல் ஏற்பட்டு விட்டது. இருவருக்கும் ஏழாம் பொருத்தமாகி விட்டது. ஊர் இரண்டாகப் பிளவு பட்டது. நல்லவர்கள் சந்திரன் பக்கம். ஓநாய்கள் வேலன் பக்கம். இரண்டு பக்கமும் சேராமல் முருகக் கடவுள் இதை யெல்லாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"எனக்கு இந்த லட்சம் ஆஸ்தி. அண்ணனை ஒடுக்க இரண்டு லட்சம் ஒதுக்கி விட்டேன். அவனால் ஆனதை அவன் பார்க்கட்டும். எனக்கிருப்பது ஒரே ஒரு பெண் குழந்தைதான். எவனுக்காவது கட்டிக் கொடுக்கிறேன், என்னை யார்கேட்பது! கோயில் பூஜைக்கு என் முறை வரும்போது எவனிடமாவது மணியைக் கொடுத்து அடிக்கச் சொல்லுகிறேன்......" என்றான் வேலன். இதைக்கேட்ட நல்லவர்கள் நடுங்கினர்.



கிராமத்தில் நடக்கும் எல்லா அட்டூழியங்களுக்கும் தலைமை தாங்கி நடத்தி வந்தான் வேலன். கள்ளச் சாராயம் காய்ச்சினார்கள் சில வெறியர்கள். அதற்கு வேலன் உதவி செய்தான். ஊரில் திருட்டுச் சாராயம் காய்ச்சப்படுவதைக் கேள்விப்பட்டுக் கண்டு பிடிக்க வந்த போலீஸ்காரரை வேலனும் அவனுடைய ஆட்களும் அடித்துக் கொடுமைப் படுத்தினார்கள். போலீஸ்காரர் அவர்களிடமிருந்து எப்படியோ தப்பிக்கொண்டு சென்று விட்டார். போலீஸ்காரர் தப்பிச் சென்றதை அவர்கள் குடி வெறியில் உணரவில்லை.

அன்று மாலை வேலனின் வீடு போலீஸாரால் வளைக்கப் பட்டது. சோதனை போட்டார்கள். கள்ளச் சாராயம், கள்ளத் துப்பாக்கி, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சட்டத்துக்கு முரணான எல்லா வஸ்துக்களும் இருந்தன. முதல் நாள் தன்னிடம் அடி வாங்கிய அதே போலீஸ்காரர் தனக்கு விலங்கு மாட்டுவதைக் கண்ட வேலன் தலை குனிந்து நின்றான்.

சிறையில் வேலன் கம்பிகளை எண்ணிக்கொண்டிருந்தான். ஜாமீனுக்குச் சென்ற அவனுடைய ஆட்களையும் போலீஸ்காரர்கள் 'கேடி' ஜாபிதாவில் சேர்த்துச் சிறையில் தள்ளினர்.

இவைகளைக் கேட்ட சந்திரன் துடிதுடித்துப் போனான். சகோதர உணர்ச்சி பீறிக்கொண்டு எழுந்தது. அன்பு பொங்கித் ததும்பியது. "தம்பி கெட்ட எண்ணம் படைத்தவன்தான். இருந்தாலும் நீதான் அவனுக்கு ஆதரவு கொடுக்க வேணும்" என்ற தந்தையின் வாக்கு அவன் காதில் 'கணீர்' என்று ஒலித்தது. ஓட்டமாக ஓடினான் சிறைக்கு. தம்பியைச் சந்தித்தான் சிறை

யில் அண்ணனின் பாசத்தை உணர்ந்தவனும்த் தம்பி தலையில் துணியைப் போட்டுக்கொண்டு புலம்பினான். வேலனைத் தேற்றினான் சந்திரன்.

தனது செல்வாக்கை உபயோகித்தான் சந்திரன். வேலனை ஜாமீனில் வெளியே அழைத்து வந்தான். தம்பி நிரபராதி என்பதை மனச்சாட்சிக்கு விரோதமாக வாதாடினான். அதில் வெற்றியும் கண்டார் பாரிஸ்டர் சந்திரன்.

மனிதனாக வெளியே வந்த வேலன் அண்ணன் செய்த நன்றியை மறந்தான். மீண்டும் மிருகமானான். அவன் கெட்ட குணம் முன் எப்பொழுதையும் விடப் பயங்கரமாக விசுவரூபம் எடுத்தது. "எல்லாம் என்னுடைய செல்வாக்கினால் தான் வெளியே வந்தேன். அண்ணன் என்ன செய்தான்!" என்று எங்கும் பறைசாற்றினான். இதையறிந்த சந்திரன் தனக்கு ஒரு தம்பியுண்டு என்பதை மறந்தே விட்டான். இருந்தாலும் வேலன் விட்டால்தானே!

சின்ன அண்ணனின் கொடூரங்களையெல்லாம் பார்த்துச் சகிக்க முடியாதவளாய் மனமொடிந்து கிடந்தாள் விஜயாள்.

நல்ல குணம் படைத்த விஜயாளின் கல்யாணத்தை நடக்க முடியாமல் செய்து வந்தான் வேலன். தன் இஷ்டத்துக்கு விரோதமாகக் கல்யாணம் நடந்தால் கலகம் செய்வேன் என்று பயமுறுத்தினான். சந்திரன் எப்படியும் வேலனைச் சமாதானப்படுத்தித் தங்கை விஜயாள் விரும்பும் விசுவநாதனுக்கே மணம் முடித்து விடலாம் என்று நம்பிக் காத்திருந்தான்.

விஜயாளைத் தனது மைத்துனன் ஒருவனுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற பிடிவாதம் வேலனுக்கு. ஏனென்றால் அவள் நல்ல இடத்துக்குப் போகக் கூடாது என்ற நோக்கம்தான். சந்திரனுக்கோ தன் தங்கையைத் திருச்சியில் வாழும் நல்லூர் பண்ணையார் மகன் விசுவநாதனுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஆசை. விஜயாளின் அந்தரங்க ஆசை அதுவேதான்.

விசுவநாதன் இண்டரோடு படிப்பை முடித்து விட்டான். சர்வ கலா சாலை அவனுக்குப் பட்டத்தைச் சூட்டிக் கொடுக்கவில்லையே தவிர அவன் கல்லூரியில் உள்ளவர்கள் அறியாததையெல்லாம் அறிந்து பத்துப் பேருக்கு வழிகாட்டி வந்தான். பார்ப்பதற்குச் சற்று விறைப்பாக இருப்பது போல் தோன்றுவானே யொழிய இனிமையான குணம் படைத்தவன்; கட்டழகன்.

விசுவநாதனும் விஜயாளும் தூய்மையான அன்போடு பழகினார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து உட்கார்ந்து பேசினால் வெறும் அக்கப்போரைப் பற்றிப் பேச மாட்டார்கள். நாடகத்திலும், சினிமாவிலும், கதைகளிலும் வரும் காதலர்கள் பேசும் வீண்பேச்சு பேச மாட்டார்கள். ஆனால் ஒருவரை ஒருவர் அன்போடு உண்மையில் நேசித்தார்கள்.



விசுவநாதன் எப்பொழுதாவது கந்தன்பட்டியில் உள்ள சந்திரன் வீட்டுக்கு வரும்பொழுது விஜயாளுக்குத் தலைகால் புரியாது. அவனுக்கு ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் தானே செய்வதில் அவளுக்கு அளவுகடந்த பிரியம். விசுவநாதனுக்குச் சாப்பாடு போடுவதில் அவளுக்கு ஒரு திருப்தி; அவனுக்குத் தாம்பூலம் கொண்டு போய் வைப்பதில் ஒரு ஆனந்தம். அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும், அவளுக்குத்தான் ஏதோ இன்ப உலகில் இருப்பது போல மகிழ்வாள்.

"விஜயா! உன் சின்ன அண்ணன் உனக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கிறாராமே! பிடித்திருக்கா!" என்றான் விசுவநாதன்.

"ஆமாம். தங்கையின் வாழ்வுக்கு உலைவைக்கப் பாடுபடும் உலகத்திலில்லாத அதிசய அண்ணன். நாம் என்ன செய்ய முடியும் அதற்கு......" என்று அடக்கமாகப் பதிலளித்தாள் விஜயாள்.

அடுத்த கணம் அவள் தூய்மையான இளம் மனத்தைக் கறைப்படுத்தி விட்டோமோ என்று எண்ணிப் பேச்சை மாற்றி விட்டான் விசுவநாதன்.

விஜயாள் அன்றைய தினம் கறுப்பு 'சோளி' அணிந்து, வெள்ளைப் புடவை உடுத்திக் கொண்டு விசுவநாதன் முன் கலைவாணியைப்போல் தோற்றமளித்தாள். விசுவநாதன் அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சிரித்தான்.

"என்ன சிரிக்கிறீர்கள்!" என்று கேட்டாள்.

"இல்லை! இயக்கம் புதிதாயிருக்கிறதே என்று பார்த்தேன். பெண்கள் கறுப்பு அணிவது எனக்கென்னமோ..." என்ற வார்த்தைகளை முடிக்காமலே 'கல கல' வென்று சிரித்தான் விசுவநாதன். அதிலிருந்து அவள் அந்த கறுப்பு ஆடை உடுத்துவதையே விட்டு விட்டாள். இப்படி எத்தனையோ சம்பவங்கள் விசுவநாதன் மேல் விஜயாள் வைத்திருந்த அன்பை வெளிக்காட்ட நடந்திருக்கிறது. அந்தச் சம்பவங்களையெல்லாம் இங்கு வர்ணிக்க வேண்டிய அவசியமே இல்லையல்லவா!

விசுவநாதன் திருச்சியிலும் விஜயாள் கந்தன்பட்டியிலும் இருக்கும் பொழுது இவர்களுக்குள் கடிதம் பறக்கும். ஒரு சமயம் விசுவநாதன் தன் அருகிலேயே இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்குமென்பதை நினைத்தாள் விஜயாள். அடுத்த கணம் அவனை வரும்படி கெஞ்சிக் கூத்தாடி ஒரு கடிதம் எழுதினாள்.

ஆனால் விசுவநாதனுக்குப் பல வேலைகள். விஜயாளின் கடிதத்தின்படி கந்தன்பட்டிக்குப் போக முடியவில்லை. பெண்களுக்கு இயற்கையாக உள்ள பொய்க் கோபம் விஜயாளைப் பிடித்துக் கொண்டது. விசுவநாதனுக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்தி விட்டாள். தன் வேலைகள் முடிந்ததும் விசுவநாதன் கந்தன் பட்டிக்குப் போனான். பேச்சு வாக்கில் விஜயாளிடம் கடிதத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தான்.

"விஜயா! உனக்குக் கடிதம் எழுத முடியா

தென்றால், எழுத நேரமில்லை—பிரியமில்லை என்று எழுதி விடுவதுதானே! நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று நினைத்துக் கொண்டு போகிறேன். அதற்காகக் கடிதமே எழுதாமல் என்னைத் திகைக்க வைக்க வேண்டியதில்லையே..." என்ற விசுவநாதனின் விசனமான வார்த்தைகள் விஜயாவை வேதனைப்படுத்தின.

விஜயாவின் கண்கள் கோவைப் பழமாக மாறிற்று. கன்னங்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. "ஏதோ தவறுதலாகச் செய்து விட்டேன். என் வீட்டில்தான் அன்புக்கு ஏங்கிக் கிடக்கின்றேனென்றால் என்னிடம் அன்பு காட்டும் நீங்களும் இப்படிப் பேசினால்..." என்றதும் அவள் கண்களில் நீர் துளித்தது.

விசுவநாதனின் மனம் கருங்கிற்று. அவனுக்கு ஏன் கேட்டோமென்றாகி விட்டது. அந்தக் கணமே அவனுடைய அன்பும் அவளிடம் ஒன்றாகக் கலந்து விட்டது போல் தோன்றியது.

"விஜயா!"

"என்னங்க..."

"உன்னிடம் ஒன்று சொல்லலாமா..."

"சொல்லலாம்!"

"'அன்புதான் உயிர்' என்ற வள்ளுவனும், 'உண்மைதான் கடவுள்' என்ற காந்தியும், 'சத்தியம்தான் காட்டின் பண்பு' என்று போற்றிய மகான்களும் இறந்துவிடவில்லை. அவர்கள் உன்னிடம் குடியிருக்கிறார்கள். ஆக உன்னைக் கைப்பிடிக்கும் கணவன் ஒரு ராஜ ராஜேந்திரனாகத்தானிருப்பான்!" என்ற பண்ணையார் மகன் விசுவநாதனின் பேச்சில், தர்மத்தின் ஒலி கேட்டது.

"பேஷ்! பேஷ்! நாடக வர்ணனையாகவல்லவா இருக்கிறது" என்றாள் விஜயாள். மறுகணம் அவள் முகம் வாட்டமிட்டது.

"என்ன விஜயா!"

"ஒன்றுமில்லை. அந்த ராஜராஜன் என் இதயத்தில் குடியிருக்கிறவராகவே யிருந்தால் நான் கட்டிய இன்பக் கோட்டை பூர்த்தியாகும். அது நிறைவேறுமா!" என்ற கேள்வி விசுவநாதனை ஒருகணம் திணற அடித்து விட்டது.

விசுவநாதனுக்கு யாரைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறாளென்ற சந்தேகம் வந்து விட்டது. தன்னையாயிருக்குமோ! சே! சே! வேறு யாராவதாயிருந்தால்! இந்தப் பெண் ஜென்மமே இப்படித்தான். மனத்தில் பாரத்தைச் சுமந்துக் கொண்டு 'விக்கி விக்கி' அழுவார்களே யொழிய, துணிந்து பேசிப் பாரத்தைக் கழிக்க மாட்டார்கள்! இவள் பேச்சு மனத்தை அறுக்கும் பேச்சாக வல்லவா யிருக்கிறது! இப்படி விசுவநாதனின் மனத்தில் எத்தனையோ விதமான எண்ண அலைகள் மோதிப் புரண்டன.

"விஜயா!" என்ற ஒரு பயங்கரக் குரலைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டனர்.

விஜயாவின் சிறிய தமையன் வேலன் அங்கு வந்து நின்று கொண்டிருந்தான். அவனுடைய பார்வையும், பேச்சும் விசுவநாதனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே ஒரு கணமும் தாமதிக்காமல் அங்கிருந்து கிளம்பி விட்டான்.

** ** **

இந்த ஆண்டு சின்னவன் வேலனின் முறை. வேலனுக்குக் கந்தசாமி கோயிலின் பணத்தை அதற்க்க செலவு செய்ய இஷ்டமில்லை. அத்துடன் கோயிலுக்கும் தானேபோய்ப் பூஜை செய்வது கௌரவக் குறைவாகக் கருதினான். பல தலைமுறைகளாக ஒழுங்காக நடந்து வந்த கோயில் பூஜைத் திருப்பணியில் மாசு ஏற்படுத்திவிட்டான்.



முருகனுக்குப் பூஜை செய்ய வேறு கூலி ஆளை நியமித்து விட்டான். இது அந்தக் கோயில்கட்டிய நாளில் இருந்து ஏற்படாத ஒரு பெரிய மாறுதல். இதைப் பார்த்து ஊரில் உள்ள மக்கள் வேலனை மேலும் வெறுத்தனர்; அவனைப் பார்க்கவும் கூசினர். சந்திரனின் புகழ் மேலும் உயர்ந்தது.

அன்று கந்தன்பட்டி முருகனின் பூஜையை மாலைக் கட்டி என்பவன் செய்து கொண்டிருந்தான். இதையறிந்து விசுவநாதன் மிகவும் வருத்தப்பட்டான். "ஏன் சந்திரா! நீயாவது போய்ப் பூஜை செய்யேன்!" என்றான்.

"அட, நீ ஒண்ணு! இந்த வருஷம் வேலனின் முறையாயிற்றே!" என்றான் சந்திரன்.

"ஆமாம்! உங்கள் பரம்பரையில் நீங்கள் தானே முருகனுக்குப் பூஜை செய்ய வேண்டுமென்றிருக்கு! அப்படியிருக்க மற்றொரு மூன்று மனிதன் செய்ய என்னப்பா நியாயம்! வேலனுக்கு முடியா விட்டால் பூஜை செய்வதையாவது உன்னிடம் கொடுப்பதற்கென்ன! இந்த வருஷம் கோயில் வருமானத்தை வேண்டுமானால் அவன் அடைந்து விட்டுப் போகட்டுமே!"

"விசு! நேர்மை அழிந்தது கிடையாது. சத்தியம் என்றாவது ஒருநாள் ஜெயித்தே தீரும். தர்மத்துக்குப் போராடுவோம்......" என்றான் சந்திரன்.

"சந்திரா! அப்படியென்றால் போராடத் துணிந்து விட்டாயா!" என்றான் விசுவநாதன்.

"ஆம்! உறுதியோடு!" என்றான் சந்திரன்.

** ** **

தை மாதம் பிறந்தது. தை மாதம் பிறந்து விட்டால் கந்தன்பட்டி முருகன் கோயிலில் மழவராயர் மக்கள் உற்சாகமாகவிழா நடத்துவார்கள். தினம் சுவாமி வீதி வலம் வருவார். பெரிய நாதஸ்வர வித்வான்கள் வருவார்கள்; சங்கீத வித்வான்கள் வருவார்கள்; சத் காலட்சேப உபன்யாசங்கள் நடைபெறும்; நாட்டியங்கள், பொம்மலாட்டங்கள் இப்படிப் பலப் பல கேளிக்கைகள் நடைபெறும். இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல தைப் பூசத்தன்று தேர் திருவிழா நடக்கும்.

அன்றையதினம் மழவராயர் குடும்பத்தினரே எல்லாக் காரியங்களையும் செய்வார்கள். ஆனால் இந்த வருடம் பூச உற்சவம் அவ்வளவு சிறப்பாக இல்லை. ஏதோ ஒப்புக்கு நடந்து வந்தது.

தைப் பூசத் தேர் ஓட்டத் திருவிழாவில் வேலன் கலந்து கொள்ளவில்லை. இதை இப்படியே விடுவதற்குச் சந்திரன் இஷ்டப்படவில்லை. ஆகவே, அவனும் விசுவநாதனும் திருவிழாவில் கலந்து கொள்ளப் புறப்பட்டு விட்டனர்.

திருவிழாவில் கலந்து கொள்ள ஊர் மக்கள் ஜே, ஜே என்று கூடியிருந்தனர். வேலன் வீட்டிலிருந்தபடியே தேரை இழுக்கச் சொல்லி விட்டு மாடியிலிருந்தபடியே திருவிழா வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சந்திரனும் விசுவநாதனும் தேரருகே சென்றதும் அவ்வளவு கூட்டமும் விலகிக் கொடுத்துப் பலத்த கரகோஷம் செய்தது. இந்த ஆரவாரத்தையெல்லாம் காதால் கேட்டும் ஊர்ப் பொது மக்கள் சந்திரனுக்கு அளிக்கும் எல்லையற்ற மரியாதையைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த வேலனுக்கு உடலெல்லாம் பற்றி எரிந்தது.

சந்திரன் சுவாமிக்கு அருகே சென்று நின்றான். ஆராதனை ஆரம்பிக்க மாலைக்கட்டிக்கு யோசனை. மணி அடிக்க நடுக்கம். அந்த நடுக்கத்திலேயே மணியை இன்னும் அதிகமாக 'கட கட' வென்று அடித்துக் கொண்டிருந்தானே ஒழிய ஆரத்தியெடுக்கவே மறந்து விட்டான்.

சந்திரன் கற்பூரத்தை யெடுத்துக் கொளுத்தினான். ஆரத்தியைக் காட்டுவதற்கு முன், மணியை வாங்குவதற்கு மாலைக்கட்டியிடம் கையை நீட்டினான். அவனையும் அறியாமல் அவனிடம் மணியைக் கொடுத்து விட்டு மிக்க மரியாதையுடன் ஒதுங்கி விட்டான் மாலைக்கட்டி.

மணி ஒலித்தது. மக்களின் "ஹரா, ஹரா!" என்ற பக்திச் சொற்கள் வானைத் தொட்டு மக்களின் செவிகளில் எதிரொலித்தன. ஆண்டு. காத்து, கருணை புரியும் அந்த இன்பக் கடவுளைத் தன்னையும் மறந்து அஞ்சலி செய்தனர் மக்கள். வழக்கம் போல் தேர் ஓட ஆரம்பித்தது.

வேலன் கூண்டில் அகப்பட்ட வேங்கை போல் அங்குமிங்கும் நடை போட்டுக் கொண்டிருந்தான். தன்னுடைய விழாவில் அண்ணன் தலையிட்டது அவனுக்குப் பொறுக்கவில்லை. அண்ணன் கையில் மணியைக் கொடுத்த மாலைக்கட்டியைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டியது என்று தீர்மானித்தான்.

அடுத்த நாளே மாலைக்கட்டியை அங்கிருந்து அடித்து விரட்டி விட்டான். இத்தனைக்கும் மாலைக்கட்டி அவன் மைத்துனன்; ஏழை; ஒரு பாவமும் அறியாதவன். உண்மைக்குப் பணிந்தான் என்பதற்காக அடித்து விரட்டப்பட்டான். இந்தமாதிரி அகம்பாவத்தைப் பார்த்துத்தானே மக்கள் பணக்காரர்களைக் கரித்துக் கொட்டுகிறார்கள்! வேலனைப் போன்ற பணம் படைத்தவர்களைப் பார்க்கும்போது அவர்கள்மீது வெறுப்புத் தோன்றுவதும் நியாயம்தானே!

வேலனின் அட்டூழியம் வர வர அதிகமாகி விட்டது. கிராமத்தில் பெண்கள் கூடத் தனியே செல்லப் பயந்தனர். கெடுத்துப் பிழைக்கும் கூட்டம் வேலனின் பணத்தில் வளர்ந்தது!

வேலனின் இந்த அட்டூழியங்களைக் கேட்கக் கேட்க 'இப்படியும் ஒரு மனிதன் இருக்க முடியுமா!' என்று சந்திரன் வேதனைப் பட்டான்.

எப்படியாவது தன் தமையனை ஒழித்து விட வேண்டுமென்று வேலன் கங்கணம் கட்டிக்கொண்டான். சந்திரனின் புகழைக் கேட்கக் கேட்க அவனுக்கு அறிவு மழுங்கி விட்டது. எப்படியாவது அவனை நீதிமன்றத்தில் ஏற்ற வேண்டும் என்று தீர்மானித்தான். தன்னுடைய ஆட்களில் சிலரைச் சந்திரன் வீட்டுக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் செய்யும்படி செய்தான். அவர்கள் செய்த ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க முயன்ற சந்திரன் மீது தன் ஆட்களைத் தாக்கியதாகப் போலீஸுக்குப் புகார் செய்து விட்டான்.

** ** **

வழக்கம்போல் சந்திரன் தன் காரியங்களை முடித்துவிட்டு உட்கார்ந்திருந்தான். அப்பொழுது தான் வந்திருந்த நல்லூர் பண்ணையார் மகன் விசுவநாதன் அவனிடம் பேசிக் கொண்டிருந்தான். விசுவநாதனை அகமும் முகமும் மலர வரவேற்று உபசரித்தாள் விஜயாள்.

வாசலில் கார் சத்தம் கேட்டது. சில விநாடிக்கெல்லாம் "டக்! டக்!" என்ற பூட்ஸ் சத்தம் கேட்டது. எல்லோரும் அதிர்ச்சியடைந்தனர், ஒரு போலீஸ் அதிகாரி உள்ளே வருவதைக் கண்டு.

"மிஸ்டர் சந்திரன் யார் ஸார் இங்கே!" என்றார் அதிகாரி வந்ததும் வராததுமாக.

"ஏன் நான்தான்!" என்றான் சந்திரன்.

"நீங்கள் சில ஆட்களுடன் உங்கள் சகோதரன் காரியஸ்தர் வீட்டுக்குப் போய் அவரைக் குறி பார்த்துச் சுட்டீர்களாம்! குறி தவறியதால் காரியஸ்தர் தப்பிக் கொண்டதாகவும் அதைக்

கேட்க வந்த அவர் ஆட்களை அடித்து விட்டதாகவும் உங்கள் மீது புகார் செய்யப்பட்டிருக்கிறது."

"ஆ! நான் என் சகோதரன் காரியஸ்தனை அவன் வீடு தேடிப் போய்க் கட்டேனு!"

"ஆமாம்! அதோடு மட்டுமல்ல! 'இதே கதி தான் உன் எஜமானனுக்கும்!' என்று சொல்லி விட்டும் வந்தீர்களாம்! அதற்குப் போதிய சாட்சிகளும் இருக்கின்றன" என்று சொல்லிச் சந்திரனைக் கைது செய்தார்.

இதைக் கேட்ட விஜயாள் மூர்ச்சை நிதானமாக விட்டாள். பார்வதி பயந்து விட்டாள். விசுவநாதன் வெலவெலத்துப் போய் விட்டான்.

போலீஸார் சந்திரனை மிகுந்த மரியாதையோடு அவருடைய காரிலேயே அழைத்துச் சென்றனர். இப்படி அவர்கள் மரியாதை காட்டியதைக் கேட்டு வேலன் மேலும் வேதனைப்பட்டான்.

மறுநாள் விசுவநாதன் சந்திரன் கோஷ்டியாரை ஜாமீனிலிருந்து வெளியே அழைத்து வந்தான். வெளியே வந்த சந்திரன் வேலனிடம் தனக்கு இதுவரையில் இருந்த எல்லா உறவையும் துறந்து எதுவும் செய்யத் துணிந்தவனாகக் காணப்பட்டான். இந்த அவமானத்தை மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான். வழக்கை ஒரு வாரத்துக்குத் தள்ளிப் போட்டிருந்தார்கள்.

** ** **

ஒரு நாள் மாலை. சந்திரன் அவன் மனைவி பார்வதி, சகோதரி விஜயாள், விசுவநாதன் முதலியவர்களுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான். அப்பொழுது சந்திரனுடைய குடும்ப டாக்டர் ராமு அங்கே வந்தார்.

"டாக்டர், வரவேணும்!"

"ஆத்திரத்தில் அறிவு மறைந்து விடுகிறது என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ள முடிகிறது சந்திரன்!" என்று சொல்லிக் கொண்டே வந்தார் டாக்டர் ராமு. அவரை வரவேற்றுத் தங்களுடன் அமரும்படி சொல்லி விட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். வேலனுக்கும் சந்திரனுக்கும் இந்த ஒரே இடத்தில்தான் ஒற்றுமை. அதாவது அவர்கள் இரு குடும்பத்துக்கும் ராமு தான் டாக்டர். காரணம் அவர் 'கைராசிக்காரர்.'

"சொல்ல மறந்து விட்டேனே! உங்கள் தம்பி காலையில் இருந்தாற் போலிருந்து மூர்ச்சையாகி விட்டார். அதிலிருந்து அவர் இருதயம் பலவீனமாகவே இருக்கிறது. பிழைத்ததே அரிதாய்ப் போயிற்று. உங்களுக்குத்தான் தெரியுமே இந்த 'தெராம்போஸிஸ்' என்ற நூதனமான இருதய நோய்!" என்றார் டாக்டர்.

"இந்த 'தெராம்போஸிஸ்' மிகவும் கொடிய நோயா!" என்றான் விசுவநாதன்.

"ஆமாம் ஸார், ஆமாம்" என்றார் டாக்டர்.

"அது இருக்கட்டும். வேலனுக்கு இப்பொழுது எப்படியிருக்கிறது!" என்றான் சந்திரன்.

"வேலன் இப்பொழுது சுகமாகத்தானிருக்கிறார். மனுஷர் கவலையினாலே பாதி பலவீனமாகி யிருக்கிறார். அதோடு உங்களுக்குச் செய்த துரோகத்தை நினைத்து நினைத்து மனிதன் வேதனையுடன் விம்முகிறார்!" என்றார் டாக்டர்.

"ஏன் டாக்டர்! இந்த 'தெராம்போஸிஸ்' என்ற வியாதி துரோகம் செய்தவர்களுக்குத்தான் வருமோ!" என்றான் விசுவநாதன்.

"அப்படியல்ல ஸார் அது! மனுஷன் என்றும் குற்றவாளியாகவே யிருந்து குற்றத்தையே நியாயமென்று சொல்லி உலகோர் கண்ணில் பொடி தூவிக் கொண்டிருக்க முடியுமா! என்றைக்காவது ஒரு நாள் அவர்கள் செய்த அநீதிக்கு எந்த விதத்திலாவது கஷ்டம் அனுபவித்துத்தானே தீர வேண்டும்" என்றார் டாக்டர். பிறகு, "வேலன் சொன்னதைச் சொல்ல வந்தவன் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறேன். 'ஒரு பாவமும் அறியாத அண்ணன் குடும்பத்துக்கு நான் செய்த வினை என்னையே சுட்டுப் பொசுக்குகிறது டாக்டர்! ஒன்று அண்ணனோடு ராஜியாகப் போக வேண்டும். அல்லது நான் செய்த குற்றத்தை நானே ஒப்புக் கொண்டு சிறைச்சாலையிலேயே மடிய வேண்டும்!' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் வேலன்!" என்றார் டாக்டர்.

"டாக்டர் அதெல்லாம் சுத்தப் பேத்தல்! அவனாவது குற்றத்தை உணரவாவது! உலகத்தில் சில ஜென்மங்களிருக்கிறது டாக்டர், அவைகளைத் திருத்தவே முடியாது. அவன் சும்மா பிதற்றுகிறான் டாக்டர், பிதற்றுகிறான்!" என்று வருத்தத்தோடு சொன்னான் சந்திரன்.

"ஸார்! மிஸ்டர் வேலனுக்கு வலி வந்து விட்டது!" என்று அவன் சிநேகிதர் ஒருவர் ஓடி வந்து கூறியதும் டாக்டர் "கர்லிங் ஹோமை" நோக்கி அவசரமாகச் சென்றார்.

வேலனின் படுக்கையருகே வக்கீலிருந்தார். அவன் மனைவி புடவைத் தலைப்பினாலே கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தாள்! 'நர்ஸ்' அவன் மூக்குக்கு முன் எதையோ பிடித்துச் சிகிச்சை செய்து கொண்டிருந்தாள்.

டாக்டர் கையைப் பிடித்துப் பார்த்தார். நாடி 'டக்! டக்!' என்று மெதுவாக அடித்துக் கொண்டிருந்தது. "என்ன, இதெல்லாம்!" என்று வக்கீலைக் கேட்டுக் கொண்டே, இதயத்



மே மீ 16உ அன்று தமிழ்நாடு முனிஸிபல் ஆரம்ப ஆசிரியர் மகாநாடு மாயூரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்புரை நிகழ்த்தி எல்லோரையும் மகிழ்வித்த ஆசிரியர் ஸ்ரீ சி. கோவிந்தசாமிப் பிள்ளை பேசுவதைப் படத்தில் காணலாம்.

துடிப்பைப் பார்க்கும் குழாயை எடுத்து அவன் நெஞ்சில் வைத்துப் பார்த்தார்.

"மிஸ்டர் வேலனுக்குச் சந்தேகம். சொத்தையெல்லாம் மனைவி பேருக்கே உயில் எழுதிக் கையெழுத்தாகி விட்டது......" என்றார் வக்கீல்.

"உயிர் போக வேண்டியதுதான் பாக்கியாகும்! விலகிப் போங்கள் எல்லாரும்!" என்று கோபித்துக் கொண்டு எல்லோரையும் அந்த அறையிலிருந்து வெளியே அனுப்பினார் டாக்டர்.

வேலனுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தார் டாக்டர் ராமு. அவன் குணமாகும் வரையில் வழக்கை ஒத்திப் போட்டார்களே யொழியச் சந்திரன் குடும்பத்தாரை என்னவோ கட்டுப்பாட்டில்தான் வைத்திருந்தார்கள்.

பூரணமாகக் குணமடைந்த வேலன் "நர்ஸிங் ஹோமை" விட்டுத் தன் காரிலேறி நேராக வீடு நோக்கிச் சென்றான். காரை விட்டிறங்கினான். இறங்கிச் சிறிது தூரம் நடந்திருப்பான். அவன் பின்னிருந்து "டுமீல்!" என்ற சத்தம் கேட்டது. தன் இதயம்தான் வெடித்து விட்டதோ என்று பயந்து திரும்பினான். யாரோ தன்னைப் பார்த்துச் சுட்டுவிட்டு ஓடுவதைப் பார்த்தான்.

வேலனுக்கு உயிரே இல்லை! நெஞ்சு படபடத்தது! நெஞ்சைப் பிடித்தான். போன வலி திரும்பி வந்து விட்டது. டாக்டர் வந்தார். மீண்டும் சிகிச்சை! காரணம் எதிர்பாராத அதிர்ச்சிதான் என்று சொல்லிப் போனார்; மெல்ல மெல்ல குணமடைந்து வந்தான் வேலன்!

தன்னை நோக்கிச் சுட்டவன் மீது வழக்கு போடலாமே என்று அவன் நினைத்தான்! ஆனால் சுட்டவன் யாரென்று மட்டும் யூகிக்க முடியவில்லை வேலனால்! விரோதி ஒருவனிருந்தால் சந்தேகப்படலாம். வேலனுக்குத்தான் ஊரெல்லாம் விரோதிகள் இருக்கிறார்களே! யாரைச் சந்தேகப்படுவது! எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளியும் நல்லதாகப் படவில்லை வேலனுக்கு! அதோடு வேலனே தன் தலையைப் பொசுக்கிக் கொண்டு, 'என்னைக் கொல்ல முயன்றான் இவன்!' என்று யார் மீதாவது பழியைச் சுமத்தினாலும் யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

** ** **

நீதி மன்றத்திலே வழக்கு. எல்லோரையும் கூண்டிலேற்றி விசாரித்தார்கள். வாதிப் பிரதிவாதி வக்கீல்கள் இருவரும் வாதாடி ஓய்ந்தார்கள். வழக்கில் ஒன்றுமில்லை, எல்லாம் வேலனின் மத்தாப்பு வேடிக்கைதான் என்பதை இரு கட்சி வக்கீல்களும் உணர்ந்தவர்களாய்க் காணப்பட்டார்கள். கடைசியாக வழக்கு வேலனுக்குச் சாதகமாகவே முடியும் போலிருந்தது. அந்தச் சமயத்தில்தான் யாரும் எதிர்பாராத சம்பவம் நடந்தது.

நீதி மன்றத்தில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. போலீஸ் இன்ஸ்பெக்டர் சில ஜவான்களோடு, கள்ளச் சாராய புட்டிகள், துப்பாக்கிகள், வெடி மருந்து செய்யும் இயந்திரம் இன்னும் சில சாமான்களையும் தூக்கி வந்து நீதிபதி முன் வைத்தார். நியாய ஸ்தலத்தில் இருந்தவர்கள் வாயைப் பிளந்தபடி ஆச்சரியத்தில் அசந்து விட்டார்கள்.

"ஆ! இதெல்லாம் என்னுடையதல்லவா!" என்று அலறி விட்டான் வேலன்.

"ஆம்! உம்முடையதுதான்!" என்று வேலனைப் பார்த்துச் சொல்லி விட்டுப் பேசினார் போலீஸ் அதிகாரி. "இவர்மீது பலவிதமான புகார்கள் தினம் வந்து கொண்டே இருந்தன. அதன் பேரில் வேலன் வீட்டைப் பரிசோதிக்க எமது துப்பறியும் இலாக்காவைச் சேர்ந்த சிலரை அனுப்பினேன். பரிசோதனையில், எங்கள் இலாகாவுக்குக் கொடுத்த வெகுமதி, கள்ளச் சாராயம், திருட்டுத் துப்பாக்கி, வெடி மருந்து இயந்திரம், அவர் சகோதரர் மீது பொய் வழக்குப் போடும்படி அவர் காரியஸ்தருக்கு அவரே கைப்பட எழுதிய கடிதம் எல்லாம் கிடைத்தன" என்றார்.

இதைப் பார்த்த வேலன் அப்படியே மூர்ச்சையானான். நீதிபதி அவன் செய்த குற்றங்களுக்காக ஐந்து வருடக் கடுங்காவல் தண்டனை அளித்தார்.

** ** **

புயலுக்குப் பின் ஒரு அமைதி ஏற்படுவது போல ஊரில் அமைதி நிலவியது! விஜயா—விசுவநாதன் கல்யாணத்துக்கு இருந்த இடையூறு இப்பொழுது நீங்கி விட்டது. அவர்கள் உள்ளத்திலும் இனந்தெரியாத ஒரு அமைதி நிலவியது. அந்த ஆனந்த அமைதியில் விசுவநாதனுக்கும் விஜயாவுக்கும் திருமணம் நடந்தேறியது. சந்திரனுக்கு மட்டும் என்னமோ மனக் குறைதான், தன் சகோதரன் சிறையில் வாடுகிறானே என்று. பரம்பரையாக வந்த நல்ல குடும்பம் அல்லவா அது!


KAMINIA
OIL
KAMINIA
PERFUMERY Co
BOMBAY
காமினியா
ரிஜிஸ்டர்ட் ஆயில் ரிஜிஸ்டர்ட்
காமினியா ஆயிலின் (ரிஜிஸ்டர்ட்) ஜீவசக்தியுள்ள சரக்குகள், இந்த பிரசித்தி பெற்ற ஹேர் ஆயிலை மற்றெல்லா ஹேர் ஆயில்களினின்றும் மாறுபட்டு விளங்கச் செய்கிறது. கேசத்தை வளப்படுத்துவதற்கு அவசியமானவற்றைத் தவிர வேறொன்றுமே இல்லை. இந்த பாட்டிலில் பூராவும் காமினியா ஆயில்தான். வேறொன்றும் இத்துடன் கலக்கப்படுவதில்லை. இதில் அடங்கியுள்ள தைலம் பூராவும் உபயோககரமாக செலவழிக்கப் படுகிறது. எனவே, நீங்கள் காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) வாங்குவதானால் உங்கள் பணத்திற்கான முழு மதிப்பையும் பெறுகிறீர்கள்.
சாம்பிள் பெற தபால் செலவிற்கு அணா 4 ஸ்டாம்பு அனுப்பவும்.
ஆங்கிலோ இந்தியன் டிரக் & கெமிகல் கோ.
பம்பாய்-2



4. விசுவாமித்திரர்

தசரதனுக்கு மூன்று பத்தினிகள்—கௌசல்யை, சுமித்திரை, கைகேயி. வேள்வியில் அடைந்த பாயசத்தை அருந்தியதின் பயனாக மூன்று பத்தினிகளும் கர்ப்பம் தரித்தார்கள். காலக்கிரமத்தில் கௌசல்யா தேவி ராமனைப் பெற்றாள். அடுத்தபடி கைகேயி பரதனைப் பெற்றாள். சுமித்திரா தேவி இரு குமாரர்களைப் பெற்றாள். அவர்களே இரட்டையர்களான லக்ஷ்மணனும் சத்ருக்னனும். பாயசத்தில் அருந்திய பங்கின் விகிதாசாரப்படி இந்த நான்கு குமாரர்களுக்கும் விஷ்ணு அம்சம் சொல்லப்படுகிறது. முறையே ராமன் விஷ்ணுவில் பாதி என்றும், லக்ஷ்மணன் விஷ்ணுவில் கால் பங்கு என்றும், பரதனும் சத்ருக்னனும் ஒவ்வொருவர் அரைக்கால் பங்காகவும் சொல்லப்படுகிறது. சுமித்திரை முதலில் அருந்தியது கால் பாகம், கடைசியாக அருந்தியது கைகேயிக்குத் தந்தது போக மிஞ்சி நின்ற அரைக்கால் பாகம். முந்தி அருந்திய கால் பங்கு பாயசம் லக்ஷ்மண சொரூபமாயிற்று. பிந்திய அரைக்கால் பங்கு சத்ருக்ன சொரூப மாயிற்று. இந்த விஷயங்கள் அவ்வளவு முக்கியமல்ல. கடவுளைப் பங்கு பண்ணிக் கணக்கிட முடியாது. பரம் பொருளில் ஒரு சிறு பங்கும் பூரணமாகவே நிற்கும் என்பது சுருதி.

ஓம் பூர்ண மதஃ பூர்ணமிதம் பூர்ணாத்
பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ண மேவா
வசிஷ்யதே

“அங்கிருப்பது பூரணம், இங்கிருப்பதும் பூரணம். பூரணத்திலிருந்து பூரணம் உண்டாகியுள்ளது. பூரணத்தினின்று பூரணத்தை எடுத்த பிறகும் மிஞ்சி நிற்பது பூரணமே.”

பரம்பொருள் பௌதிகக் கணித நூல் நியதிக்கு அடங்காது.

* * *

நான்கு பேர்களுக்கும் அரசகுமாரர்களுக்கு விதிக்கப்பட்ட எல்லாப் பயிற்சிகளும் தரப்பட்டன. குழந்தைப் பருவத்திலிருந்து லக்ஷ்மணனுக்கும் ராமனுக்கும் விசேஷப் பிரியம் வளர்ந்து வந்தது. அப்படியேதான் பரதனுக்கும் சத்ருக்னனுக்கும் பரஸ்பரம் அதிக அன்பு. எப்போதும் கூடவே இருப்பார்கள். இதுவும் தாய்மார்கள் பாயசம் அருந்திய முறையிலிருந்து உண்டாகிய நெருங்கிய பற்று என்று வைத்துக் கொள்ளலாம்.

நான்கு குமாரர்களைப் பெற்று, அவர்களுடைய குணங்களும் சாமர்த்தியமும் பிரீதியும் தேஜசும் வளர்ந்து சிறப்புற்று வர, தசரத மகாராஜன் தேவர்களால் சூழ்ந்த நான்முகக் கடவுளைப் போல் திருப்தியாக இருந்து வந்தான்.



ஒரு நாள் தசரதன் தனனுடைய மந்திரிகளுடன் உட்கார்ந்து குமாரர்களுக்கு விவாகம் செய்வதைப் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தான். அப்போது காவல் அதிகாரிகள் பரபரப்புடன் உள்ளே வந்து, "விசுவாமித்திர மகா முனிவர் அரசனைக் காணக் காத்திருக்கிறார்" என்றார்கள். விசுவாமித்திரர் என்றால் எல்லாருக்கும் பயம்.

மகா சக்தியும் புகழும் பெற்ற முனிவர் எதிர்பாராதபடி தன்னைக் காண வந்திருக்கிறார் என்று தெரிந்ததும் தசரதன் தன் ஆசனம் விட்டு எழுந்து, முனிவரை எதிர்கொண்டு வரவேற்று, முறைப்படி ஆசனத்தில் அமரச் செய்தான்.



விசுவாமித்திர முனிவர் ஓர் அரசனாக இருந்து, பிறகு தவஞ் செய்து முனிவரானவர். தவத்திலும் வெகு பாடுபட்டு வெற்றி பெற்றவர். "மடங்கல் போல் மொய்ம்பினன்" அதாவது, சிம்மத்தின் பலம் கொண்டவர் என்கிறார் கம்பர்.

மடங்கல்போல் மொய்ம்பினன்
முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகம்வேறு
அமைத்துத் தேவரோடு
இடங்கொள் நான்முகனையும்
படைப்பன் என்றுனத்
தொடங்கிய கோசிக முனிவன்.........

முன்னொரு காலத்தில் புதியதொரு பிரம்மாவையே உண்டாக்கி ஒரு புதுப் பிரபஞ்சத்தையும் சிருஷ்டி செய்து விடுவேன் என்று தொடங்கித் தம் தபோபலத்தால் நட்சத்திரங்களை உண்டாக்கி, ஆகாயத்தின் தென்பாகத்தில் நிலைக்கச் செய்தவர். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிப் புது சிருஷ்டியை அந்த அளவில் நிறுத்திக் கொண்டார். இவை ராமாயண நிகழ்ச்சிக்கு முன்பு.

* * *

விசுவாமித்திரர் முனிவராவதற்கு முன், கௌசிக ராஜாவாக இருந்த காலத்தில் தம் சைன்யத்துடன் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டு போகும் சமயம், ஒருநாள் வசிஷ்ட மகரிஷியின் ஆசிரமத்துக்குச் சென்றார். அங்கு வசிஷ்ட மகா முனிவரை நமஸ்கரித்து அவரிடம் தாமும் மரியாதை பெற்றுக் கொண்டார்.

க்ஷேம சமாசாரம் விசாரித்த பிறகு "உமக்கும் உம்முடைய ஆட்களுக்கும் நான் அதிதி உபசாரம் செய்து போஜனம் செய்வித்துக் கௌரவம் அடைய வேண்டும். இந்த ஆசையை நிறைவேற்றுவீராக" என்று வசிஷ்டர் சொன்னார்.

விசுவாமித்திரர் "சுவாமி, தாங்கள் எனக்கு ஜலம் தந்து செய்த உபசாரமே பெரிய விருந்தாக வைத்துக் கொள்ளு

கிறேன். தங்களைத் தரிசித்ததே என் பாக்கியம். 'உனக்கு அதிதி பூஜை செய்ய விரும்புகிறேன்' என்று தாங்கள் சொன்ன வார்த்தைகளே எனக்கும் என் சேனைக்கும் செய்த பெரும் விருந்தாகும். எனக்குப் போக விடை கொடுத்தருள வேண்டும்" என்றார்.

ரிஷியாசிரமத்தில் பெரும் சேனையோடு வந்த ஒரு அரசனுக்கு எவ்வாறு விருந்து செய்விக்க முடியும்? ஆனபடியால் வசிஷ்டர் சொன்னது சாதாரண உபசார வார்த்தையாக வைத்துக்கொண்டு விசுவாமித்திரர் மேற்கண்டவாறு சொன்னார்.

ஆனால் வசிஷ்டர் போஜனம் செய்தே போகவேண்டும் என்று நிர்ப்பந்தித்தார்.

விசுவாமித்திரர், "கோபித்துக் கொள்ளக் கூடாது. தங்களுடைய போஜன உபசாரத்தை நான் இகழ்ந்ததாக வைத்துக் கொள்ள வேண்டாம். எனக்கும் என்னுடைய பெரும் பரிவாரத்துக்கும் இவ்விடம் எப்படி போஜன பதார்த்தங்கள் திடீர் என்று கிடைக்கும்? இதற்காகத்தான் கவலைப்படுகிறேன்" என்று வியக்தமாகச் சொன்னார்.

வசிஷ்ட முனிவர் புன்னகை செய்து, தம் பசுவை அழைத்து "குழந்தாய், சபலையே! அரசனுக்கும் பரிவாரத்துக்கும் வேண்டிய போஜனம் உடனே தந்து உபசரிப்பாய்" என்றார்.

* * *

அப்போது கௌசிகராஜன் திகைத்துப் போகும்படியான ஓர் அற்புத நிகழ்ச்சி நடந்தது. அரசனுடைய பரிவாரத்துக்கும் பெரும் சேனைக்கும் வேண்டிய அளவில் அநேக விதமான ருசியான பதார்த்தங்கள் தாமாகத் தோன்றிக் குவிந்து விழுந்தன. அன்ன பான வகைகள், பணியாரங்கள், நெய், தயிர், புஷ்பம், வாசனைத் திரவியங்கள் ஒன்றும் விடாமல் எல்லாம் மனத்தில் நினைத்த மாத்திரத்தில் ஆசிரமத்தில் எல்லோருக்கும் பரிமாறப்பட்டன. கௌசிகருடைய பத்தினிமார்கள், மந்திரிகள், பந்து பரிவாரங்கள், புரோகிதர்கள், சேனையாட்கள், வேலையாட்கள், அனைவரும் ரிஷியாசிரமத்தில் திருப்தியாக விருந்து உண்டு, ரிஷியின் தபோ பலத்தைக் கண்டு வியப்பில் மூழ்கினார்கள்.

விசுவாமித்திரர் தம்முடைய நன்றியைத் தெரிவித்து விட்டு முடிவில் வசிஷ்டரைக் கேட்டுக் கொண்டார்.

"இந்தச் சபலையை எனக்குத் தர வேண்டும். இதன் சக்தியை நான் கண்டேன். இத்தகைய பொருள் ராஜ தருமத்தின்படி அரசனுக்கே உரியது" என்றார்.

இதைக் கேட்ட வசிஷ்டர் மிகவும் வருத்தப்பட்டார். சபலையை விட்டுத் தாம் பிரிய முடியாது. அதற்குப் பல காரணங்கள் உண்டு என்று சொல்லி, கொடுக்க மறுத்து விட்டார்.

மறுக்க மறுக்க அரசனுக்கு ஆசை அதிகரித்தது. இதைத் தருவேன், அதைத் தருவேன் என்று கௌசிகர் வசிஷ்டருடைய மனத்தை மாற்றப் பார்த்தார். முடியவில்லை. வசிஷ்டர் ஒரே உறுதியாக "இந்தப் பசுவுக்கு விலையாக நீர் கொடுக்கக் கூடிய செல்வம் அனைத்தும் எனக்குக் கொடுத்தாலும் பயனில்லை. சபலையைக் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லி விட்டார்.

அதன்பேரில் விசுவாமித்திரர் கடுங்கோபம்கொண்டு, தம் சேனையாட்களுக்கு உத்தரவிட்டுச் சபலையைப் பலவந்தமாக இழுத்துப் போகப் பார்த்தார்.

சபலை கண்ணீரும் கம்பலையுமாக, "நான் ரிஷிக்கு என்ன அபராதம் செய்தேன்? ஏன் என்னைக் கைவிட்டார்? இவர்கள் என்னை இழுத்துக் கொண்டு போகப் பார்க்கிறார்களே! என் எஜமானராகிய முனிவர் சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறாரே!" என்று சுற்றி நின்ற சேனையாட்களை முட்டித் துரத்திவிட்டு வசிஷ்டரிடம் சரண மடைந்தது.

தன் அருமைப் பசு கூடப்பிறந்த தங்கையைப் போல் சோகத்தால் கதறுவதைப் பார்த்து வசிஷ்டர், "குழந்தாய், உன்னை இம்சிக்கும் இவர்களைத் தாக்கும்படியான சேனையை நீ உண்டாக்குவாயாக!" என்று சொல்லி விட்டார்.

உடனே அப் பசு "ஹும், ஹும்" என்று கர்ஜித்துக் கர்ஜித்து எண்ணிறந்த வீரர்களை உண்டாக்கி விசுவாமித்திரருடைய ஆட்களைச் சிதற அடித்தது.

இதைக்கண்ட விசுவாமித்திரர், கண்கள் சிவந்து அடங்காக் கோபங் கொண்டு, ரதம் ஏறிப் பாணங்களைப் பிரயோகித்தார். சபலையும் புதிய புதிய படை வீரர்களைத் தன் உடலிலிருந்து வெளிப்படச் செய்து விசுவாமித்திரரை முறியடித்து அவர் பெருஞ் சேனையையும் நாசம் செய்தது. போர் முற்றிப் போயிற்று. விசுவாமித்திரருடைய குமாரர்கள் வசிஷ்டரையே கொல்ல வந்தார்கள். வசிஷ்டர் அவர்களைப் பார்த்து வாயால் அதட்டியதும் சாம்பலானார்கள்.

அவமான மடைந்த விசுவாமித்திரர் முகக் காந்தியை இழந்து அந்த இடத்திலேயே தம் ராஜ்யத்தை ஒரு மகனிடம் ஒப்படைத்து விட்டு, வசிஷ்டரை எப்படியாவது அடக்க வேண்டும் என்று உமாபதியை நோக்கித் தவஞ் செய்ய இமய மலைச் சாரலுக்குப்போய் விட்டார்.

5. பிரம்ம தண்டம்

விசுவாமித்திரருடைய உக்கிர தவத்தைக் கண்டு பரமசிவன் மகிழ்ந்து கௌசிகருக்குத் தரிசனம் தந்தார்.

"அரசனே! உனக்கு என்ன வேண்டும்? எதை விரும்பித் தவம் செய்தாய்?" என்று மகாதேவர் கேட்டார்.

விசுவாமித்திரர் கைகூப்பி வணங்கி "சுவாமி, என் தபசு உமாபதிக்குத் திருப்தி தந்திருந்தால் தனுர் வேதத்தை எனக்குப் பூரணமாக அருள வேண்டும். சகல அஸ்திரங்களும் எனக்கு வசமாகித் தந்தருள வேண்டும்" என்றார்.

"அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி, தேவர்கள், தானவர்கள், கந்தர்வர்கள், ரிஷிகள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள் அனைவரும் அடைந்த எல்லா அஸ்திரங்களையும் விசுவாமித்திரருக்கு மகாதேவர் தந்தார்.

• • •

பரமேசுவரன் தந்த வரத்தைப் பெற்றுக் கொண்டு விசுவாமித்திரர் திரும்பினார். தவத்தால் தாம் அடைந்த சக்தியைக் குறித்துப் பருவ கால சமுத்திரத்தைப் போல் அகங்காரம் பொங்கி 'வசிஷ்டரைத் தீர்த்து விட்டேன்' என்று தமக்குள் எண்ணிக் கொண்டே திரும்பினார்.

நேரே வசிஷ்டர் ஆசிரமத்துக்கே சென்றார். விசுவாமித்திரர் கோபத்தோடு யமனைப் போல் வருவதைக் கண்டு வசிஷ்டரின் ஆசிரமத்திலிருந்த சீடர்களும் பிராணிகளும் திகில் கொண்டு மூலைக்கு மூலை ஓடினார்கள்.

விசுவாமித்திரர் விட்ட ஆக்னேயாஸ்திரத்தின் வேகத்தால் ஆசிரமம் எரிந்து சாம்பலாயிற்று. "பயப்பட வேண்டாம்" என்று வசிஷ்டர் எவ்வளவு சொன்னாலும் சிதறி ஓடுகிறவர்கள் பயம் தாங்காமல் ஓடிக் கொண்டேயிருந்தார்கள்.

வசிஷ்டர் இதைக் கண்டு வருத்தப்பட்டு 'இந்தக் கௌசிகருடைய கர்வத்தை அடக்க வேண்டும்' என்று காலாக்கினி போல் ஜொலிக்கும் தம் பிரம்ம தண்டத்தைக் கையில் எடுத்து. "மூடனே!" என்றார்.

விசுவாமித்திரர் ஆக்ரோஷங் கொண்டு "ஏய், வசிஷ்டரே! நில்லும், நில்லும்!" என்று அதட்டி, தாம் புதிதாகக் கற்ற ஆக்னேயாஸ்திரத்தை அவர்மேல் விட்டார்.

வசிஷ்ட மகா முனிவர், "நான் ஓடவில்லை. இதோ நிற்கிறேன்" என்றுகூறிப் பிரம்ம தண்டத்தைத் தமக்கு முன்னே நிறுத்தினார். விசுவாமித்திரருடைய அஸ்திரமெல்லாம் தண்ணீரைக் கண்ட நெருப்பைப்போல் அணைந்து நின்றன.

பிறகு விசுவாமித்திரர் தாம் கற்ற அஸ்திரங்கள் அவ்வளவையும் பிரயோகித்தார். அவை அனைத்தையும் வசிஷ்டருடைய பிரம்ம தண்டம் விழுங்கிற்று. முனிவர் சுகமாக நின்றார். இந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்டு விசுவாமித்திரர் பிரம்மாஸ்திரத்தை விடுத்தார்.

'பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்து விட்டாரே, என்ன கதியாகுமோ' என்று ரிஷிகளும் தேவர்களும் கவலையுற்றார்கள். முனிவருடைய பிரம்ம தண்டம் அரசனுடைய பிரம்மாஸ்திரத்தையும் விழுங்கி விட்டது. அஸ்திரத்தை உட்கொண்ட வசிஷ்டரின் பிரம்ம தண்டத்தினின்று நெருப்புப் பொறிகள் சுற்றிலும் பறந்தன. வசிஷ்டருடைய உடலும் அற்புதமாக ஜொலித்தது.

விசுவாமித்திரர் பிரமித்துப் போனார். பெருமூச்செறிந்து, "நான் தோற்றேன். க்ஷத்திரிய பலம் என்னத்துக்காகும்? இந்த ரிஷி ஒரு கோலை வைத்து நான் விடுத்த அஸ்திரங்களையெல்லாம் விழுங்கித் தீர்த்தார். பரமசிவன் என்னை ஏமாற்றி விட்டார். இவரைப் போல் நானும் பிரம்ம ரிஷியாக வேண்டுமேயொழிய வேறு வழியில்லை" என்று யுத்தத்தை நிறுத்தி மறுபடி கடுந்தவம் செய்வதற்காகத் தென்புறம் சென்றார்.

• • •

பிரம்மாவை உபாசித்து அனேக ஆண்டுகள் தவம் செய்தார். முடிவில் நான்முகன் பிரஸன்னமானான். "குசிக புத்திரனே! உன் தவத்தால் ராஜரிஷிப் பதவியை அடைந்தாய்" என்று விசுவாமித்திரரை ஆசீர்வதித்து விட்டு மறைந்தான்.

தாம் செய்த கோரமான தவமெல்லாம் ராஜரிஷிப் பதவியைத் தானே தந்தது என்று துக்கமடைந்து, இன்னும் மிகக் கோரமான தவங்களைச் செய்யலானார்.


அன்றாடம் இரண்டே நிமிஷங்கள் தேவை நீங்கள் பூரண எழிலுடன் திகழலாம்



முக சிங்காரிப்புக்குத்தான், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவிக்கொண்டால் அதன் மேல் பௌடர் பூசுவது மிக எளிது — அழகாயுமிருக்கும். ஞாபகமிருக்கட்டும்.

பிரதி இரவிலும் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை உங்கள் சருமத்தில் தடவி நன்கு தேயுங்கள் — ஒரே ஒரு நிமிஷம் தான் ஆகும். அதிலுள்ள எண்ணெய்கள் சருமத்தில் ஊடுருவிச் சென்று, மயிர்க் கால்களில் படிந்திருக்கும் சிறு சிறு தூசியையும் அழுக்கையும் வெளியேற்றி விடுகிறது. சருமத்தை மெதுவாகத் துடைத்து அது எவ்வளவு பரிசுத்தமாக விளங்குகிறதென்பதைப் பாருங்கள்.

இவ்வற்புத க்ரீமை இன்னும் கொஞ்சம் எடுத்து முகத்திலும் கழுத்திலும் பூசிக் கொள்ளுங்கள். இரவு முழுவதும் அது அப்படியே இருக்கட்டும். காலையில் எழுந்தவுடன் உங்கள் மேனி மிக துல்லியமாயும் பூரண பொலிவுடனும் விளங்குவதைக் கண்டு அதிசயிப்பீர்கள்.



பிரதி தினம் காலையிலும் ஒரு நிமிஷம் உங்கள் முகத்தில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை மெதுவாகத் தடவுங்கள் அது பூரணமாக மறைந்து விடும். சருமம் பட்டுப் போன்று மழமழப்பாகவும் அற்புத சோபையுடனும் விளங்கும்.

கண்ணுக்குப் புலப்படாத வகையில் முகத்தில் மறைந்துள்ள இந்த பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் திரைப்படலம் பகல் முழுவதிலும் உங்கள் எழிலைப் பாதுகாக்கும். உங்கள் மிருதுவான சருமத்திற்கு இந்த பாதுகாப்பு அவசியம்—முக்கியமாக வரட்சைக் காற்றிலும் சூரிய கிரணங்களின் வெப்பத்தாலும் சருமம் துவண்டு போகாமல் காப்பாற்றி வர அத்யாவசியம்.


உங்கள் சருமத்திற்கு இவ்விரட்டை பராமரிப்பு ஒவ்வொரு நாளும் தேவை. பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையும் அன்றாடம் தவறாமல் உபயோகித்து உங்கள் அழகிற்கு அழகு ஊட்டுங்கள்!



உலகில் எங்குமே பெண்மணிகள் தங்கள் எழிலை புதுமை குன்றாமல் பாதுகாக்க பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையுமே உபயோகிக்கின்றனர். அவர்கள் இயற்கை அழகின் இரகசியம் அதுதான்.

பாண்ட்ஸ்

P. 6513



குடும்பத்துள் குடும்பம்

ஆர். வெங்கடேசுவரன்

விசாலமான அறை அது. அறையில் எவ்வித மான பரபரப்பும் இல்லை. சுவரில் ஒரு நிலைக் கடியாரம் 'டக் டக்' என்று அடித்துக் கொண்டிருந்தது. அறையின் ஓரத்திலே ஒரு தட்டு அலமாரி. பின்னால் வைத்திருந்த தட்டுமுட்டுச் சாமான்களின் அவலட்சணம் தெரியாமலிருப்பதற்காகவே அந்த அலமாரியைக் குறுக்கே வைக்கப்பட்டிருப்பது போல் தோன்றியது. அங்கிருந்த தட்டு முட்டுச் சாமான்கள்தாம் என்ன! ஒரு மண்ணெண்ணெய் டின், கொஞ்சம் விறகு, ஸ்பிரிட் சீசா, புடவை உலரவைக்கும் வேலைக்கு உபயோகிக்கப்படும் ஒரு கம்பு, அரைச்சாக்கு கரி, தேங்காய்க் கூந்தல், ஓர் உடைந்த கற்சட்டி, பாய்லரில் போடுவதற்காகச் சேர்த்து வைக்கப்பட்டிருந்த சில கொட்டங்கச்சிகள்—இவை அங்கு நிலைமாறிக் கிடந்தன. என்ன அலங்கோலமாக அறை இருந்தாலும் அந்த அறையில்தான் விலை மதிப்புள்ள சாமான்களை வீட்டுக்காரர்கள் வைத்திருந்தார்கள். அப்படியும் ஓரத்தில் தானே தட்டுமுட்டுச் சாமான்கள் போட்டிருக்கிறார்கள்! அவற்றை நன்றாக மறைப்பதற்குத் தான் அலமாரி இருக்கிறதே!

இதைப் பார்க்கும்போது முதல் அறை நன்றாக வைக்கப் பட்டிருந்தது. சாமான்களெல்லாம் அதனதன் இடத்தில் கவர்ச்சியாக வைக்கப்பட்டிருந்தன. வீட்டுக்கு அபூர்வமாக வருவோர்களும் அந்த முதல் அறையில்தான் அன்புடன் வரவேற்கப் பட்டார்கள்.

இரண்டாவது அறையில் மாட்டப்பட்டிருந்த அந்த நிலைக்கடியாரத்துக்குக் கீழே ஒரு சிறு குழந்தை கிடந்தது. அது, தன் தாயார் கொடுத்த பாலைக் கக்கிக் கீழே புரட்டி விளையாடிக் கொண்டிருந்தது. கீழே கக்கப்பட்ட பாலைப் போட்டி போட்டுக் கொண்டு சில சிற்றெறும்புகள் மொய்த்தன. ஆனால் குழந்தை அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அதனுடைய பார்வை இப்பொழுது அலமாரிக்கு மேல் தொங்கும் ஓட்டடையில் லயித்திருந்தது. அந்த ஓட்டடை தொங்கும் அழகிலே சொக்கிப் போயிருந்ததுபோலும்! தாய் சீராட்டிச் சமாதானப் படுத்தும் போதெல்லாம் அழுது கொண்டிருந்த குழந்தை இப்பொழுது ஓட்டடையைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்தது. பொக்கை வாயைத் திறந்து சிரித்தது. குழந்தைக்கு அதிகமாகப் போனால் இரண்டரை மாதங்கள் தானிருக்கும். ஆக, அதன் சிரிப்பிலிருந்து ஒலி எழக் காரணமில்லை. எனவே கடியாரத்தின் சத்தமே அங்கு தனியாட்சி செலுத்திக் கொண்டிருந்தது.

வராந்தாவுக்கும் இந்த அறைக்கும் நடுவே ஒரு கதவு. கதவின் பக்கத்திலே ஒரு ஜன்னல். ஜன்னலில் எல்லாக் கண்ணாடிகளும் திராணியோடு சரியாக இருந்தன. ஆனால் ஓரத்திலே மட்டும் சட்டம் பின்னப்பட்டு, கண்ணாடி விழுந்திருந்தது. விழுந்திருக்க வேண்டும். ஏனென்றால் அது இப்பொழுது வெளியாக இருக்கிறதே! அது வழியே சிலவேளை குளிர் காற்று வீசும். அந்தக் குளிர் காற்று குழந்தையின் உடல் நலத்தைப் பாதிக்கப் போகிறதே என்று வீட்டுக்கார அம்மாள் அந்த இடைவெளியைத் துணியாலோ காகிதத்தாலோ நன்றாக மூடி விடுவாள். ஆனால் அவையெல்லாம் பலன் அளிக்கவில்லை. மீண்டும் துணியோ காகிதமோ விலகிவிடும். விலகிய காரணம் வீட்டுக்கார அம்மாளுக்கு விளங்கியதோ என்னமோ, நமக்கு விளங்கியது. இதோ உண்மை வருகிறது.

அந்த வீட்டில் கணவன், மனைவி, குழந்தை இவர்கள் மட்டுமா குடியிருந்தார்கள்! ஒரு மாதத்துக்கு முன், 'ஆம்' என்று இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்க முடியும். ஆனால் இப்பொழுது முடியாது. ஏனென்றால் வாடகை கொடாமல் அந்த வீட்டில் இன்னொரு ஜீவனும் உலாவி வளைய வந்தது. ஜன்னலில் இடைவெளி செய்து உள்ளே வந்து போவதும் அந்தப் பிராணி தான். என்ன! அது தானுண்டு, தன்னிடமுண்டு என்றிருப்பதுதானே என்று நாம் நினைக்கலாம். ஆனால் அது அப்படி நினைக்கவில்லை. அது வெளியுலகத் தொடர்பை அத்தியாவசியமாகக் கருதியது. ஏனென்றால் அது ஒற்றைத் தவளையாக இருக்க விரும்ப வில்லை. அது ஒரு எலி.




அந்த எலிக்கு வீட்டிலுள்ள எல்லோரும் அறிமுகம். ஏன், ஓட்டடையைப் பார்த்துச் சிரிக்கும் அந்தக் குழந்தைகூட அதற்கு நன்றாக அறிமுகம்

தான். இன்ன சாமான்கள் இன்ன இடத்தில் இருக்கும் என்று அதற்கு நன்கு தெரியும். வெல்லம், பருப்பு, எண்ணெய் இவை எங்கு வைக்கப்பட்டிருக்கின்றன என்பது வீட்டுக்கார அம்மாளுக்கு ஒரு வேளை மறந்தாலும் மறக்கலாம். ஆனால் அந்த எலிக்கு மறக்காது. விறகுக்கும் கரிச் சாக்குக்கும் இடையே அது, தன்னுடைய நிரந்தர வாசஸ்தலத்தை வைத்துக் கொண்டதற்குக் காரணமே, அதன் வாய்க்கு வசதியாக வைக்கப்பட்டிருந்த உணவு வகைகளே.

இதோ பாருங்கள், எலி வருகிறது. எவ்வளவு சுவாதீனத்துடன் ஜன்னல் இடைவெளியிலிருந்து இறங்கி வந்து, குழந்தைக்குப் போட்டிருக்கும் பாயின் மேல் விழுந்தடித்துக்கொண்டு தன் வாசஸ்தலத்தை அணுகுகிறது. அங்கிருக்கும் நிலையைப் பார்த்து மனத்தில் திருப்தி யடைந்துகொண்டு வெளியே தலையை நீட்டுகிறது. கரிச் சாக்கின் மேல் ஒரு கருவி இருந்ததை அது கவனித்ததா! ஆம், கவனித்தது. வலை போட்ட அந்தக் கருவியைப் பார்த்து அது ஆச்சரியமடைந்தது. எல்லாவற்றையும் நன்றாக மூடி வைப்பவர்கள் இப்படிக் கவனக் குறைவாக இருப்பார்களா என்று அது நினைக்கவில்லை. ஆம், அந்தக் கருவி வேறொன்றுமில்லை—ஒரு எலிப் பொறிதான்.

நமக்கு எலிப் பொறி என்று தெரியும். ஆனால் அந்த எலிக்கு...! ஆறறிவற்ற எலிக்குத் தெரியுமோ என்றால் அதற்குத் தெரிந்தது. நன்றாகத் தெரிந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஏது! அந்தப் பொறிக்குள் இருக்கும் வெங்காயத் துண்டு தான். வெங்காயத்தைப் பாதியாக வகிர்ந்து உள்ளே வைத்திருந்தார்கள் போலும். வாசனை மூக்கைத் துளைத்தது. ஆவலை அடக்க முடியாமல் பொறியின் உள் வாயிலிருக்கும் தட்டில் குதித்தது. மறுகணம் எலிப் பொறிக்குள் இருக்கும் வெங்காயத் துண்டை அது வாயில் கௌவிக்கொண்டிருந்தது. அதை வெளியே கொண்டு வந்து தின்றால் என்ன! முயற்சி செய்து பார்த்தது; பலிக்கவில்லை. வெளியே வர வசதியில்லை என்பதை அது அரை குறையாகத்தான் அறிந்து கொண்டது. அதற்குள் மனத்தை மாற்றிக் கொண்டு ஆர அமர இருந்து, கிடைத்த உணவை உண்டு விட்டுவெளியே வந்தால் என்ன!

இந்த ஆவல் மேலோங்கியதுமே, அந்த எலி தன்னை நிதானப்படுத்திக் கொண்டது. ஒவ்வொரு விள்ளலாக வெங்காயத்தைக் கடித்துத் திருப்தியுடன் உண்டது. அதுவும் கடைசிப் பகுதியை அது சாப்பிடும்போது அது இந்த உலகத்திலிருக்கவில்லை. அதற்கு அப்பொழுது ஆறறிவுகளுமிருந்து, மொழி அறிந்து பேசச் சக்தியும் இருந்திருக்குமானால் அது இந்திர பதவிகூட வேண்டாமென்று நிச்சயமாகக் கூறி யிருக்கும்.



ஒருவாறாகச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டது. பிறகு தான் வெளியே வருவதற்கான உபாயத்தைப் பற்றி யோசித்தது. வலையாக இருந்தால் வெளியே இருப்பதெல்லாம், நடப்பதெல்லாம் அதற்கு நன்றாகத் தெரிந்தது. ஆனால் தப்பத்தான் வழி தெரியவில்லை. அங்கும் இங்கும் பாய்ந்தது. பிரயோசனம் இல்லை என்று தெளிந்தவுடன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு காத்திருக்கச் சித்தமாக இருந்தது.

வீட்டுக்கு உடைய மனிதர்கள் முதலில் இந்த எலி தங்கள் வாழ்வில் குறுக்கிட்டதை அவ்வளவாகப் பாராட்டவில்லை என்றே தோன்றியது. ஆனால் அவர்களுடைய பொறுமை வெகு விரைவில் சோதிக்கப்படவே தான் அவர்கள் எலிப்பொறியை அந்த எலிக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

பார்க்கப் போனால் அந்த எலிக்கு இதுதான் முதல் அனுபவம் என்பதல்ல. எலிப்பொறி தனக்காகத் தான் வந்தது என்ற விவரம் அதற்கு ஓரளவு தெரிந்து தானிருந்தது. அப்படித் தெரிந்தும் அது அகப்பட்டுக் கொண்டு விட்டது.

பத்து நாட்களுக்கு முன்பு இதே மாதிரி ஒரு சந்தர்ப்பத்திலே தான் அது அகப்பட்டுக் கொண்டது. அப்பொழுதும் ஆசை காரணமாகத்தான் அகப்பட்டுக் கொண்டது. மனிதர்களே ஆசையால் பாதிக்கப்பட்டு அறிவை இழக்கும்போது கேவலம் எலியைப் பற்றி என்னத்தைச் சொல்ல! முதல் அனுபவம்; ஆதலால் எளிதில் அகப்பட்டுக் கொண்டது போலும். அகப்பட்டுக்கொண்டவுடன் 'அகப்பட்டுக் கொண்டோம்' என்று அதற்கு உடனேயே தெரிந்து விட்டது. உள்ளே இருக்கும் உணவுத் துண்டைக்கூடத் திரஸ்கரித்துவிட்டு, அது தப்பி ஓட வழி தேடியது. இரும்பு வலையைக் கடித்து அதன் முகம் இரத்த விளாராய்ப் போய்விட்டது. காலையில் வீட்டுக்காரர் எழுந்து அந்தப் பொறியைப் பார்க்கும்வரை அது தப்பி ஓடுவதற்கான முறைகளைக் கைக்கொள்ளாமலில்லை. வீட்டுக்காரர் எழுந்தவுடன் அந்த எலிப்பொறியை எடுத்து வைத்துக் கொண்டு ஆச்சரியத்தில் மூழ்கி யிருந்தார். ஏனென்றால் அவர், மூன்று இரவுகளாக எலியைப் பிடிக்க விரும்பி, ஏமாந்து போயிருந்தார். நான்காவது இரவு எலி, பொறியில் விழுந்தவுடன் சந்தோஷப்படாமல் என்ன செய்வார்! மனைவியை உடனே கூப்பிட்டுத் தம்முடைய சந்தோஷத்தில் பங்கு கொள்ள முயன்றார்.

தம்பதிகளிடையே ஒரு சிறு விவாதம் ஏற்பட்டது—எலியை எப்படி வெளியே கொண்டு விடுவது என்பதைப் பற்றி. வீட்டிலே ஒரு பூனையும் கடமாடிக் கொண்டு வந்தது. அந்தப் பூனையிடம் இந்த எலியைத் திறந்து விட்டால் என்ன என்று கேட்டார். "பூனை மட்டும் ஒழுங்கா என்ன அதையும் விரட்டித்தான் தொலைக்கணும். அது பண்ணுகிற ஆட்டி மாளவில்லை. குழந்தைக்கு வைத்திருக்கும் பாலிலெல்லாம் வாயை வைக்கிறது. எலியைப் பூனையிடம் விட்டால், பூனையை நாயிடம் விட வேண்டியது தான். அப்புறம் நாய் ஆட்டி யடித்தால்......! இப்படிச் செய்து கொண்டே போனால் முடிவே இராது. பேசாமல் கீழே கொண்டு போய் விட்டுத் தொலையுங்கள்" என்றாள் வீட்டுக்கார அம்மாள்.

வீட்டுக்காரருக்கும் அது சரி என்றே பட்டது போலும். எலிப் பொறியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். கொஞ்சம் தள்ளியிருந்த

குப்பைத் தொட்டியை அணுகி அதில் பொறியைக் கவிழ்த்தார். எலி 'தொப்' பென்று விழுந்தது. திருப்தி யடைந்தவராகத் திரும்பினார். கையில் எலிப் பொறியை வெற்றிப் பெருமிதத்துடன் ஆட்டிக்கொண்டே வீடு திரும்பினார்.

குப்பைத் தொட்டி வாழ்வு அந்த எலிக்கு அரை நிமிஷங்கூட லபிக்கவில்லை. சீக்கிரமே அதன் வாசஸ்தலத்தை அது அடைந்து விட்டது!



இந்த முதல் அனுபவம் அதற்கு இப்பொழுது நினைவுக்கு வந்ததோ என்னமோ! ஆனால் இப்பொழுது இரண்டாவது தடவையும் அது எலிப் பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டவுடன் அது வெல வெலத்துப் போயிற்று. வீட்டுக்காரர் முன்பு சொன்ன பிரகாரம் தன்னைப் பூனையிடம் திறந்துவிட்டால்...! அதெல்லாம் இருக்கட்டும். கரிச் சாக்குக்கும் மண்ணெண்ணெய் டின்னுக்கும் இடையே குஞ்சுகள் இருக்கின்றனவே! இரண்டு நாள்கூட ஆகவில்லையே! அந்தக் குட்டிகளை விட்டு விட்டு எப்படிச் சாவது! குட்டிகளைக் கவனிப்பவர்கள் யார்! இப்படியெல்லாம் எண்ணி எண்ணி அது மனம் புண்ணாகியது. முதல் அனுபவம் ஏற்பட்டதிலிருந்து அது இரவு வேளை தன் ஸ்தலத்தை விட்டு நகர்வதே யில்லை. 'குஞ்சுகள் இவ்வுலகத்துக்கு வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம். அதுவரை அபாயகரமான செயல்களில் இறங்குவதில்லை' என்று திட சங்கல்பம் செய்து கொண்டது. குஞ்சுகள் வெளிவந்து இரண்டு நாட்கள் கழித்துத்தான் அது நிர்ப்பயமாக வெளியே திரிந்தது; வளைய வந்தது. எனினும் இரவில் அது அஜாக்கிரதையாக இல்லை. எலிப் பொறியையாவது அதனுள்ளிருக்கும் ருசியான பண்டத்தையாவது அது திரும்பக்கூடப் பார்க்கவில்லை. குஞ்சுகளின் வருங்காலத்தை எண்ணி அது அவ்வளவு கவனமாக வளைய வந்தது. இரவில் அவ்வளவு கவனமாக இருந்த எலி பகலில் இப்பொழுது எப்படியோ எலிப் பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டு விட்டது.

வீட்டுக்கார அம்மாள் குழந்தைக்குப் பால் புகட்டுவதற்காக அந்த அலமாரிப் பக்கம் வந்தாள். அதைத் திறந்து சர்க்கரை எடுக்கப் போனவளின் பார்வை தற்செயலாக எலிப் பொறியின் மேல் விழுந்தது. பசியால் அலறிக் கொண்டிருந்த குழந்தையைச் சமாதானப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த கணவனைக் கூவி அழைத்தாள். "பாருங்கோன்னா, இரவிலே நமக்கு 'டிமிக்கி' கொடுத்த எலி பகலில் எவ்வளவு சுலபமாக அகப்பட்டுக்கொண்டு விட்டது" என்றாள்.

"அடடே, அந்தப் பழைய எலிதான் இது" என்று ஆமோதித்தான் கணவன்.

எலிப் பொறிக்குள் அகப்பட்டு வாடிய அந்த எலி அவர்களைப் பார்த்துப் பரக்கப் பரக்க விழித்தது. "நில், குழந்தை அழுவதற்கு ஒரு வழி சொல்லுகிறேன். நீ பாலைக் கரைத்துக் கொண்டு வா, அதற்குள் குழந்தையின் அழுகையை நிறுத்தி விடுகிறேன், பார்" என்றார் வீட்டுக்காரர்.

வீட்டுக்காரர் குழந்தையைக் கீழே விட்டு விட்டு அதன் அருகே எலிப் பொறியைக் கொண்டு வந்து வைத்தார். குழந்தை எலிப் பொறியைப் பார்த்து அழுகையை நிறுத்தியது. உள்ளிருந்த எலியைப் பார்த்துச் சிரிக்கவும் ஆரம்பித்தது. அங்கு வீட்டுக்கார அம்மாளும் வந்து எலிப் பொறியைச் சுற்றிச் சுற்றி வந்து சந்தோஷப்பட்டாள். "என்ன முன்னைப்போல் அசட்டுத்தனம் பண்ணாதீர்கள். இந்தத் தடவை குப்பைத் தொட்டிக்குள் கவிழ்க்காமல் வெகு தொலைவில் கொண்டு போய் இந்த எலியை விட்டுவிட்டு வாருங்கள். சனியன் இதோடு ஒழியட்டும். நம்ம வீட்டிலே நம்ம மூணு பேர் போதும். இன்னும் வேறு பிராணிகள் வேண்டாம். ஊருணிப் பக்கம் கொண்டு போய் விட்டு விட்டு மறு காரியம் பாருங்கள். பக்கத்தில் எங்கேயாகிலும் கொண்டு போய் விட்டு விட்டுத் 'திருக்குப் பிருக்' கென்று விழிக்காதீர்கள். நானும் அதற்குள்ளே அலமாரிக்குப் பின்னாலே

இருக்கிற சாமான்களை யெல்லாம் ஒழித்து வைத்து விடுகிறேன்" என்றாள்.

எலிப் பொறியை வீட்டுக்காரர் எடுத்துக் கொண்டதுமே அதற்குத் தாது விழுந்துவிட்டது. அது தன் குஞ்சுகளைப் பற்றி நினைத்துக் கொண்டதோ என்னமோ! வழியில் வாசற்படியில் ஒரு பூனை கத்தியது. அது அவரைத் தொடர்ந்தது. ஆனால் தெருவில் ஒரு நாய் குரைத்தது. அதைப் பார்த்தவுடன் பூனை மெல்ல நழுவியது. 'சரி இன்று பூனையோ நாயோதான் நமக்கு எமன்' என்று அந்த எலி நினைத்தது போலும். ஆனால் அந்த நாய்க்குக் கூட எலிப் பொறியைப் பின் பற்றி வருவதற்கான பொறுமை இல்லை. அது கொஞ்ச தூரம் வரை வீட்டுக்காரரைத் தொடர்ந்து வந்தது. பிறகு அது தானாகவே நின்று விட்டது. வீட்டுக்காரர் மௌனமாகத் தெருவில் சென்று கொண்டிருந்தார்.

எலி சுற்றுப் புறத்தைப் பார்த்தது. போகும் வழி தொலையாத வழியாக இருந்தது. சரி, அப்படி நாயிடமிருந்தும் பூனையிடமிருந்தும் தப்பினால்கூட மீண்டும் தன் வாசஸ்தலத்தை அடைந்து தன் குஞ்சுகளைக் கவனித்துக் காப் பாற்ற முடியுமா! எப்படியும் மீண்டும் வந்தால் இனி ஜாகையை மாற்ற வேண்டியதுதான். அவரை வைத்தல்லவா சித்திரம் எழுத வேண்டும்! ஆக, பொறிக் கதவைத் திறந்தவுடனேயே எப்படி யாவது சாடிப் பதுங்கிவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டது.

ஆயிற்று. வாருணியிலே வந்து விழும் வாய்க் கால்வரை வந்தார் வீட்டுக்காரர். அங்கு எலியை விடுவதுதான் சரியானது என்று அவர் எண்ணி யிருக்க வேண்டும், பொறியின் மூடியைத் திறந்து விட்டார். ஆயத்தமாகக் காத்திருந்த எலி கண நேரத்தில் குதித்துப் புல் தரிசில் சேர்ந்து வேக மாகப் போய் வாய்க்காலுக்குள்ளே விழுந்தது!

ஓடுகிற தண்ணீரில் போய் வலிய உயிரை மாய்த்துக் கொண்டதோ என்று தோன்றும்படி இருந்தது அதன் செய்கை.

வீட்டுக்காரர் பார்த்தார்; அவர் இளகிய மன முள்ளவர். வலியப் போய் ஏன் வாய்க்காலில் விழுந்து விட்டது என்பது அவருக்கு எளிதில் விளங்கவில்லை. எப்படியாவது தத்திப் பித்தி நீந் திக் கரை சேர்ந்துவிடும் என்றுதான் எதிர்பார்த் தார். ஆனால் ஏமாந்து திரும்பினார். வரும் வழி யில் ஒரு நூதன விவகாரத்தில் ஈடுபட்டிருந்தார். ஆம், வலியப் போய் அந்த எலி உயிரை மாய்த் துக் கொள்வானேன்!—என்பதுதான் அது.

அங்கு வீட்டில் அலமாரிக்குப் பின்னாலிருந்த சாமான்களை ஒழித்துக் கொண்டிருந்தாள் வீட்டுக் கார அம்மாள். எலிக் குஞ்சுகள் மண்ணெண் ணெய் டப்பாவுக் கருகே வசதியாக இருப்பதை அந்த அம்மாள் கவனித்தாள். அவளும் குழந்தை பெற்றவள்தானே! அவளுக்குத் தாய்மைப் பாசம் இன்னது என்று தெரியாதா! தெரியும். ஆனால் நடந்ததென்னமோ இதுதான்.

அவள் இவற்றை எடுத்து ஒரு முறத்தில் போட் டாள். இன்னும் ஒழிந்த குப்பை எல்லாவற்றை யும் அதில் போட்டாள். அடுத்த கணம் அவள் தெரு எதிரேயிருந்த குப்பைத் தொட்டியில் போய் அந்த முறத்தைக் கவிழ்த்தாள்.

அவளைக் குற்றம் சொல்லிப் பயன் இல்லை. மனித வர்க்கத்திலேயே தாயில்லாக் குழந்தைகள் படும் அவதி நமக்குத் தெரிந்ததுதானே! தாய் எலி போன பிறகு குஞ்சுகளைக் காப்பாற்றும் பொறுப்பை யார் ஏற்றுக் கொள்ளுவார்கள்!

பெரிய புராணப் பேருரை அரங்கேற்றம்

பூ. ஆலாலசுந்தரம்

தில்லை வெளியில் ஆனந்தக் கூத்தாடிய நடராஜப் பெருமான் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுக்க, சேக்கிழார் தாம் பெரிய புராணத்தைப் பாடத் தொடங்கினார். சிதம்பரத்தில் சபாநாதர் கோயிலின் ஆயிரக் கால் மண்டபத்தில் சித்திரை மாதம் திருவா திரை நக்ஷத்திரத்தில் தொடங்கி, அடுத்த சித் திரை மாதம் திருவாதிரையில் முடித்தனர் என் பதையும், பெரிய புராணத்தைச் செவி மடுத்து மகிழ்ந்த அநபாய சோழன் (இரண்டாம் குலோத் துங்கன்) சேக்கிழார் சுவாமிகளையும் திருத் தொண்டர் புராணத்தையும் யானை மீது ஏற்றித் தானும் பின் இருந்து கவரி வீசி ஊர்வலமாக வந்து சேக்கிழார் பெருமானுக்குப் பல சிறப்புகள் செய்தான் என்பதையும் உமாபதி சிவாச்சாரியார் அருளியுள்ள சேக்கிழார் புராணத்தால் நாம் அறி கின்றோம். எனவே பெரிய புராணம் அரங்கேற்றப் பட்ட சிதம்பரத்தில், ஆயிரக்கால் மண்டபத்தில் இந்த ஜய ஆண்டு சித்திரைத் திங்கள் 24-ம் நாள் திருவாதிரை நட்சத்திரத்தில் பெரிய புராணப் பேருரை வெளியிட்டு நிறைவு விழா அமைந்தது மிகவும் பொருத்தமாகும்.

பெரிய புராணப் பேருரை நிறைவு விழாவின் பொருட்டு அம்பலவாணர் கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தின் முகப்பிலும், செல்வ நெடு மாடங்கள் நிறைந்த தில்லையின் நான்கு திரு வீதி களிலும் பல காவணங்கள் (பந்தல்) போடப் பட்டன. ஒவ்வொரு காவணத்துக்கும் ஒரு பெயர் இடப்பட்டது. கிழக்குக் கோபுர வாயிலின் முன்னர் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் காவண மும், மேற்கு வீதியில் திருஞானசம்பந்தர், சுந்தரர் காவணமும், மேற்கு வீதியில் திருநாவுக்கரசர் காவணமும் அமைந்திருந்தன. இவைகளேயன்றி வடக்கு வீதியில் மெய்கண்டார், அருணந்திசிவம் காவணங்களும் போடப் பட்டன.

மே மாதம் ஆறும் நாள் வியாழக் கிழமை காலையில் திரு விழா தொடங்கியது. அலங் கரித்த யானை மீது பெரிய புராணப் பேருரைச் சுவடிகள் வைக்கப் பட்டன. அதன் முன்னர் சேக்கிழாரின் திருவுருவப் படம் விமானத்தில் புறப்பட்டது. பலவித வாத்தியங்கள் முழங்கத் தமிழ்நாடெங்கிலுமிருந்து வந்திருந்த பெரியார்கள் புடைசூழ ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து ஊர் வலம் புறப்பட்டது. பெரிய புராணப் பேருரை ஆசிரியர் சிவக் கவிமணி திரு சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் முன்னர் நடந்துவர அவ ரைச் சூழ்ந்து பல அடியவர் வந்தனர். இதற்குப் பின்னர் பல கோயில்களின் ஓதுவா மூர்த்திகள் பக்க வாத்தியங்களுடன் பன்னிரு திருமுறைகளை



மிக உருக்கமாகப் பாடி வந்தனர். நூற்றுக்கணக்கான மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

காலை பத்து மணிக்கு அடியார் பலரும் பொன்னம்பலம் வந்து சேர்ந்தனர். ஸ்ரீ நடராஜப் பெருமான் சன்னிதியில் ஸ்ரீ கல்யாணசாமி தீக்ஷிதர் பெரிய புராணப் பேருரை ஆசிரியர் சிவக்கவிமணி திரு சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி ஆசி கூறினர். அன்று பகல் ஆயிரக் கணக்கான ஏழை மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மாலை ஐந்து மணிக்கு ஆயிரக்கால் மண்டபத்தில் விழா மீண்டும் தொடங்கியது. திருஞான சம்பந்தர் மடாலயம் இளவரசுப் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக அடிகளார் விழாவுக்குத் தலைமை வகித்தார். செயற் குழுவின் தலைவரான திரு பி. டி. ராஜன் அவர்கள் வந்தவர்களை வரவேற்று "பெரிய புராணம் சைவ சமயத்தின் கருவூலம். இது ஒரு வரலாற்று நூல். இத்தகைய அரிய நூலுக்குப் பேருரை எழுதிய சிவக்கவிமணியவர்கள் தமிழ் நாட்டில் பொன்றாப் புகழ் பெற்றுள்ளனர்" எனக் கூறி முடித்தார். தலைமை வகித்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக அடிகளார் தமது தலைமை யுரையில் "சேக்கிழார் அரங்கேற்றிய தலத்தில் அதே நாளில் பெரிய புராணப் பேருரை அரங்கேற்று விழா நடைபெறுவது மிகவும் பொருத்தமாகும்" எனக் கூறிச் சிவக்கவிமணி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினர்.

அதன் பிறகு திருப்பனந்தாள், தருமபுரம், திருவாவடுதுறை, குன்றக்குடி, மயிலம், பேரூர் முதலிய மடங்களின் பிரதிநிதிகள் சிவக்கவிமணி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினர். செந்தமிழ்ப் புலவரும் புரவலரும் ஆகிய தேவகோட்டை மெய்யப்பச் செட்டியார் அவர்கள் பொன் கட்டுக் கட்டிடம் அமைந்த பெரிய புராணப் புத்தகம் ஒன்றைப் பரிசளித்தனர். திரு மெய்யப்பச் செட்டியார் அவர்களின் விருப்பப்படி பேராசிரியர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் அப் புத்தகத்தினைச் சிவக்கவிமணி அவர்களுக்கு வழங்கினர்.

பின்னர் பல சங்கங்களும் அன்பர்களும் சிவக்கவிமணி அவர்களுக்குப் பல பரிசுகளும் பாராட்டுரைகளும் வழங்கினர். இறுதியில் சிவக்கவிமணி அவர்கள் தம்மைப் பாராட்டிய நண்பர்களுக்கும் இப் பேருரை வெளிவருவதற்கு உதவி செய்த நண்பர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். முதல் நாள் விழா முடிவுற்றது.

இரண்டாம் நாள் விழா மறுநாள் காலை பன்னிரு திருமுறையோடு சேக்கிழார் திருவீதி உலா, தேவார பாராயணத்துடன் நடைபெற்றது. காலை பத்து மணிக்கு, திருஞானசம்பந்த நாயனார் திருஞானப் பாலுண்டருளிய திருவிழாவும் நடைபெற்றது. மாலை ஆறு மணிக்கு ஆயிரக்கால் மண்டபத்தில் விழா ஆரம்பமாயிற்று. அப்போது வரவேற்புக் குழுவின் சார்பில் சீர்காழி திரு சுப்பராய முதலியார் அவர்கள் வரவேற்புரை கூறினர். ஸ்ரீ டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் பாராட்டுரை கூறி "சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் ஆயிரம் ரூபாயை திரு முதலியார் அவர்களுக்கு வழங்கினர். பேராசிரியர் திரு ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் சிவக்கவிமணியின் பெருமுயற்சியைப் பாராட்டினர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திரு ஏ. இராமநாதப் பிள்ளை, தமிழ்ப் பேராசிரியர் திரு அ. சிதம்பரநாதச் செட்டியார், பேராசிரியர் திரு ஜி. சுப்பிரமணியப் பிள்ளை, திருவாசகமணி கே. எம். பாலசுப்ரமணியம், திரு எம். எஸ். பழனியப்ப முதலியார், திரு மீனாட்சி சுந்தர முதலியார், திரு எஸ். சின்னைய முதலியார், திரு தண்டபாணிப் பிள்ளை, ஸ்ரீமதி புஷ்பம் நடராஜன் முதலியோர் சிவக்கவிமணி அவர்களின் தொண்டினைப் பாராட்டிப் பேசினர்கள்.

அதன்பின் தமிழ்நாடு அறநெறித் திருக்கூட்டம், தில்லைத் திருமுறைக் கழகம், குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், சீர்காழி திருஞான சம்பந்தர் கழகம், மதுரை பன்னிரு திருமுறைக் கழகம் முதலிய கழகத்தினர் திரு முதலியார் அவர்களுக்குப் பாராட்டுரைகள் வழங்கினர். இறுதியில் சிவக்கவிமணி அவர்கள் இப்பேருரை வெளி வருவதற்குத் துணையாக இருந்த அன்பர்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். விழாக் குழுவின் செயலாளர் திரு. சி. எம். இராமச் சந்திரன் செட்டியார் விழாவில் கலந்து கொண்டு, சிறப்பித்த அனைவர்க்கும் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

சிவக்கவிமணி அவர்களின் பெரிய புராணப் பேருரை உயர்ந்த காகிதத்தில் 160 பக்கங்கள் கொண்ட சஞ்சிகைகளாக 1935-ம் ஆண்டு முதல் வெளிவந்துள்ளது. இதுவரை வெளிவந்த நாற்பத்துநாலு சஞ்சிகைகளும் 5,424 பக்கங்கள் கொண்டுள்ளன. நாற்பத்துநாலு சஞ்சிகைகளையும் ஆசிரியர் ஏழு பகுதிகளாகப் பிரித்து வெளியிட்டுள்ளார். கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக. சிவக்கவிமணி அவர்கள் இப்பேருரை வெளியீட்டில் ஈடுபட்டுள்ளார்கள். இப்பேருரையினைத் தமிழ்ப் பெரு மக்கள் பலரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.



13. விசாரணையும் விடுதலையும்!

சிறைவாசம் சுமதிக்குக் கொஞ்சமும் கஷ்டமாயில்லை. அரண்மனையில் இருப்பது போலவே யிருந்தது. அந்தந்த வேளைக்கு அரண்மனைக் காவலர்கள் அங்கு வந்து அவளுக்கும் பூபதிக்கும் வேண்டிய சகல சௌகரியங்களையும் கவனித்துக் கொண்டனர். ஸ்நானத்துக்குத் தினம் நறுமணம் ஊட்டப்பட்ட ஜலம் வேண்டிய அளவுக்குக் கொடுத்தார்கள். இருவருக்கும் வேண்டிய உடைகளும் கவனித்துக் கொடுக்கப் பட்டன. தினந்தோறும் இருவருக்கும் திவ்யமான சாப்பாடு பரிமாறப் பட்டது.

சுமதி சிறைக்கு வந்த தினத்திலிருந்து ரொம்பவும் உற்சாகமா யிருந்தாள். கட்டுக் கடங்காத மகிழ்ச்சியுடன் இனிய குரலில் பாட்டுப் பாடினாள்; பூபதியிடம் பேசினாள்; அவனையும் குழல் ஊதச் சொல்லிக் கேட்டு ஆனந்தித்தாள்.

ஆனால் பாவம், பூபதி மாத்திரம் உற்சாகங் குன்றி யிருந்தான்; அவன் ஊதிய குழலிசையும் உற்சாகத்தைக் குறைக்கும் மாதிரியிலேயே இருந்தது.

"பூபதி, நீங்கள் ஏன் முக வாட்டத்துடன் இருக்கிறீர்கள்? ஊர் நினைவு வந்து விட்டதா? உங்கள் மனிதர்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசையா யிருக்கிறதா?" என்று சுமதி கேள்வி மேல் கேள்வி கேட்டு அவனைத் திணற அடித்தாள்.

"சுமதி, எனக்கு ஊர் ஏது? உற்றார் ஏது? எல்லா ஊரும் என்னுடைய ஊர் தான். எல்லோரும் என்னுடைய மனிதர்கள் தான். நான் தான் யாருமற்ற அநாதை யாயிற்றே!" என்று கூறிப் பூபதி அலுத்துக் கொண்டான்.

சுமதி அவனிடம் நெருங்கி வந்து உட்கார்ந்து, "பூபதி, ராஜகுமாரியாகிய நான் உங்களுடன் இருக்கும் போது நீங்கள் எப்படி அநாதையானீர்கள்? உங்களுக்காக அரண்மனை வாழ்வையும் அரச போகங்களையும் துறக்கச் சித்தமா யிருக்கும் நான் உங்களுடன் இருக்கும் போது நீங்கள் எப்படி அநாதை யானீர்கள்?" என்று உணர்ச்சி பொங்கக் கேட்டு அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பூபதி உடனே அன்போடு அவளது தளிர்க் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டு, "சுமதி, ராஜகுமாரி! நீ சொன்னது உண்மை. உன்னுடைய அன்பை நான் பெற்று விட்ட பிறகு எப்படி அநாதையாவேன்? என் மன வருத்தத்துக்குக் காரணம் அதுவல்ல, சுமதி...!" என்று கூறிக் கண்களில் நீர் பெருக, நாத் தழுதழுக்கச் சற்று பேச்சை நிறுத்தினான்.

சுமதி ஆர்வமும் துக்கமும் கலந்த தொனியில், "பூபதி, உங்கள் மன வருத்தத்துக்குக் காரணம் என்ன? என்னிடம் சொல்லக் கூடாதா?" என்று கேட்டாள்.

"சுமதி, சொல்லத்தான் வேண்டுமா? என் மன .வருத்தத்துக்குக் காரணம்... நீதான்......!" என்றான் பூபதி.

இதைக் கேட்டதும் சுமதிக்கு இந்த உலகமே சுழல்வது போல் இருந்தது.

"பூபதி, உண்மையாகவா சொல்லுகிறீர்கள்?" என்று கண்களில் நீர் மல்கக் கேட்டாள் சுமதி.

"ஆமாம், சுமதி! இதில் பொய் என்ன இருக்கிறது?"

"ஆகா! அப்படியா? கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்கள். நானு உங்கள் மனவருத்தத்துக்குக் காரணம்? எனக்குக் கொஞ்சம் கூடப் புரியவில்லையே!" என்றாள் சுமதி.

பூபதி மிகவும் அமைதியாக, "சுமதி, கேள். நீ ராஜகுமாரி. மிகப் பெரிய தேசத்து மன்னனின் மகத்தான அன்புக்கு உரிய ஒரே மகள். உன் தந்தையான அரசருக்குப் பிறகு அரியாசனத்தில் அமர்ந்து அரசு புரிய வேண்டிய அரசி நீ. மலர் போன்ற மென்மை படைத்த உனக்குச் சிறை வாசமா? அதுவும் குற்றவாளியாகிய என்னால் நீ சிறைவாசம் அநுபவிப்பதா? இதுஎன்ன நியாயம்? சுமதி, உன்னை இக்கதிக்கு ஆளாக்கிய எனக்கு மன்னிப்பு உண்டா?" என்று கூறிச் சிறு பிள்ளை மாதிரி அழுது விட்டான்.



சுமதிக்கும் கண்ணீர் ஆருயப் பெருகியது. "பூபதி, இதற்குத்தானு வேதனைப் பட்டீர்கள்? முதலில் என்னால் தான் மன வேதனை என்று சொன்னதும் நான் என்னுனு தெல்லாம் எண்ணி விட்டேன். உங்களுடன் அநுபவிக்கும் சிறைவாசத்தைவிட அரண்மனை வாசம் எனக்கு எவ்வகையிலும் உயர்ந்ததல்ல; சிறையதிகாரி அன்று 'உன்னையும் சிறை செய்திருக்கிறேன்' என்று சொன்னதும் என் மனம் எவ்வளவு சந்தோஷமடைந்தது தெரியுமா? கப்பல் கொள்ளைக் காரர்களிடமிருந்து தப்பி எதிர்பாராவிதமாகப் பெற்றோர்களைக் கண்ட தினத்தில் கூட என் மனம் அவ்வளவு சந்தோஷம் அடையவில்லை."

பூபதியால் பதில் பேச முடியவில்லை. அவன் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. 'டடாங்' என்ற ஓசையுடன் சிறைக் கதவு திறந்து கொண்டது. சிறையதிகாரி உள்ளே வந்து, "உங்கள் இருவரையும் அரசர் விசாரிக்கப்போகிறார். அழைத்துவரும்படி உத்தரவு!" என்றார்.

உடனே பூபதியும் சுமதியும் பரபரப்புடன் அவரோடு வெளியே வந்து வெளியே தயாராயிருந்த அரண்மனைக் குதிரை வண்டியில் ஏறிக் கொண்டார்கள். வண்டி அரண்மனையை நோக்கிப் புறப்பட்டது.

அரண்மனையில் மன்னனும் ராணியும் மந்திரிமார்களும் இன்னும் சில முக்கியமான பிரமுகர்களும் அமர்ந்திருந்தனர்.

அரண்மனைச் சேவகன் பூபதியையும் சுமதியையும் அழைத்து வந்து அரசனுக்கு எதிரே நிறுத்தினான்.

அரசன் கம்பீரமான குரலில், "சுமதி, நீ ராஜகுமாரி. என் அருமை மகள். ஆயினும் நீதியின் முன்னால் நீ ஒரு சாதாரணப் பிரஜை. நீ ஒரு கைதியைத் தப்புவிக்க முயன்று, உத்தரவில்லாமல் இரகசிய வழியாகச் சிறைச் சாலைக்குள் புகுந்தது பெரும் பிழை. ஆனால் நல்ல வேளையாகக் கைதி தப்பி ஓடிவிடவில்லை. மேலும் நீ இன்னும் உலகம் தெரியாதசிறு பெண். நம் நீதிமன்றத்துப் பெரியோர்களின் அபிப்பிராயப்படி உனக்கு விசேஷத் தண்டனை எதுவும் இல்லை. ஒரு வாரத்துக்கு மேல் நீ சிறையில் இருந்ததே பெரிய தண்டனை அநுபவித்த மாதிரிதான். உனக்கு விடுதலை. பூபதி, நீ அரண்மனை நந்தவனத்தில் புகுந்து ராஜகுமாரியை அழைத்தது உண்மைதானு?" என்று கேட்டார்.

பூபதி, தலை நிமிர்ந்து "உண்மைதான், மகாராஜா!" என்றான். அத்துடன் நில்லாமல், "மகாராஜா, ராஜகுமாரிக்கு விடுதலை கிடைத்ததே போதும். என் மனம் இப்பொழுதுதான் நிம்மதியடைந்தது! நான் உத்தரவில்லாமல் அரண்மனை நந்தவனத்தில் நுழைந்து ராஜகுமாரியைப் பெயரிட்டு அழைத்தது பெரிய குற்றம். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். எனக்கு இனி என்ன தண்டனை விதித்தாலும் ஏற்கத் தயார்!" என்றான்.

"பூபதி, நீ பிழையை ஒப்புக்கொண்டுவிட்டபடியால் உனக்குக் கொடுக்கும் தண்டனை பற்றி நீதிமன்றம் யோசித்துப் பிறகு தெரிவிக்கும்!" என்றார் மகாராஜா. காவலர்கள் பூபதியை மீண்டும் சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

"அப்பா, இது நியாயமான தீர்ப்பல்ல! என்னையும் சிறைக்கு அனுப்புங்கள்" என்று அலறிக் கொண்டே கீழே விழுந்து சுமதி மூர்ச்சையானாள். (தொடரும்)

ஜம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு

வழக்கமான மாதாந்திர விஜயம்

நோயாளிகளின் சௌகரியத்தை முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்குறித்த ஊர்களுக்கு அதனதன் எதிரே குறித்த தேதிகளில் பிரதி மாதமும் விஜயம் செய்வதால் அவரிடம் ஆலோசனை பெறலாம்.

ஆலோசனை நேரம்: காலை 9-11 மணி; மாலை 3-5 மணி

இடம்	தேதி	இடம்	தேதி
கரூர்	1 காலை	காரைக்குடி	15 காலை & மாலை
நாமக்கல்	1 மாலை	தேவகோட்டை	16 காலை
சேலம்	2 காலை & மாலை	புதுக்கோட்டை	16 மாலை
ஈரோடு	3 காலை	தஞ்சாவூர்	17 காலை & மாலை
திருப்பூர்	3 மாலை	பட்டுக்கோட்டை	18 காலை
கோயமுத்தூர்	4 காலை & மாலை	திருத்துறைப்பூண்டி	18 மாலை
பாலக்காடு	5 காலை	மன்னார்குடி	19 காலை & மாலை
உடுமலைப்பேட்டை	5 மாலை	திருவாரூர்	20 காலை & மாலை
பழனி	6 காலை	நாகப்பட்டினம்	21 காலை
திண்டுக்கல்	6 மாலை	தன்னிலம்	21 மாலை
மதுரை	7 & 8 காலை & மாலை	மாயவரம் டவுன்	22 காலை & மாலை
கோவில்பட்டி	9 காலை	சீர்காழி	23 காலை
தூத்துக்குடி	9 மாலை	சிதம்பரம்	24 காலை & மாலை
திருநெல்வேலி	10 & 11 காலை & மாலை	கடலூர்	25 காலை & மாலை
அம்பாசமுத்திரம்	12 காலை	விழுப்புரம்	26 காலை & மாலை
தென்காசி	12 மாலை	திருக்கோயிலூர்	27 காலை
திருவனந்தபுரம்	13 காலை & மாலை	விருத்தாசலம்	27 மாலை
ராஜபாளையம்	14 காலை	காஞ்சீவரம்	28 காலை & மாலை
		வேலூர்	29 காலை & மாலை

விவரங்களுக்கு எழுதவும்:

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

சென்னை-4 ★ திருச்சிராப்பள்ளி (தெப்பக்குளம்) ★ கும்பகோணம் (பெரிய தெரு)

ஓவர்ஸீயர் கோர்ஸ்


எஸ். எஸ். எல். ஸி. மாணவர்கள் (தேறியவர்களும் தவறியவர்களும்) இந்த கோர்ஸுக்கு நேர்முக வகுப்பிலோ அல்லது தபால் மூலமோ சேர்ந்து படிக்கலாம். கலப்பு கணித பாடம் எடுத்திருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது.

மாணவர்களுக்கு 1955 ஏப்ரலில் நடக்கும் சென்னை மற்றும் ஆந்திர சர்க்கார் ஸிவில் இன்ஜினியரிங் பரீட்சைகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பரீட்சையில் தேறும் மாணவர்கள் ஓவர்ஸீயர் அல்லது டிராப்ட்ஸ்மன் வேலைக்குத் தகுதி பெறுகிறார்கள். இந்தப் பதவிக்கு மாதச் சம்பளம் ரூ. 70/- முதல் அதிகபட்சம் ரூ. 280/- கூட கிருக்கிப்படி ரூ. 24/- எங்கள் ஸ்தாபனம் மாணவர்களுக்குத் தகுந்த வேலைகளை வாங்கித்தர **உத்தரவாதமளிக்கிறது. தபால் மூலம் படிக்கும் மாணவர்களுக்கும்கூட செய்முறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஹாஸ்டல் உண்டு.**

பிராஸ்பக்டஸுக்கும் விண்ணப்ப நமூனுவுக்கும் **"பிரின்ஸிபால், மதராஸ் காலேஜ், 97, சாமி நாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்-2"** என்ற விலாசத்திற்கு எட்டு அணா மணியார்டர் செய்யவும். மணியார்டர் கூபனில் பெயர், விலாசத்தைக் கொட்டை எழுத்துக்களில் எழுதவும்.

ஸி. ஜி. பிந்துமாதவ ராவ்
B.Sc., B.E., A.M.I.E. (India)
பிரின்ஸிபால்

காலேஜ் 21-6-1954ல் ஆரம்பமாகிறது



வேலை கிடைத்தது!

ஸ்ரீ ஜயம்

உங்களுக் கெல்லாம், அதுவும் என்னைப் போன்ற 'படித்து வேலையில்லாதவர்'களுக்கு மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறதல்லவா? ஆம். உண்மையிலேயே எனக்கு வேலை கிடைத்தது மிகவும் ஆச்சரியமான விஷயம் தான். உங்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் கூடத்தான்.

ஆயிரக் கணக்கான பட்டதாரிகளும், பல்லாயிரக் கணக்கான இண்டர் மீடியட்களும், லக்ஷக் கணக்கான எஸ். எஸ். எல். ஸி. களும் மண்டிக் கிடக்கும் இந்தக் காலத்தில், ஒரு காலி இடத்துக்கு ஆயிரக் கணக்கில் படை யெடுக்கும் இந்தக் காலத்தில், ஒரு சாதாரண எஸ். எஸ். எல். ஸியான எனக்கு வேலை கிடைத்து விட்டது என்பதை என்னாலேயே இன்னும் நம்ப முடியாத போது, நீங்கள் எப்படி நம்புவீர்கள்? நான் வேலைக்கு அமர்த்தப் பட்டதை யறிந்த போது, "நவபாரத் மில்ஸ் லிமிடெட்"டின் விசாரணை ஆபீஸரே நம்பவில்லை யென்றால் இன்னும் நீங்கள் அதிகமாக ஆச்சரியமடைவீர்கள்.

என்னுடைய பெயர்தான் தனபதியே தவிர நான் வறுமைக்குத்தான் அதிபதியாக இருந்தேன். அதனால் எஸ். எஸ். எல். ஸிக்கு மேல் காலெடுத்து வைக்க முடிய வில்லை. மார்க்குகள் என்னவோ நிறையத்தான் வாங்கி யிருந்தேன். ஆனால் வேலை மட்டும் எனக்குக் கிடைக்கவே யில்லை.

இப்படியாக இரண்டு வருஷங்கள் ஓடி விட்டன. எனக்கு வேலை கிடைத்து விட்டது என்ற சந்தோஷச் செய்தியைக் கேட்காமலே, என்னுடைய தாயும் தந்தையும் நோயுற்று ஒருவர் பின் ஒருவராக இறந்து விட்டனர். இருந்த ஒரு சிறு வீடும், நான்கு மா நிலமும் கடன் கொடுத்தவர்கள் கைக்குப் போய் விட்டன. அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று ஏங்கக் கூடிய நிலைமையை நான் அடைந்து விட்டேன். இந்த நிலையில் சென்னையிலுள்ள என்னுடைய ஒன்று விட்ட மாமனிடம்-இயற்கையிலேயே எனக்குப் பிடிக்காதிருந்தும் - அடைக்கலம் அடைவதைத் தவிர வேறு வழி ஒன்றும் எனக்குத் தோன்ற வில்லை.

அவர் விரும்பி யிருந்தால். தம்முடைய செல்வாக்கை உபயோகப் படுத்தி, அதே ஊரில் எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்திருக்க முடியும். அல்லது, அவரும் இன்னும் நாலைந்து நண்பர்களுமாகச் சேர்ந்து கூட்டாக நடத்தும் தொழிற் சாலையிலாவது எனக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்திருக்கலாம். ஆனால் எவின வேலையைச் செய்யும் எடுபிடி ஆளாகத்தான் என்னை வைத்துக்

கொண்டிருந்தார். தம்முடைய பணக்கார நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் மத்தியில், என்னை அவருடைய உறவினன் என்றே காட்டிக் கொள்வதில்லை. என்னை ஒரு வேலைக்காரனை விடக் கேவலமாகத்தான் நடத்தினார். ஆனால் மாமி மட்டும் என்னிடம் அன்பாகத்தான் இருந்தார்கள். அந்த வீட்டில் மாமியின் அன்பு மட்டும் இல்லாம லிருந்தால் என்னால் ஒரு நிமிஷம்கூட இருந்திருக்க முடியாது. இப்படியாக இரண்டு வருஷங்கள் கடந்து விட்டன.

ஒரு நாள், அன்று மாமா தொழிற்சாலை சம்பந்தமாக வெளியூர் ஒன்றுக்குச் சென்றிருந்தார். மாமாவினுடைய நண்பர் ஒருவர், வீட்டுக்கு வந்தார். மாமா ஊரிலில்லை என்று அவரிடம் சொன்னேன்.

"தம்பி, நான் உன்னுடைய மாமாவைப் பார்க்க வரவில்லை. உன் மாமியிடமிருந்து உன்னைப் பற்றி எல்லா விஷயங்களையும் கேட்டுத்தான் தெரிந்து கொண்டேன். கோயமுத்தூர் 'நவபாரத் மில்'லின் மானேஜிங் டைரக்டருக்கு ஒரு கடிதம் தருகிறேன். போய் அவரைப் பார். நிச்சயமாக அவர் ஏதாவது செய்வார்" என்று கூறி ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்றார்.

உடனே மாமி, "தம்பீ! இந்த ஐந்நூறு ரூபாயையும் உன்னுடைய செலவுக்கு வைத்துக் கொள். அவரைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். உன்னுடைய சட்டை, வேஷ்டிகளையெல்லாம் எடுத்துக் கொண்டு இப்போதே புறப்படு" என்று கூறி, பணத்தையும் என்னிடம் கொடுத்தார்கள்.'

அப்போது வேலைக்காரி ஒரு பையை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தாள். அப்போதுதான் முன்னேற்பாடாகவே எல்லாம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. சங்கிலித் தொடர் போல ஏற்பட்ட நிகழ்ச்சிகளினால் ஏற்பட்ட பிரமிப்பு நீங்குவதற்குள்ளாகவே மாமி, இளம்பும்படி என்னைத் துரிதப் படுத்தினார்கள். வேலைக்குப் போகப் போகிறோம் என்ற எண்ணம் சந்தோஷத்தைக் கொடுத்தாலும் அன்பான மாமியை விட்டுப் பிரிய வேண்டுமென்ற எண்ணம் வருத்தத்தையே கொடுத்தது. மாமிக்கு நமஸ்காரம் செய்து, அவர்களின் ஆசியைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினேன்.

கோயமுத்தூரை அடைந்த எனக்கு ரயிலில் பிரயாணம் செய்ததாகவே தோன்றவில்லை. பறந்து வந்ததாகத்தான் தோன்றியது. முதலில் ஸ்நானம், சாப்பாடு முதலியவைகளை முடித்துக் கொள்ளவும், கையோடு கொண்டு வந்திருந்த பையை வைக்கவும், இரவில் தங்கவும் வசதியா யிருக்க வேண்டுமென்று ஒரு சின்ன ஹோட்டலில், ஒரு அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டேன்.

ஸ்நானம், சாப்பாடு எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு, சிபார்சுக் கடிதம், என்னுடைய யோக்யதா பத்திரங்கள் முதலியவைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

மில்லை அடைந்து, வாசலில் இருந்த கூர்க்காவைத் தாஜா படுத்திக் கொண்டு உள்ளே சென்றால், அங்கே ஒரு பெரிய நந்தி 'விசாரணை ஆபீஸராக' வழி மறைத்திருந்தது. அவரை மெல்ல அணுகி, "ஐயா, மானேஜிங் டைரக்டரைப் பார்க்க வேண்டும்" என்று விநயமாகக் கேட்டேன்.

"என்ன...?" என்று நிமிர்ந்து என்னைப் பார்த்து ஒரு ஏளனப் புன்னகையும் செய்தார். அவரது பார்வையும், சிரிப்பும் என்னுடைய நம்பிக்கையைத் தவிடுபொடியாக்கி விட்டன.

சிறிது நேரம் என்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு சிறிது கடுமையாகவே, "என்ன விஷயமாக அவரைப் பார்க்க வேண்டும்?" என்று கேட்டார்.

"அதை நேரே அவரிடம்தான் சொல்ல வேண்டும், ஐயா!"

"அப்படியா? அவரைப் பார்க்க முடியாது, நீர் போகலாம்!"

எனக்கு நெற்றிக் கண் மட்டும் இருந்து, அதற்கு எரிக்கக் கூடிய சக்தியும் இருந்திருந்தால் அவர் அந்த இடத்திலேயே சாம்பலாகியிருப்பார். ஆனால் எனக்குக் காரியம் ஆக வேண்டுமே, என்ன செய்வது! நான் வந்த விஷயத்தை, காலில் விழுந்து கெஞ்சாத குறையோடு கூறினேன்.

அவர் பதில் ஒன்றும் கூறாது, மேஜை மேலிருந்த டெலிபோனை எடுத்து ஏதோ ஒரு நம்பரைச் சுற்றி, நான் வந்திருக்கும் விஷயத்தை எடுத்துச் சொன்னார்.

இப்போது எனக்கு அவர் பேரில் இருந்த கோபமெல்லாம் பறந்து விட்டது. பதில் என்ன வருகிறது என்ற ஆவலோடு, காத்துக் கொண்டிருந்தேன்.

"மிஸ்டர், இந்தாங்க! நீங்கள் உங்கள் காதாலேயே கேட்டுக் கொள்ளுங்கள்!" என்ற ஆபீஸரின் சொற்கள் என்னை இந்த உலகத்துக்கு இழுத்துக் கொண்டு வந்தன. போன் குழாயை வாங்கிக் காதில் வைத்துக் கொண்டேன். காரியதரிசிதான் பேசினார். அதைக் கேட்கக் கேட்க எனக்கு இந்த உலகமே சுழல்வது போலிருந்தது.

எவ்வளவு நேரம் அப்படியே நின்றேனோ தெரியாது. "பாவம், பெரிய ஏமாற்றம். வேலை காலி யில்லை என்று சொல்லி விட்டாரா? போனை இப்படிக் கொடு, அப்பா!' என்று வாங்கிக் கொண்டார் விசாரணை ஆபீசர். அதன் பிறகுதான் எனக்குச் சுய உணர்வு வந்தது. அவரைப் பார்த்தேன். தம்முடைய வேலையில் அவர் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். அவரிடம் பேசவே எனக்கு வெட்கமாக இருந்தது. அவரிடம் ஒன்றும் பேசாமல் வெளியே வந்து விட்டேன்.



கால்கள் போன வழியில் நான் சென்று கொண்டிருந்தேன் இருந்த கடைசி நம்பிக்கையும் போய் விட்டது. மாமாவிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டதால் திரும்பவும் அங்கே போக முடியாது. மாமிக்கு விருப்பம் இருந்தாலும் மாமா கண்டிப்பாய் வெளியே துரத்தத் தயங்க மாட்டார். பணம் என்னவோ இருக்கிறது. நாலைந்து மாதங்களுக்குக் கவலை யில்லைதான். பிறகு......'' இப்படியாக ஓடியது என் சிந்தனை.

எதிர்ப்பட்டவர்கள் எல்லாரும் ''வேலை ஒன்றும் இல்லை, யாரையும் பார்க்கவும் முடியாது!'' என்று கூறுவது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது. திரும்பத் திரும்ப அதே வார்த்தைகள் என்னுடைய காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. எங்கே இருக்கிறோம், என்ன செய்கிறோம், என்னைச் சுற்றி என்ன நடக்கின்றன?—என்பனவெல்லாம் ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. கண் கூடச் சரியாகத் தெரியவில்லை. எல்லாம் மங்கலாகத் தெரிந்தன. யாரோ என்னைப் பிடித்துப் பலமாகத் தள்ளுவது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. சமாளிக்க முடியாமல் கீழே விழுந்து விட்டேன். ''ஐயோ! அம்மா!'' என்ற வார்த்தைகள் என்னை அறியாமல் வெளி வந்தன.

வெண் பஞ்சுப் பொதிகளைப் போன்ற மேகக் கூட்டங்கள் ஊர்ந்து செல்லுகின்றன. அவைகளை ஊடுருவி உயர உயர நான் போய்க் கொண்டிருந்தேன். நட்சத்திரங்களை எட்டித் தொட்டு விடக் கூடிய அளவு அவ்வளவு சமீபத்தில் இருக்கின்றன. திடீரென்று எங்கிருந்தோ ஒரு கரு மேகம் அதற்குக் குறுக்கே வருகிறது. ஒன்றுமே தெரியவில்லை!

ஒரு கட்டிலில் படுத்துக் கொண்டிருக்கிறேன். அந்தப் பஞ்சணைதான் எவ்வளவு மிருதுவாக இருக்கிறது! யாரோ ஒரு பெண்—அவள் தேவலோகத்துப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்—எனக்குப் பணிவிடை செய்கிறாள். ஆனால் வாய் திறந்து ஒரு வார்த்தை கூட அவள் பேசவே இல்லை. அப்பா! எவ்வளவு இதமாக இருக்கிறது! அப்படியே காலம் முழுவதும் இருந்து விட்டால் தேவலைபோல் இருந்தது!


பூமியிலிருந்து முளைத்தெழுந்தது போல என் அருகில் ஒரு கோரமான ராட்சத உருவம் தோன்றியது. அதன் கையில் ஒரு பளபளப்பான கத்தி. அம்மம்மா! பார்க்க ஒரே பயங்கரம்! கண்களை அப்படியே மூடிக் கொண்டேன்.

பிறகு கண்களைத் திறந்தபோது, என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை!

மாமி கீழே விழுந்து கிடக்கிறாள். மாமா கையில் ஒரு தடியுடன் நின்று கொண்டிருக்கிறார். என்னை அடிப்பதற்காக நெருங்கி வருகிறார். எனக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டன. ''ஐயோ! அம்மா!'' என்று அலறினேன். ஆனால் வார்த்தைகள் வாயை விட்டு வெளி வரவே இல்லை!

பக்கத்தில் யாரோ மனிதர்கள் பேசும் சப்தம் கேட்கிறது. கண்களைத் திறக்க முடியவில்லை. கைகால்களையும் அசைக்க முடிய

யாரிடம் பயம்?



வில்லை. ஆனால் பேசுவது மட்டும் நன்றாகக் காதில் விழுகின்றது.

"அப்பா! என்னால்தானே இவருக்கு இந்தமாதிரி ஏற்பட்டது! அதற்குப் பிராயச்சித்தமாக நம்ம மில்லிலேயே அவருக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்து விடுங்கள் அப்பா! எனக்கும் அப்போதுதான் மன நிம்மதி ஏற்படும்."

அப்பா! எவ்வளவு சந்தோஷமான வார்த்தைகள். என் வாழ் நாளிலேயே இவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய வார்த்தைகளைக் கேட்டிருப்பேனா என்பது சந்தேகமே! அந்த வார்த்தைகளில் தான் எவ்வளவு ஆதுரம் ததும்பி வழிந்தது!

"சரி, அம்மா! இந்தப் பையனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்து விடுகிறேன். இந்த விபத்து ஏற்படுவதற்கு நானும் ஒரு விதத்தில் பொறுப்பாளிதான். அதனாலே..."

"என்னப்பா, இது! நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே!"

"ஒன்றுமில்லை, அம்மா......மூர்த்தி நான்' ஒரு பையன் நம்ம மில்லுக்கு வேலை தேடிக் கொண்டு வந்தான். நான் பார்க்கவே முடியாது என்று சொல்லி விட்டேன். இந்தப் பையனுடைய சட்டைப் பையிலிருந்த ஒரு கடிதத்திலிருந்து, இந்தப் பையனாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதிலிருந்து நானே அந்த மாதிரி முடிவு செய்திருந்தேன். நீயும் இப்போது அதையே சொல்லி விட்டாய். கட்டாயம் அவனுக்கு வேலை கொடுத்து விடுகிறேன்."

எனக்கும் வேலை கிடைக்கப் போகிறது என்ற சந்தோஷத்திலே மூழ்கி விட்டேன். உடல் வேதனையெல்லாம் கூட மறைந்து விட்டது போல் தோன்றியது. சிறிது சிறிதாகப் பழைய சம்பவங்களெல்லாம் என்னுடைய நினைவுக்கு வந்தன.

மில்லிலிருந்து திரும்பி வரும் பொழுது, மனம் குழம்பிய நிலையி லிருந்ததால், தெருவில் தாறுமாறாகச் சென்று காரில் அடிபட்டிருக்கிறேன். என்னையே ஒரு தடவை பார்த்துக் கொண்டேன். பலமான அடிதான்! இல்லா விட்டால், தலையில் ஒரு கட்டு, கையில் ஒரு கட்டு, காலில் ஒரு கட்டு இப்படியாக மூன்று கட்டுகள் போட்டிருப்பார்களா?

காரணம் உங்களுக்குப் புரியவில்லையா? நான் அடி பட்டது "நவபாரத் லிமிடெட், கம்பெனியின் மானேஜிங் டைரக்டருடைய சீமந்த புத்திரியின் கார்தான்!

எனக்குப் பூரண குணம் ஏற்பட்டதும், நான் வேலையில் சேர்ந்து விட்டேன். எனக்குச் சம்பளம் ரூ. 120. 'நவபாரத் லிமிடெட்' கம்பெனியில் எனக்கு அவர்கள் கொடுத்த வேலை என்ன தெரியுமா?

நேரிலும், எழுத்து மூலமாகவும், வேலை கோருபவர்களுக்குத் "தற்சமயம் வேலை காலியில்லை" என்று பதிலளிப்பதுதான் என்னுடைய பிரதான வேலை!



லிப்டன்
டீ
கேர்ல்
LIPTON'S TEA GIRL
FINEST
INDIAN DUST TEA
சிறந்த ஸ்ட்ராங் டீ
தருகிறது
LTGX 26TM

அவர் செய்த உதவி

சீனிவாசன்

"என்ன ஸார்! காப்பி, டிபன் எல்லாம் முடிந்ததா?"

நான் அப்பொழுதுதான் ஹோட்டலை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தேன். என்னிடம் பேசியது யார் என்று தெரியாமல் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தேன்.

"உங்களைத்தான், ஸார்! எங்கே பிரமித்து நிற்கிறீர்கள்? உங்கள் அறைக்குப் போகலாம். வாருங்கள்" என்று கூறியபடி நண்பர் பரமசிவம் அருகில் வந்து சுவாதீனமாகத் தோள்மீது கையைப் போட்டார்.

ஒரே ஆபீஸில் வேலை செய்வதனால் இரண்டு பேரும் நண்பர்களானோம் என்பது தவிர மற்றப்படி இருவருக்கு மிடையில் அவ்வளவாகப் பழக்கம் அதிகம் இல்லை. ஆபீஸில் தவிர வெளியிடங்களில் நாங்கள் சந்தித்துக் கொள்வதுமில்லை. இன்று அவர் சுவாதீனமாக ஹோட்டலிலிருந்து என்னுடைய அறைக்கு என்னுடன் சேர்ந்து வந்தது சிறிது ஆச்சரியத்தை அளித்தது.

"ஏது ஸார், இன்று என்னைத் தேடி அபூர்வமாக வந்திருக்கிறீர்கள்?" என்று அறைக்கு வந்து அமர்ந்ததும் கேட்டேன்.

"நீங்கள் எனக்கு ஒரு சின்ன உதவி செய்ய வேண்டும். அதற்காகத்தான் காலையில் இவ்வளவு சீக்கிரம் உங்களைத் தேடிக் கொண்டு வந்தேன்!"

"என்ன உதவியென்று சொல்லுங்கள். முடிந்தால் செய்வதற்குத் தடையில்லை."

"உங்களால் முடிகிற காரியம் தான். தாண்டவராயன் தெருவில் வக்கீல் ராமாமிருதம் என்று ஒருவர் இருக்கிறார். தெரியுமா?" என்று கேட்டார் பரமசிவம்.

"அவர் வீட்டு வாசலில் போர்டைப் பார்த்திருக்கிறேன். ஆனால் நான் ஆளைப் பார்த்ததில்லை" என்றேன்.

"அதனால் பரவாயில்லை. நீங்கள் கொஞ்சம் அவரிடம் சென்று குடுமியா பிள்ளை தெருவிலுள்ள காலியாயிருக்கும் அவருடைய வீட்டை வாடகைக்குக் கொடுக்க முடியுமா என்று கேட்கவேண்டும். வக்கீல் என்னவோ 'வீடு காலியில்லை, யாரோ குடிவரப் போகிறார்கள்' என்றுதான் சொல்லுவார். நீங்கள் தான் விடாப்பிடியாக இருந்து காரியத்தைச் சாதித்துக் கொண்டு வரவேண்டும்."

"அது சரி. வீட்டை எனக்கு வேண்டும் என்றா கேட்கச் சொல்கிறீர்கள்?" என்று அவரிடம் வினவினேன்.

"உங்களுடைய நெருங்கிய நண்பர் ஒருவருக்கு என்று சொல்லிக் கேளுங்களேன். சில அசௌகரியங்களினால் என்னால் அவர் வீட்டுக்குப் போகக் கூடாமல் இருக்கிறது. இல்லாவிட்டால் உங்களைத் தொந்தரவு செய்யவே மாட்டேன்" என்று கூறிவிட்டு, "சரி! நான் வரட்டுமா? இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குள் உங்களுக்குச் சௌகரியப்பட்ட போது அவரைப் பார்த்து விசாரியுங்கள்" என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக் கொண்டார்.

மறுதினம் காலை நான் தாண்டவராய பிள்ளை தெருவுக்குள் காலடி எடுத்து வைத்த போது ஆக்ரோஷமாக ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்டிருந்த இரண்டு சொறி நாய்கள் பயங்கரமாகக் குரைத்து என்னை வரவேற்றன.

வக்கீல் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த ஒருவர் என்னைக் கண்டதும் ஒருமுறை தலையிலிருந்து கால்வரை ஏற இறங்கப் பார்த்தார். பின்னர் உள்ளங் காலிலிருந்து உச்சி வரை மறுபடியும் கண்ணோட்டம் விட்டார்.

இரண்டு நிமிஷம் கழித்துச் சாவதானமாக அவர், "கிரிமினலா, சிவிலா?" என்று என்னிடம் கேட்டார்.

நான் விழித்தேன். வீடு வாடகைக்குக் கேட்கும் விஷயம் இரண்டில் எதைச் சேர்ந்தது என்று வாஸ்தவத்திலேயே எனக்குப் புரியவில்லை.

"வக்கீல் சாரிடம் வேறு விஷயம் பற்றிக் கொஞ்சம் பேச வேண்டும்" என்று நான் சொன்னேன். உடனே அவர் என்னைப் பின் தொடர்ந்து வருமாறு ஜாடை காட்டிவிட்டு வீட்டுக்குள் நுழைந்து போனார். ஒரு அறை வாசலில் போய் அவர் நின்று "உள்ளே வக்கீல் இருக்கிறார்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

நான் வக்கீல் ராமாமிருதத்திடம் என்னை அறிமுகப் படுத்திக் கொண்டு வந்த விஷயத்தைப் பற்றிச் சொன்னேன்.

"என்னது வீடா! அது காலியா யிருக்கிறதென்று உங்களுக்கு யார் சொன்னது?" என்று அவர் அதட்டினாற்போலக் கேட்டார்.

"எப்படியோ சமாசாரம் காதில்விழுந்தது. தவிர நானே நேற்று அந்த வீடு பூட்டி இருந்ததை என் கண்ணால் பார்த்தேனே! வீட்டில் யாராவது குடி யிருந்தால் அதைப் பூட்டியா வைத்திருப்பார்கள்?" என்று தைரியமாக அடித்துப் பேசினேன்.

வக்கீல் ஒரு கணம் சிந்தனையில் ஆழ்ந்தவர் போலக் காணப்பட்டார். பிறகு தனக்குத் தானே பேசிக் கொள்வதுபோல் "இவரையும் சேர்த்து இது விஷயமாக வந்தவர்களின் தொகை ஐந்து ஆகிறது. யார் இப்படிக் கிளப்பி விட்டிருக்கிறார்கள், தெரியவில்லையே!" என்று வாய் விட்டு மெதுவாகச் சொன்னார்.

"நீங்கள் கண்டிப்பாக என் நண்பருக்கு அந்த வீட்டைக் கொடுத்துத்தான் ஆக

வேண்டும். அவர் பாவம், வீடு கிடைக்காமல் ஆறு மாசமாக ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு திண்டாடிக் கொண்டிருக்கிறார். நீங்கள் இந்த உபகாரம் செய்தால் பெரும் புண்ணியத்தைக் கட்டிக் கொள்வீர்கள்'' என்று அவரிடம் ஏதேதோ பேசிக் கொண்டே போனேன்.

வக்கீல் ராமாமிருதம் 'சடக்' கென்று நாற்காலியிலிருந்து எழுந்து நின்றார். நான் பேச்சை நிறுத்தினேன். ''வீடு காலியாயிருந்தால்தானே உங்கள் நண்பருக்குக் கொடுப்பதற்கு? நீங்கள் என்னவோ நான் சொன்னால் நம்ப மாட்டேன் என்கிறீர்கள். வேண்டுமானால் அடுத்த வாரம் இதே கிழமையன்று அந்த வீட்டைப் போய்ப் பாருங்கள், பூட்டியிருக்கிறதா என்று. அதற்குள் அந்த வீட்டில் குடியிருப்பவர்களும் ஊரிலிருந்து திரும்பி வந்து விடுவார்கள்'' என்று கூறி ஒரு பெரிய கும்பிடு போட்டு என்னை அனுப்பி வைத்தார் வக்கீல்.

இனிமேல் வாதாடிப் பயனில்லை என்று நான் அறையை விட்டு வெளியே வருவதற்கும் அறைவாசலிலிருந்து, கைவளைகள் குலுங்க, ஒரு இளம் பெண் வீட்டின் உள்புறத்தை நோக்கிப் பரக்கப்



பரக்க நடந்து சென்று மறைவதற்கும் சரியாக இருந்தது. அந்தப் பெண்ணுக்கும் நாங்கள் பேசிக் கொண்டிருந்த விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்? அவள் ஏன் எங்கள் சம்பாஷணையை ஒட்டுக் கேட்க வேண்டும்? இந்தக் கேள்விகளுக்கு விடை தெரியாமல் குழம்பிய மனத்துடன் என்னுடைய அறைக்குச் சென்றேன்.

அன்றும் மறுதினமும் ஆபீஸ் விடுமுறை நாட்களானபடியால் நண்பர் பரமசிவத்தை என்னால் சந்தித்து அவரிடம் விஷயத்தைச் சொல்ல முடியவில்லை.

மறுதினம் சாயந்திரம் நான் ரஸ்தாவில் நடந்து கொண்டிருந்த போது முதுகில் 'பளா'ரென்று ஒரு அறை பலமாக விழவே துடிதுடித்துப் போய் ஒரு கணம் செயலிழந்து திகைத்துப் போய் நின்று விட்டேன்.

''என்ன ஸார், ஜமாய்த்து விட்டீர்களே?'' என்று கூறியபடி பிரசன்ன வதனத்துடன் என் முன் ஆஜரானார் பரமசிவம். அருகில் நெருங்கி வந்து அன்புடன் என் பிடரியில் கையை வைத்தார்.

அடுத்தகணம் அருகிலிருந்த ஹோட்டல் ஒன்றிற்குள் மின்னல் வேகத்தில் பறந்து கொண்டிருப்பது போல் உணர்ந்தேன். என்னை ஒரு நாற்காலியில் தள்ளித் தானும் ஒன்றில் அமர்ந்து கொண்டார் பரமசிவம்.

அரைமணி நேரம் கழித்து ஒருவாறு நண்பரின் கைத் தாங்கலில் ஹோட்டலை விட்டு வெளியே வந்தேன்.

''நான் போய் வந்த காரியத்தைப் பற்றி நீங்கள் ஒன்றும் கேட்கவே இல்லையே...!'' என்று மெல்ல இழுத்தேன்.



''எல்லாம் எனக்குத் தெரியும், ஐயா! நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அடுத்தபடியாக நீர் செய்ய வேண்டியது ஒரே ஒரு காரியம் தான். வருகிற ஞாயிற்றுக்கிழமை தவறாமல் மத்தியான சாப்பாட்டுக்கு நம் வீட்டுக்கு வந்து விட வேண்டியது!'' என்று சொல்லித் தன் வீட்டு விலாசத்தைக் கொடுத்தார். எங்கே நான் வர மறந்துவிடப் போகிறேனோ என்று என் முதுகில் ஆழமாக ஒரு 'ஷொட்'டையும் பதிய வைத்துச் செல்ல அவர் மறக்கவில்லை!

நான் எதிர்பார்த்த மாதிரியே அவர் வீடு குடுமியாபிள்ளை தெருவில் இருந்தது!

ஞாயிற்றுக் கிழமை காலை நான் தவறாமல் அவர் வீட்டுக்கு ஆஜரானேன் என்று சொல்லத் தேவையில்லை. என்னை ஹாலில் நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு உள்புறம் விரைந்தார் பரமசிவம்.

என்னைச் சுற்றி ஒரு முறை பார்த்துக் கொண்டேன். ஹாலின் நடுநாயகமாக மாட்டியிருந்த புகைப்படம் ஒன்று என் கவனத்தை இழுத்தது. அருகில் சென்று

பாரதி வாக்கு—1

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு. கீர்த்தி. வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கி யிருந்ததையும் நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அமையுங்கள்.

பார்த்தபொழுது அது நண்பர் பரமசிவத்தின் கல்யாணப் புகைப்படம் என்று தெரிந்தது.

என் மனத்தின் உள்ளிருந்து ஏதோ ஒன்று கூறியது புகைப்படத்தில் காணப்படும் நண்பரின் மனைவிக்கும் அன்று நான் வக்கீல் ராமாமிருதத்தின் வீட்டில் பார்த்த பெண்ணுக்கும் உருவ ஒற்றுமை இருக்கிறது என்று.

அதைப்பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே என்னைச் சாப்பிட அழைக்கப் பரமசிவம் வந்து விட்டார். இலை முன் அமர்ந்ததுமே அவர் தம் மனைவியிடம், "கல்பகம்! இவர் மட்டும் உதவி செய்திருக்கா விட்டால் நாம் இங்கே தனிக் குடித்தனம் வந்திருக்கவே முடியாது. நான் பாட்டுக்கு ஹோட்டல் சோறே கதியென்று இருந்திருக்க வேண்டியதுதான்!" என்றார்.

எனக்கு ஒன்றும் புரிய வில்லை. நான் போன காரியம் அபஜெயமாக முடிந்தபோது, தனிக் குடித்தனம் போட நான் அவருக்கு உதவினேன் என்பது எப்படிப் பொருந்த மாகும்......?

சாப்பிட்டு விட்டுக் கையலம்பிய உடனே நண்பர் பரமசிவத்தை இது பற்றித் தூண்டித் துருவிக் கேட்கையில் அவர் சொன்னது கதை போலச் சுவாரஸ்யமாயிருந்தது.

வக்கீல் ராமாமிருதத்தின் ஒரே பெண்ணை கல்பகத்துக்கும் பரமசிவத்துக்கும் கல்யாணமாகி இரண்டு வருஷங்களாகி விட்டன. கல்யாணத்துக்கு முன்னால் பரமசிவம் ஆபீசுக்குப் பக்கத்திலிருந்த தூரத்து உறவினர் ஒருவர் வீட்டில் ஜாகை வைத்துக் கொண்டு, ஹோட்டலில் சாப்பிட்டுக் காலத்தைக் கழித்து வந்தார்.

மணமான கையோடு, மனைவியுடன் தனிக் குடித்தனம் போக வேண்டும் என்று அவர் விரும்பியது நியாயந்தானே? ஆனால் அவர் மாமனார் என்னவோ அதைப் பற்றிப் பிடி கொடுத்தே பேச வில்லை,

ராமாமிருதம் ஒரு விசித்திர சுபாவமுள்ள மனிதர். அவருக்குச் சொந்தமான வீடு ஒன்று குடுமியா பிள்ளை தெருவில் வெகு நாட்களாகக் காலியாக இருந்தது. அதை வாடகைக்குக் கேட்பவரிடமெல்லாம் 'பெண்ணும் மாப்பிள்ளையும் குடி வர இருப்பதால் தர இயலாது' என்று கூறி விட்டார். ஆனால் தம் அருமை மகளைப் பிரியும் உத்தேசம் அவருக்குக் கொஞ்சமும் இல்லை!

மாப்பிள்ளையைத் தம் வீட்டோடு வைத்துக் கொண்டு விடலாம் என்ற எண்ணத்தோடு தான் அவர் ஒண்டிக் கட்டையான பரமசிவத்தைத் தம் பெண்ணுக்குத் தேர்ந்தெடுத்தார். ஆனால் தன்மானமுள்ள பரமசிவம் இதற்கு ஒத்துக் கொள்ளாமல் போகவே, மாமனாருக்கும் மாப்பிள்ளைக்கு மிடையில் கொஞ்சம் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது. அதன் பலனாகக் கல்பகம் ஒரு பக்கமும் பரமசிவம் மற்றொரு பக்கமும் ஏகாங்கியாக வாழ்க்கை நடத்த வேண்டியதாகி விட்டது.

அன்று ஹோட்டலில் சாப்பிடும் போது, இலையில் வந்து விழுந்த பீங்கான் துண்டு ஒன்று பரமசிவத்தைத் தீவிரமாகச் சிந்திக்கத் தூண்டி விட்டது! சிந்தனையின் முடிவில் மாமனாரை மசிய வைப்பதற்கான யோசனையொன்றும் உருவாகி விட்டது.

அந்த ஏற்பாட்டின்படி பரமசிவம் தன் நண்பர்கள் நான்கு பேரை அடுத்தடுத்து ஒரே தினத்தில் குடுமியா பிள்ளை தெருவிலுள்ள வீட்டை வாடகைக்கு விடுவது சம்பந்தமாக வக்கீல் ராமாமிருதத்தைப் போய்ப் பார்க்க ஏற்பாடு செய்தார். அவர்கள் சென்றதனால் விசேஷப் பலன் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை.

"அதனால்தான் ஸார், ஐந்தாவது நபராக உங்களை அனுப்பத் தீர்மானித்தேன். நீங்கள் என் மாமனாரைச் சந்தித்ததைப் பற்றி என் மனைவி எனக்குக் கடிதமெழுதி யிருந்தாள். நீங்கள் வந்துபோன அடுத்த நாளே அவர் என்னை டெலிபோனில் கூப்பிட்டுச் சாயந்திரம் வீட்டுக்கு வரும்படி சொன்னார். நான் அவ்வாறே சென்றதும், மறுதினம் நாள் நன்றாயிருப்பதால் குடுமியா பிள்ளை தெருவிலுள்ள வீட்டுக்கு மறுநாளே நான் தனிக் குடித்தனம் போய் விடலாமென்று கூறினார். எனக்கு அப்போது ஏற்பட்ட ஆச்சரியம் கொஞ்ச நஞ்சமல்ல!" என்று விறுத்தினார் பரமசிவம்.

"கெட்டிக்காரர் ஸார் நீங்கள்! எப்படியோ உங்கள் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டீர்கள். ஆமாம், உங்களுடைய மற்ற நான்கு நண்பர்களையும் விருந்துக்குக் கூப்பிடவில்லையா?" என்று கேட்டேன்.

"கூப்பிட்டாலும் அவர்கள் வரமாட்டார்கள், ஸார். நிஜமாகவே வாடகைக்கு வீடு தேவைப் படுபவர்கள் அவர்கள். நான் இங்கே வந்து விட்டது அவர்களுக்குப் பொறுமையாகக் கூட இருக்கும்" என்றார் நண்பர் சிரித்துக் கொண்டே.

"நீங்களும் உங்களுடைய ஹாஸ்யமும் நெடுங்காலம் வாழ்க!" என்று வாழ்த்தி விட்டு என் அறைக்குக் கிளம்பினேன்.




நான் கிளாக்ஸோவை சிபார்சு செய்கிறேன்

உஷ்ண தேசங்களில் உள்ள குழந்தைகளுக்கென்றே பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ள கிளாக்ஸோ மிகவும் சுத்தமான பால் உணவு. மேலும் ஒழுங்காக சமநிலையாக்கப்பட்டது. புதிய பசும்பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட கிளாக்ஸோவில் அயமும், விடமின் 'டி' யும் சேர்ந்திருப்பதால், இரத்தசோகை (அனிமியா), ரிக்கெட்ஸ் போன்ற வியாதிகளிலிருந்து பாதுகாக்கிறது. கிளாக்ஸோ தாய்ப்பாலைப்போல் இருப்பதால் அது கொடுக்கப்படும் குழந்தைகள் ஆரோக்கியமாகவும், திடகாத்திரத்தோடும், குதூகலமாகவும் வளருகின்றனர்.

Glaxo

கிளாக்ஸோ குழந்தைகளுக்கான சிறந்த உணவு



பாரெக்ஸ் தாய்மார்களுக்கு ஓர் முக்கிய செய்தி! குழந்தைகளுக்கு முதலாவதாக கொடுக்க வேண்டிய கெட்டியான உணவு இந்தியாவில் மறுபடியும் விற்கப்படுகிறது.

கிளாக்ஸோ லெபாரட்டரீஸ் (இந்தியா) லிமிடெட் பம்பாய், கல்கத்தா, மதறாஸ்



வீரக் கோழி

நா. ராமச்சந்திரன்

'நேற்று நான் நடந்து கொண்ட விதம் சரி தானா!'—இந்த ஒரு கேள்விதான் பெரும் பிரச்னையாகச் சாம்பசிவத்தின் முன் எழுந்து நின்றது. அதற்குத்தான் அவனால் இறுதி விடை காண முடியவில்லை. சில சமயம் தான் செய்தது 'சரி' என்று அவனுக்குப் பட்டாலும்,பல சமயங்களில் உள்ளம் அதைத் தவறு என்று எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

சாம்பசிவத்தின் தந்தை ஒரு பழைய திவான் பகதூர். பட்டத்தை அவர் துறந்து விட்டாலும், அது அவரை விடுவதாகக் காணோம். பெயரோடு எப்பொழுதும் அது ஒட்டி நின்றது.

திவான்பகதூர் தினகரத்தின் கறுக்கு மீசையைப் போன்றதுதான் அவர் வார்த்தைகளும். பன்னிப் பன்னிப் பேசிக் கொண்டிருக்கும் வழக்கம் அவரிடம் இல்லை. வெண்ணெயை வெட்டுவதைப் போலத்தான் பேசுவார். அவர் சொல்வதில் அர்த்தம் இருக்கிறதோ இல்லையோ, அதைப் பின்பற்றித்தான் எல்லோரும் நடக்க வேண்டும். பதில் வார்த்தைகளோ எதிர்ப் பேச்சுக்களோ பேசினால் அவ்வளவுதான், காரியமே கெட்டு விடும்.

அப்பேர்ப்பட்ட தினகரம், தன் சீமந்தப் பிள்ளை சாம்பசிவத்துக்கு ஒருநாள் கடிதம் எழுதினார். பொறுக்கி எடுத்தது போல் மூன்றே வாக்கியங்கள். 'உனக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யலாம் என்று உத்தேசம். பெண் உள்ளூர்தான். இந்தக் கடிதம் கண்டவுடன் புறப்பட்டு வரவும்.' கீழே கோணலுமாணலுமான கையெழுத்து.

சாம்பசிவம் கடிதத்தைப் படித்தவுடன் பரபரப்படைந்தான். அவனால் கடிதத்தின் சாரத்தை ரசிக்க முடியவில்லை. ஏனெனில் சந்தர்ப்பம் அப்படி இருந்தது. அவனுடைய உயிருக்குயிரான நண்பன் சரவணபவானந்தத்தின் கல்யாணம் ஏற்பாடாகிக் கொண்டிருந்த சமயம் அது. சரவணபவானந்தம், ஒருத்தியைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ள இருந்தான். அவர்களுடைய காதல் வளர்பிறைச் சந்திரன் போல் வளருவதற்கு ஏது செய்தவன் சாம்பசிவம். எனவே அவன் போகாமல் அவர்கள் கல்யாணம் எப்படி நடக்கும்!

கடிதத்தைப் படிக்கப் படிக்கச் சாம்பசிவம் ஆத்திரமடைந்தான். "இப்போது வருவதற்குச் சௌகரியமில்லை என்று எழுதி விடுகிறேன்..." என்று தனக்குள் உறுமிக் கொண்டான். ஆனால் கடிதத்தில் எண்ணங்களை வடிக்கப் புகும்போது தந்தையின் கறுக்கு மீசை தோன்றிற்று. மீசை தோன்றும் போதெல்லாம் சாம்பசிவத்தின் கைகள் ஆட்டங் கண்டன.

சிறு வயது முதல் இதுவரை தந்தையின் பேச்சுக்குச் சாம்பசிவம் பணிந்து வந்திருக்கிறான். இப்போது அவரை விரோதித்துக் கொள்ள அவனுக்கு மனமில்லை. அவரைத் திருப்தி செய்வதற்காகவாவது ஊருக்குச் சென்று உடனே திரும்பி விடுவது என்ற நோக்கத்தில் சரவணபவானந்தத்திடம் விடைபெற்றுக் கொண்டான். சரவணபவானந்தம் அவனை ஊருக்கு அனுப்பும்போது, "சாம்பசிவம்! நாளைக்கு நீ வந்த பிறகுதான் உமாவுக்கு நான் தாலி கட்டுவேன். ஞாபகத்தில் வைத்துக் கொள்!" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டுத்தான் அவனைப் 'போய் வா' என்றான். உமா மட்டும் சரவணபவானந்தத்துக்குச் சளைத்தவளா! "மிஸ்டர் சிவம்! நீங்கள் வந்த பிறகுதான் அவர் முன் தாலிக்காக நான் தலையை நீட்டுவேன்!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினாள். தம்பதிகளாக ஆகப் போகும் சரவணபவானந்தம்—உமா ஆகியோரின் உண்மை அன்பில் தன் உணர்வைக் கூட இழந்து ரயில் ஏறினான் சாம்பசிவம்.

2

"நீதான்டா என் பிள்ளை!" என்று சொல்லிக் கொண்டே வரவேற்றார் திவான் பகதூர், சாம்பசிவத்தை. அதில் எத்தனை எத்தனையோ அர்த்தங்கள் இருப்பதாக அவர் எண்ணம்.

"உங்கள் பிள்ளையாக இருப்பதால் தான் ரயில் கூட என்னைத் தூக்கிக் கொண்டு ஒரு மணி முன்னதாக வந்து விட்டது!" என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது சாம்பசிவத்துக்கு. ஆனால் துணிந்து கூறத் தைரியமில்லை.

"என்னடா சாம்பசிவம், என்னமோ மாதிரி இருக்கிறாயே! கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்.

மத்தியானம் அங்கு போக வேண்டும்'' என்றார் தினகரம் தம் மகனைப் பார்த்து.

"கல்யாணத்துக்கு என்னப்பா அவசரம்!'' என்று இழுத்தான் சாம்பசிவம்.

"நீ குழந்தை இல்லையா! போடா...எனக்குப் பொறுப்புத் தெரியும்'' என்று சொல்லிக் கொண்டே விடுவிடு என்று மாடிக்குப் போய் விட்டார் தினகரம். அவருக்குத் தெரியும், தம்முடைய பேச்சுக்குச் சாம்பசிவம் எதிர்ப் பேச்சு பேச முடியாதென்று.

தினகரம் அவர்கள் போட்டிருந்த திட்டப்படியே மாலை மூன்று மணி சுமாருக்குக் கார் அவர் பங்களாவை விட்டுக் கிளம்பிற்று. அந்த மோட்டார் காரில் ஸ்ரீமான் தினகரம், ஸ்ரீமதி தினகரம், சாம்பசிவம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். திவான்பகதூர் வழக்கப்படி அரையில் பஞ்சகச்ச வேஷ்டியும், மேலுக்குக் கழுத்துப் பட்டை வரை பித்தான்கள் உள்ள நீண்ட கோட்டையும் அணிந்திருந்தார். வழுக்கைத் தலையை மறைக்கத் தலைப்பாகையும், பழைய திவான்பகதூர் பாணியில் வெள்ளிப் பூண் போட்ட கைத் தடியும் அது அது இருக்க வேண்டிய இடத்தில் அமர்ந்திருந்தன.

கார் மற்றொரு பங்களா வாசலில் போய் நின்றவுடன் முதலில் சாம்பசிவம் இறங்கினான். வெள்ளை நிறத்தில் 'ஸாடின் பேண்டு'ம் நீலத்தில் அமைந்த 'ஸில்க் புஷ்' சட்டையும் மினுமினுக்கிக் கால்களில் இருந்த 'ஸிலிப்பான்'கள் கிரீச் கிரீச் என்று சப்திக்க அவன் மிடுக்காக நடந்து படிகளில் ஏறின போது "வாருங்கள், வாருங்கள்!'' என்று ராவ் சாகிப் ரவிசங்கர் எல்லோரையும் வரவேற்றார்.



சாம்பசிவத்துக்கு மனத்தில் ஏனோ உற்சாகமில்லை. எண்ணங்களும், மனமும் சரவணபவானைச் சுற்றிடும். உமாவின் மீதும் இருக்கும்போது அவனால் நிகழ் காலத்தை அநுபவிக்க முடியவில்லை. திரும்பித் திரும்பித் தன் தந்தையைப் பார்த்துக் கொண்டான். ஒவ்வொரு சமயம் அவரைப் பார்க்கும்போது அவர்மீது அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

டிபன் காப்பி உபசாரங்கள் ஆன பிறகு ரவிசங்கர் தம் பெண் கிரிஜாவைக் கூட்பிட்டார்.

கிரிஜா ஹால் பக்கம் வந்து எல்லோருக்கும் வணங்கினாள். சாம்பசிவம் அவளை ஏறிட்டுப் பார்த்தான். நீண்ட மூக்கு, நிமிர்ந்த நடை, ஸ்படிகம் போன்ற தேக அமைப்பு. இவை யாவற்றையும் கண்டு கொண்டான். தன்னையும் கிரிஜா சரிவரப் பார்த்துக் கொள்ளட்டும் என்று புகைப் படத்துக்கு 'போஸ்' கொடுப்பதைப் போல் சற்று நேரம் ஆடாமல் அசையாமல் ஜம்மென்று உட்கார்ந்து கொண்டான்.

கிரிஜா சிறிது நேரம் கழித்து உள்ளே போய் விட்டாள். "ஒரு பாட்டுப் பாடச் சொல்லட்டுமா!'' என்று ராவ்சாகிப் கேட்டபோது திவான் பகதூர் சுறுக்கென்று "அதெல்லாம் வேண்டாம்'' என்று தம் கைத் தடியைச் சுற்றிக் கொண்டே சொல்லி விட்டார்.

"என்ன சாம்பசிவம்! சம்மதம்தானே!'' என்று கேட்டார் திவான்பகதூர்.

"சம்மதம் இல்லாமல் என்ன! கிரிஜாவைக் கட்டிக் கொள்ளக் கசக்குமோ!'' என்றார் ராவ் சாகிப் ரவி சங்கர்.

சாம்பசிவம் திடுக்கிட்டுப் போனான். தன் தந்தை சம்மதமா என்று கேட்பதும், அதற்குப் பெண்ணைப் பெற்றவர் "கிரிஜாவைக் கட்டிக் கொள்ளக் கசக்குமா!'' என்று பதில் சொல்வதும் அவனுக்கு வேப்பங் காயாக இருந்தது. 'என்னை இவர்கள் யார் என்று நினைத்துக் கொண்டார்கள்!' என்று தன்னுள் கருவிக் கொண்டான். திவான் பகதூரின் ரத்தம் அவனுடைய தேகத்திலும் ஓடுகிறது அல்லவா!

"அப்பா......!''

"என்னடா, சும்மா சொல்லு! இது என்ன வேற்று இடமா!''

சாம்பசிவம் ஒரு கணம் யோசித்தான். பிறகு ஏதோ ஒரு முடிவைக் கண்டு விட்டவன்போலத் தெளிவான குரலில், "எனக்கு இஷ்டமில்லை, அப்பா!'' என்றான்.

சாம்பசிவத்தின் அபிப்பிராயத்தைக் கேட்ட திவான் பகதூர் திகைத்துப் போனார். ராவ் சாகிப்பின் கண்கள் ரங்கராட்டினம்போல் சுழன்றன. கோபமும் ஆத்திரமும் அதிகரிக்கத் தினகரம் தம் பிள்ளையின் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துச் சென்று காரில் ஏற்றிக்கொண்டு விட்டார். 'டக் டக்' என்று காரின் கதவுகள் மூடும் சத்தம்தான் எல்லோருக்கும் கேட்டது. அதைத் தொடர்ந்து "நீ என் பிள்ளையாடா!'' என்று திவான் பகதூர் கர்ஜித்தது ஸ்ரீமதி திவான் பகதூருக்கும் சாம்பசிவத்துக்கும்தான் கேட்டிருக்க வேண்டும். ஏனெனில் கார் அதற்குள் கிளம்பி விட்டது.

திவான்பகதூரின் அனாவசிய கோபம் சுபாவத்தால் சாம்பசிவத்துக்கு நன்மை ஏற்பட்டது என்றே சொல்ல வேண்டும். அதனால்தானே அவர் மேலும் அது விஷயமாகச் சாம்பசிவத்தினிடம் வாக்கு

வாதம் வைத்துக் கொள்ள வில்லை. அவனும் உடனே ஊருக்குப் புறப்பட்டுப் போவதற்குச் சௌகரியமாக இருந்தது.

3

“நான் செய்தது அசட்டுத்தனமா!” மீண்டும் மீண்டும் தன்னையே கேட்டுக் கொண்டான் சாம்பசிவம். ‘கிரிஜா கண் நிறைந்த அழகி. அவளை ஏன் வேண்டாம் என்று சொன்னேன். மனிதன் உணர்ச்சி வேகத்துக்கும் கோபதாபங்களுக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்று பெரியவர்கள் சொன்னது எவ்வளவு உண்மை...’ சிந்தனைச் சங்கிலி தொடர்ந்து கொண்டிருந்ததே யொழிய முடியவில்லை.

மறுநாள் உமாவுக்கும் சரவணபவானந்தத்துக்கும் திருநீர்மலையில் ஆடம்பரமில்லாமல் திருமணம் நடந்தது. கல்யாணம் முடிந்த கையோடு தன் கதையை எடுத்துக் கூறினான் சாம்பசிவம்.

சாம்பசிவம் சொன்னவைகளைக் கேட்டு உமா திடுக்கிட்டுப் போனாள். “சிவம்! நீங்கள் நடந்து கொண்ட விதம் நன்றாகவே யில்லை. இவ்வளவு தூரம் பெண்ணை வர்ணித்துவிட்டு ‘இஷ்டமில்லை’ என்று கூறுவது கோழைத்தன மல்லவா! அப்படித்தான் உங்களுக்குச் சொல்லத் தூண்டிற்று என்றாலும், அந்தப் பெண் கேட்கும் அளவுக்குப் பகிரங்கமாகவா உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்வது! அதனால் அவள் உள்ளம் என்ன பாடு படும்! அவள் தந்தை திமிராகப் பேசினால், அதற்கு அந்தப் பெண் என்ன செய்வாள்!” என்று உருக்கமாகப் பேசினாள் உமா. கிரிஜாவை நினைக்கும்போதெல்லாம் அவள் கண்களில் கண்ணீர் சுரந்தது. சாம்பசிவத்துக்கு அப்போது ஒன்றும் தோன்றவில்லை. தான் செய்தது ‘சரி’ என்றும் பட்டது. ‘சரி இல்லை’ என்றும் தோன்றிற்று.


சாம்பசிவத்துக்குத் தான் செய்த காரியம் அசட்டுத்தனமானதா, இல்லையா என்பதை நிர்ணயிக்க உமாவின் உபதேசங்கள் பயன்பட்டதானாலும் அவைகளை அவன் ஏற்றுக் கொள்ள வில்லை. உமா மட்டும் சாம்பசிவனைப் பணிய வைக்க வேண்டும், தான் செய்தது அசட்டுத்தனமானது என்று அவன் உணர வேண்டும் என்று அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொண்டாள். ஆனாலும் அவளால் முடியவில்லை.

நாலைந்து மாதங்கள் சென்றன. சாம்பசிவம் பழைய சம்பவங்களையெல்லாம் மறந்துவிட்டான். அப்போதுதான் அவன் தந்தையிடமிருந்து கல்யாண விஷயம் பற்றி மற்றொரு கடிதம் வந்தது. பீகம்பேட்டையில் நல்ல உத்தியோகமும் செல்வாக்குமுள்ள ஒருவரின் பெண்ணைச் சாம்பசிவத்துக்குப் பார்த்திருப்பதாயும் உடனே பெண்ணைப் பார்க்கச் செல்ல வேண்டும் என்றும் அந்தக் கடிதம் கூறிற்று.

உமா பிறந்த ஊர் பீகம்பேட்டை. சாம்பசிவம் கடிதத்தை உமாவிடம் காண்பித்து அவள் அபிப்பிராயத்தைக் கேட்டான்.

“மிஸ்டர் சிவம்! இது மிக அருமையான இடம். பெண்ணின் தகப்பனார் பீகம்பேட்டை விமான நிலைய அதிகாரி. பெண்ணின் பெயர் லக்ஷ்மி. எனக்கு அவளை நன்றாகத் தெரியும். கிளி போல் இருப்பாள். ஆனால் கிரிஜா வீட்டில் செய்ததுபோல் மட்டும் செய்து விடாதீர்கள்...” தன் அபிப்பிராயத்தைக் கூறி விட்டுப் பரிகாசமாகச் சிரித்தாள் உமா.

இந்தத் தடவை சாம்பசிவம் பீகம்பேட்டைக்குச் சென்றபோது அவனுடன் திவான் பகதூர்



செல்லவில்லை. ஸ்ரீமதி திவான் பகதூர்தான் சென்றான். போகும்போது தன் அருமைத் பிள்ளைக்கு லக்ஷம் தடவை ஹிதோபதேசம் செய்து கொண்டு சென்றான்.

மீனம்பேட்டையில் சாம்பசிவத்துக்கும் அவன் தாயாருக்கும் நல்ல வரவேற்பு. விமான நிலைய அதிகாரி ஆனதால் பறந்து பறந்து அவர்களுக்கு மரியாதை செய்தனர்.

கிரிஜாவைவிட நல்ல அழகி லக்ஷ்மி. எதையுமே அலட்சியமாகப் பார்க்கும் அவள் கண்களின் காந்த சக்தியைச் சாம்பசிவம் உணர்ந்து கொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை.

"என்னம்மா உன் அபிப்பிராயம்!" என்று தம் பெண்ணைக் கேட்டார் விமான நிலைய உத்தியோகஸ்தர், சாம்பசிவத்தின் அபிப்பிராயத்தைத் தாம் முன்னமேயே தெரிந்து கொண்டவர் போல.

லக்ஷ்மி மலர மலரச் சாம்பசிவத்தைப் பார்த்துக் கொண்டே, "எனக்கு விருப்பமில்லை, அப்பா! தொந்தரவு செய்யாதீர்கள்!" என்று வெடுக்கென்று கூறி விட்டுச் சிட்டுக் குருவியைப் போல உள்ளே பறந்து விட்டாள்.

லக்ஷ்மியின் அபிப்பிராயத்தைக் கேட்டுச் சாம்பசிவம் திகைத்துப் போனான். முகம் கோவைப் பழம்போலச் சிவந்து விட்டது. உடல் முழுவதும் 'குப்' பென்று வியர்த்து விட்டது. "ஒரு பெண்ணுக்கு இவ்வளவு தடுக்கா!" என்றது மனம்.

4

சாம்பசிவம் வாடிய முகத்துடன் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டிருக்கும் போது உமா உள்ளே நுழைந்தாள்.

"என்ன, சாம்பசிவம்! கல்யாணம் நிச்சயம் ஆகி விட்டதா! எப்போது முகூர்த்தம்!" என்று புன்முறுவலுடன் கேட்டாள் உமா.

"உமா, நீங்கள் நல்லவர்கள் என்று நினைத்தேன். என்னை அவமானப் படுத்தி விட்டீர்களே......" உணர்ச்சி பொங்கக் கூறினான் சாம்பசிவம்.

"என்ன நடந்தது! பெண் பிடிக்க வில்லையா! லக்ஷ்மி நன்றாகத்தானே இருப்பாள்..." வெகு பரபரப்போடு கேட்டாள் உமா.

"உமா! ஏன் விளையாடுகிறீர்கள்! என்னை அவமானப் படுத்த வேண்டும் என்றால் வேறு எவ்வளவோ வகையில் செய்திருக்கலாமே!"

"மிஸ்டர் சாம்பசிவம்! நடந்ததை விவரமாகச் சொல்லாமல்......"

"நடந்தது என்ன! உங்கள் லக்ஷ்மி என்னை அவமானப் படுத்தி விட்டாள். நாலு பேருக்கு நடுவில் எனக்கு இவரைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமில்லை என்று கூறி விட்டாள். கொஞ்சங் கூட நாகரிகமும் இங்கிதமும் தெரியாதவள். அவள் ஒரு பெண்ணா!"

"என்ன மிஸ்டர் சாம்பசிவம்! அவள் உங்களை வேண்டாம் என்று சொன்னாள்! அப்படியானால் அவள் கெட்டிக்காரிதான்..." என்று உமா வெற்றிப் புன்னகையோடு கூறினாள்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்!" என்று வெகு ஆத்திரத்தோடு கேட்டான் சாம்பசிவம்.

"சாம்பசிவம்! நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். ஒரு பெண் உங்களை வேண்டாம் என்று சொல்லும் போது அவமான உணர்ச்சி உங்களுக்கு எப்படி ஏற்படுகிறது! மனசு எப்படித் துடிதுடிக்கிறது! அப்படித்தானே பெண் மனமும்! கிரிஜாவை நீங்கள் கொடிப் பொழுதில் திரஸ்கரித்தீர்கள். அப்போது அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! நீங்கள் மட்டும் நாலு பேர் மத்தியில் பகிரங்கமாக ஒரு பெண்ணை வேண்டாம் என்று சொல்லலாம்; ஆனால் அந்த உரிமை ஒரு பெண்ணுக்குக் கிடையாது, அப்படித்தானே!" என்று பேசிக் கொண்டு வந்தபோது உமாவுக்கு ஆவேசமே வந்துவிட்டது.

சாம்பசிவத்தின் கண்களில் கண்ணீர் நிறைந்து விட்டது. அனலில் இட்ட மெழுகு போலத் தன் உள்ளம் அவமான உணர்ச்சியில் உருகும் போது கிரிஜாவின் உள்ளப் பாங்கை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

"உமா, நீங்கள் சொல்வது உண்மை. என் கண்களை நீங்கள்தான் திறந்து விட்டீர்கள். கிரிஜாவுக்குத் துரோகம் செய்ய நான் ஒரு நாளும் நினைத்ததில்லை. அன்றுகூட அவளைப் பற்றி உங்களிடம் சிலாகித்தே கூறினேன். ஆனால் என்ன செய்வது! துடுக்காகப் பேசிய பிறகு நான் இப்போது பணிந்து போகத் தயாராக இருந்தாலும் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமே!" என்றான்.

"என்ன, சாம்பசிவம்! நீங்கள் சொல்வது உண்மைதானா! அப்படியானால் உங்கள் வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். கிரிஜாவும் அவள் பெற்றோரும் அதற்கு ஒப்புக் கொள்வார்கள்!" என்றாள் உமா மகிழ்ச்சியுடன்.

"மிஸ்டர் சாம்பசிவம்! என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். கொஞ்சம் யோசிக்காமல் அன்று பேசி விட்டேன். அதனால் வந்த வினைதான் இது!" என்று சொல்லிக் கொண்டே ராவ் சாஹிப் ரவிசங்கர் அங்கிருந்த அறை யொன்றிலிருந்து வெளியே வந்தார். அவருக்குப் பின் கிரிஜாவும் வந்து கொண்டிருந்தாள்.

சாம்பசிவத்துக்கு ஒன்றும் புரியவில்லை. திருதிருவென்று ராவ் சாஹிப்பையும் கிரிஜாவையும் மாறி மாறிப் பார்த்தான்.

"சிவம், ராவ்சாஹிப் மன்னிப்புக் கோருகிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்! உங்கள் வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொண்டு கிரிஜாவையே ஏற்றுக் கொள்கிறீர்களா......!" வெகு அதிகாரமாகக் கேட்டாள் உமா.

சாம்பசிவம் பதில் பேசவில்லை. ஆனால் அவன் முகம் மலர்ந்தது. கண்கள் பேசின.

"உமா, நீங்கள் செய்த உதவிக்கு........." என்று இழுத்தார் ராவ் சாஹிப் ரவி சங்கர்.

"இது என்ன ஐயா பெரிய உதவி! என் சிநேகிதி லக்ஷ்மி செய்த சகாயமல்லவா மகத்தானது. சாம்பசிவனைப் பார்த்தவுடன் எங்கு மயங்கி நான் எழுதியிருந்தபடி சொல்லாமல் இருந்துவிடுவாளோ என்று எண்ணினேன். நல்ல வேளையாக என் விருப்பப்படியே அவள் செய்தாள். அவளுக்கல்லவோ நம் நன்றியை முதலில் தெரிவிக்க வேண்டும்!" என்றாள் உமா.

"உமா, என் வாழ்க்கையில் உன்னை நான் மறக்கவே மாட்டேன்" என்று நன்றி பரிதவோடு அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள் கிரிஜா.

"கிரிஜா, நீ என் உயிர்த் தோழி. உனக்குத் தாழ்வு வந்தால் அது எனக்கு வந்தது மாதிரி தானே! அதனால்தான் இந்த ஏற்பாடுகளைச் செய்தேன். நீ மட்டும் 'என் உயிரைச் சாம்பசிவத்திடம் வைத்து விட்டேன்' என்று கடிதம் எழுதாமல் போனால் இவை யாவும் நடந்திருக்காது......" என்று சொல்லிக் கொண்டே கிரிஜாவை அணைத்துக் கொண்டாள்.

நிமிஷத்துக்கு நிமிஷம் சாம்பசிவனின் திகைப்பு அதிகமாகிக் கொண்டே இருந்தது. கிரிஜாவும் லக்ஷ்மியும் உமாவின் நெருங்கிய தோழிகள் என்பதை அறிந்த போது, அவனுக்குக் கொஞ்சம் பெருமையாகக் கூட இருந்தது.



புத்தம் புதிய நல்ல பசுவின் பாலிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள 'ஸனடோஜன்' அதிக பலமும் புத்துணர்ச்சியும் அளிக்கக் கூடிய ஓர் இயற்கையான டானிக். அதிசயிக்கத்தக்க பூரண பலம் அளிக்கும் அதன் விசேஷ குணங்களை 25,000க்கு அதிகமான டாக்டர்கள் பாராட்டி யிருக்கின்றனர்.

'ஸனடோஜனை' எப்பொழுதும் வற்புறுத்திக் கேளுங்கள்.

B.I.S.N.CO.LTD.

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

S. S. "ரஜூலா"

சென்னை புறப்படும் தேதி — 1954 ஜூன் 11
நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1954 ஜூன் 12

கப்பல் புறப்படும் தேதியன்று காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்பட மாட்டாது

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள் :

சென்னையிலிருந்து 11-6-54 : பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 8 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.

நாகப்பட்டினத்திலிருந்து 12-6-54 : பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் காலை 8 மணிக்கும் கப்பலேறலாம்.

சென்னையில் ஏறும் பிரயாணிகள் 11-6-54 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்திய பரிசோதனைக்கு தாமதமாகிவிடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் **7, அரமனைக்காரத் தெரு, மதராஸ்**	**மதுரா கம்பெனி லிமிடெட்** **முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்**

கோகிலா

மொழிபெயர்ப்பு: ரா.வீ

ரமணலால் வஸந்தலால் தேசாய்

3. அடைக்கலம் புகுந்தாள்!

ரமேஷிடம் விடை பெற்றுக் கொண்டு ஜகதீஷ் தோட்டத்தை விட்டு வெளியே வந்தபொழுது நாற்புறமும் இருள் கவ்வத் தொடங்கிவிட்டது. அவன் வீடு அங்கிருந்து வெகு தொலைவில் இருந்தது. அதனால் ஒரு வாடகை வண்டியை அமர்த்திக்கொண்டு வீட்டுக்குப் போகலாம் என்று எண்ணி, அவன் சட்டைப் பையில் கையை விட்டுப் பார்த்தான். அதில் ஐந்தே ஐந்தணாத்தான் இருந்தது. அந்த ஐந்தணாவைக் கொண்டு வாடகை வண்டி பேசிக் கொண்டு வீட்டுக்குப் போக முடியாது என்று முடிவு கட்டினான். எனவே, தனது அந்த எண்ணத்தைக் கைவிட்டான். வண்டி வைத்துக் கொண்டு போவதில்லை என்று தீர்மானமான பிறகு, யாரும் கால் பலத்தைத் தானே நம்பவேண்டியிருக்கிறது? வீட்டுக்குச் சீக்கிரம் போய்ச் சேரவேண்டும் என்ற எண்ணம் அவன் கால்களில் பலத்தையும் வேகத்தையும் வருவித்தது. அதன் பயனாக அவன் வேகமாக நடையைப் போட்டு வீட்டை நோக்கி முன்னேறலானான். வீட்டுக்குப் போய் அவன் என்ன சொல்வது? வேலை போய் விட்டது என்ற விஷயத்தை அவன் ஒரு தடவை, இரண்டு தடவையல்ல; எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறான். அவன் இன்னும் இது போல் எத்தனை தடவை சொல்ல வேண்டிய அவசியம் நேருமோ, யார் கண்டார்கள்?



ஜகதீஷ் ரமேஷின் நண்பன் மட்டும் அல்ல; அவனோடு கூடப் படித்தவனுங்கூட. மிகவும் சிரம தசையிலேயே அவன் வாழ்க்கைச் சக்கரம் ஓடியது. கல்லூரியில் அவன் அறிவையும் சக்தியையும் எல்லோருமே புகழ்வார்கள். ஆனால் பரீக்ஷையில் மட்டும் அந்த அறிவும் சக்தியும் அவனுக்கு அவ்வளவாக உபயோகப் பட்டதில்லை; கைகொடுத்து உதவியதும் இல்லை. ஊர் சுற்றுதல், உல்லாசப் பிரயாணம் போதல், தேகப்பயிற்சி செய்தல், பள்ளியின் பாட புஸ்தகங்களைத் தவிர மற்ற எல்லாவிதமான புஸ்தகங்களையும் படித்தல் — இவைதாம் கல்லூரி நாட்களில் ஜகதீஷின் அன்றாட நிகழ்ச்சி நிரல்களாக இருந்தன. பாட புஸ்தகங்கள் என்றால் அவனுக்கு வேம்பாகக் கசக்கும்; தொடக் கூடப் பிடிக்காது. கல்லூரியில் ஆசிரியர்மார்கள் சொல்லிக் கொடுக்கும் பொழுது பாடப் புத்தகங்களைத் தொடுவது தான், கவனிப்பதுதான். அப்புறம் அவை ஆதரவற்ற குழந்தையாகி விடும்.



அவனுடன் அக்ஷராப்பியாஸம் ஆரம்பித்த மாணவன் ஒருவன் கல்லூரியின் இடை நிலை வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும்— ஏன்? — ஒவ்வொரு பரீக்ஷையிலுமே முதலாவதாகத் தேறி வந்திருந்தான். அந்த மாணவன் கணப் பொழுதைக் கூட வீணடித்த தில்லை. வீட்டிலிருந்து கல்லூரி போவான். கல்லூரியிலிருந்து வீடுபோவான். அந்தப் போகும் நேரத்தைக் கூட அவன் பாழ் அடித்ததில்லை. ராமஸ்மரணை பண்ணுகிறவர்களைப்போல, நடந்து போய்க் கொண்டிருக்கும் பொழுதகூட அவன் குறிப்பிட்ட ஏதாவது ஒரு பகுதியை மனத்துள் உருவேற்றிமனப்பாடம் செய்த வண்ணமே தான் நடப்பான். கனவு கண்டால் கூடப் பாடப் புஸ்தகங்களைப் பற்றிய கனவே காணும் அளவுக்கு அவன் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டிருந்தான். நாளடைவில் பரீக்ஷையில் முதலாவதாகத் தேர்ச்சி பெறுவது என்பது தன்னுடைய பிரத்தியேகமான பிறப்புரிமை என்ற எண்ணம் மட்டும் அல்ல, அசைக்க முடியாத நம்பிக்கையேகூட அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

கல்லூரி வாழ்க்கையின் பொழுது ஒரு நாள் ஜகதீஷும் அவனும் தற்செயலாக வழியில் சந்திக்க நேர்ந்தது. சந்தித்தால் ஏதாவது

பேசியாக வேண்டும் அல்லவா? எனவே, ஜகதீஷ் அவனைப் பார்த்து, "ஏன் அப்பா! பரீக்ஷைக்கான ஏற்பாடுகள் எல்லாம் எப்படி நடந்து கொண்டிருக்கின்றன?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்டு வைத்தான்.

"ஒன்றும் கஷ்டம் இல்லை!" என்றான் அந்த மாணவன். எதிரியின் பலவீனத்தையும், தனது முன்னேற்பாடான முற்றுகையின் மூஸ்திபையும் நன்கு உணர்ந்த யுத்த வீரன் சிறிதும் கவலையற்றுப் பதில் சொல்வானே, அது போலிருந்தது அவன் ஜகதீஷுக்குச் சொன்ன அந்தப் பதில்.

"உனக்கு என்ன கஷ்டம்? கஷ்டம் எல்லாம் எங்களைப் போன்ற கடை மாணாக்கர்களுக்குத் தானே? நீ முதலாவதாகவோ இரண்டாவதாகவோ வர வேண்டியவன். உனக்கு முதலாவதா, இரண்டாவதா என்ற கவலையைத் தவிர வேறு என்ன இருக்கும்?" என்று அவன் பதிலுக்கு ஏற்றம் கொடுக்கும் தோரணையில் தான் ஜகதீஷ் பேசினான்.

"முதலாவதா, இரண்டாவதா என்ற 'ஷக, ஷப' பிரச்னைக்கே சிறிதும் இடம் இல்லை. கட்டாயம் நான் முதலாவதாக வருவேன்!" என்றான் அந்த வாலிபன். சூரியன் தான் உதயமாவது திண்ணம் என்று வெளியிடுவது போன்ற திட்ட வட்டமான நம்பிக்கையுடன் அவன் தன் வருங்காலத்தைப் பற்றிக் கூறினான். அவன் கொண்டிருந்த அந்தச் செருக்கும் இறுமாப்பும் ஜகதீஷை வெகுவாகக் கவர்ந்தன. "ஓகோ! அப்படியா? உனக்கு அவ்வளவு தூரம் நம்பிக்கை இருக்கிறதா?" என்று வியப்புத் தாண்டவமாடும் குரலில் கேட்டான்.

"ஏன் இராது? என்னை விட்டால் முதலில் வருவதற்கு வேறு யார் இருக்கிறார்கள்? நீயே சொல்!" என்று அகந்தை தலைக்கேற அந்த மாணவன் கேட்டான்.

"அட! அவ்வளவு தூரம் நீ அடித்துச் சொல்லும்படி ஆகிவிட்டதா? இன்றைக்கு நான் சொல்வதை முடிச்சு வேண்டுமானாலும் போட்டு வைத்துக் கொள். நீ இனிமேல் எந்தப் பரீக்ஷையிலும் முதல்வனாகத் தேற முடியாது!"—ஜகதீஷ் அந்த மாணவனுக்குச் சவால் விடுத்தான்.

"சரி! அதையும் தான் பார்த்து விடுவோமே!" என்று அவன் சவாலை ஏற்றுக் கொண்டு அந்த மாணவன் ஏளனமாக நகைத்தான். மாபெரும் அரக்கனுக் கெதிரே சுண்டைக்காயைப் போன்ற ஒரு ஆசாமி பிரம்பைக் காட்டிப் பயமுறுத்தினால் அரக்கன் பயப்படவா செய்வான்? ஏளனமாக எள்ளி நகையாடத் தானே செய்வான்? ஜகதீஷின் அந்த அறைகூவல் அந்த மாணவனுக்கு அத்தகைய துச்சமான செய்கையாகத் தான் பட்டது. அத்தனை நாட்களும் எதிலும் முதலாவதாக இருந்தவனுக்கு அப்படித் தோன்றியதில் ஆச்சரியம் இல்லைதானே?

ஆனால் எல்லா மாணாக்கர்களுக்குமிடையே ஜகதீஷ், தான் சொன்னபடி முதலாமவனாகத் தேறி விட்டான். கல்லூரியின் தலைமைப் பேராசிரியர் அவனுடைய அந்தத் திரச் செயலுக்காகத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டதோடு மட்டும் அல்லாமல், அவன்மீது அளவற்ற பற்றுதலும் கொண்டார்.

சர்க்காரின் சார்பில் டெபுடி கலெக்டர் உத்தியோகத்துக்கு ஆள்கள் தேர்ந்தெடுப்பதாக இருந்தது. அவற்றில் ஒரு ஸ்தானத்துக்குக் கல்லூரிப் பேராசிரியர் ஜகதீஷின் பெயரைப் பலமாகச் சிபாரிசு செய்தார். அவருடைய அந்தச் சிபாரிசு நல்ல பலனை அளித்தது. அதன் பலனாக ஜகதீஷ் டெபுடி கலெக்டராகப் பதவி ஏற்றான்.

ஆனால் அந்த வேலையில் அவனுடைய மனம் நாட்டம் கொள்ளவில்லை. உத்தியோகம் ஏற்றுக் கொண்ட கொஞ்ச காலத்துக்குள்ளேயே ஜகதீஷ் உத்தியோக வாழ்க்கையில் காணக் கிடைக்கும் பல முக்கியமான விஷயங்களைத் தெரிந்து கொண்டு விட்டான். ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்வதென்றால் அறிவாளிக்கு அதிக நாட்கள் பிடிக்குமா?

குறைந்த சம்பளமும் பெருத்த குடும்பமும் கொண்ட எளிய ஏழைக் குமாஸ்தாக்களின் பரிதாப நிலை அவர்களுடைய வாழ்வை எத்தனை தூரம் சீர்கேடடையச் செய்து விடுகிறது என்பதைக் கண்ணெதிரே கண்டு அவன் மிகவும் மனம் நொந்தான்.

குடும்பத்தின் வரவு-செலவைச் சரிக்கட்டத் தெரியாமல்,—தெரியாமல் அல்ல, முடியாமல் அவர்கள் எப்படி நீதி நெறி தவறி நடக்கத் தொடங்கி விடுகிறார்கள்? எத்தகைய நிர்ப்பந்தமான சூழ்நிலைக்கு இலக்காகி லஞ்சம் வாங்கும் வரை அவர்கள் தாழ்ந்து விடுகிறார்கள்? தாங்கள் வாங்கும் அந்த லஞ்ச ஊழல்களை மறைப்பதற்காக அவர்கள் எவ்வாறு அதிகாரிகளை முகஸ்துதி செய்து தங்கள் கையில் போட்டுக் கொள்ளப் பார்க்கிறார்கள்? அதிகாரிகளின் கருணைக் கண் பார்வை தங்கள்மீது நிரந்தரமாகப் பதிந்திருக்க வேண்டும் என்பதற்காக என்னவெல்லாம் அன்பளிப்புகளும் காணிக்கைகளும் எடுத்துச் சென்று நேரில் கண்டு வருகிறார்கள்? அவற்றை ஏற்றுக் கொள்ளும் மேலதிகாரிகள் எவ்வளவு போக்கிரித்தனமாகவும் பிசினாரித்தனமாகவும் நடந்து கொள்கிறார்கள்? தங்கள் அறிவிலும் மேதையிலும் எத்தகைய காணவொண்ணாத கர்வம் கொண்டு நடந்து கொள்கிறார்கள்?


இதுபோன்ற ஒவ்வொரு விஷயத்தையும் நுணுக்கமாகக் கவனித்த அவனுக்கு மனத்தை என்னவோ செய்தது. அலைபாய்ந்த அவன் உள்ளத்தில் எதிர்ப்பு உணர்ச்சி இடம் பெற்றது. நல்லவர்கள் யாருக்குமே அம்மாதிரி நிலைமையில் எதிர்ப்பு உணர்ச்சி ஏற்படுவது இயல்புதான்; நியாயமும் நேர்மையும் நிறைந்த செய்கைதான். எனினும் ஆட்சி பீடத்தின் கண்களுக்கு அது



நீங்கள் இன்று உங்கள் பற்களை

மக்ளீன்

செய்தீர்களா?



ஆம், அதன் இரகசியம் இதுதான்...

பற்களைத் தவறாமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இருவேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும் நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீனிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.

“... என்னைப்
போலவே உங்
களது பற்களை
ப் பற்றிப் பெரு
மைப் படுபவர்
களுக்கு மக்ளீன்
ஸ் பற்பசையை
யே சிபார்சு
செய்கிறேன்”



க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

MTY-38-TAM.



தனக்கு எதிரான சதித் திட்டமாகத் தோன்றுவதும் தண்டனைக்கு உகந்த விஷயமாகக் கருதப்படுவதும் நடைமுறையில் உள்ள பழக்கம் தானே? பெரும்பாலும் கிளர்ச்சிகள், அவை உண்மைக்கான கிளர்ச்சிகளாக இருந்தாலும் சரி, அரசியல் கிளர்ச்சிகளாக இருந்தாலும் சரி, குற்றமான செய்கைகளாகத் தானே ருசுவாகின்றன? கிளர்ச்சி என்றாலே குற்றம் என்று பொருள் தரும் அளவுக்குக் கெட்ட பெயர் கிளர்ச்சி என்னும் சொல்லுக்கு ஏற்பட்டு விடவில்லையா? அப்படியிருக்கும் பொழுது ஜகதீசை மட்டும் விட்டு வைப்பார்களா, என்ன? ஜகதீஷின் நல்லெண்ணம் நிறைந்த அந்தச் செயல்களும் சமய சந்தர்ப்பங்களினால் ஏற்பட்ட பல சூழ்நிலைகளும் சேர்ந்து அவனை அரசாங்கத் துரோகி என்று அழைக்கும்படியான கட்டத்துக்குக் கொண்டு வந்து விட்டன.

ஒரு தடவை கலெக்டர் துரை ஜகதீஷின் இலாக்காவில் முகாம் செய்தார். அவர் முகாம் செய்தபொழுது தாசில்தார் ரஜாவில் சென்றிருந்தார். அதன் காரணமாக அவருடைய முகாம் அலுவல்களையும் சௌகரியங்களையும் கவனிக்கும்படியான பொறுப்பு ஜகதீஷின் தலையிலே சுமந்தது. கலெக்டர் துரை முகாம் செய்ய வருகிறார் என்றால், கீழே உள்ள அதிகாரிகளுக்கு அது ஒரு கடினமான சோதனை காலமாகத்தானே முடியும்? அவருக்குக் கீழ் அதிகாரியும் பிறருக்கு மேலதிகாரியுமான ஒருவன் தனக்குக் கீழ் உள்ள உத்தியோகஸ்தர்களை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறான்? அவனிடம் என்ன என்ன குறைவு—நிறைவுகள் இருக்கின்றன? என்ன என்ன குணங்கள்-குற்றங்கள் இருக்கின்றன? இதுபோன்ற விஷயங்கள் அச்சமயத்தில் அம்பலமாகி விடுவது எதிர்பார்க்கக் கூடிய விஷயம்தானே?

முகாம் செய்ய வந்த கலெக்டர் துரையோ தமது கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர். தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அதிகாலையில் நான்கு மணிக்கே எழுந்து விடுவார். நாலரை மணிக்குள்ளாகச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு விடுவார். கடமையைச் சரியாகக் கவனிக்க வேண்டுமென்றால் இந்த மாதிரிச் சிற்றுண்டிக் கடன்களைக் கையோடு கையாக முதலில் முடித்துக் கொண்டு விடுவதுதானே நல்லது?

நாலரை மணிச் சிற்றுண்டியின் பொழுது அவருக்குப் புதிய வெண்ணெய் கட்டாயம் தேவை. சுவரை வைத்துக் கொண்டுதானே சித்திரம் எழுத வேண்டும்? அதே போல உடல் நிலையைச் சரியாக வைத்துக் கொண்டால்தானே கடமைகளையும் சரிவரக் கவனிக்க முடியும்? ஆனால் நாலரை மணிக்குள் அவர் சிற்றுண்டிக்கென்று வெண்ணெய் வந்து சேரவில்லை. கிராமத்தில் உள்ள ஆயர் குலப் பெண்கள் மூன்று மணிக்கே எழுந்து கலெக்டர் துரைக்காகத் தயிர் கடைந்து புத்தம் புதிய வெண்ணெய் எடுத்துக் கொடுக்க முன்வரவில்லை. கீழதிகாரிகள் தான் கலெக்டருக்குப் பயந்து சாகவேண்டுமென்றால் கிராமத்தில் உள்ள ஆயர்குலப் பெண்களுமா பயந்து நடக்க வேண்டும்?





அப்படி அவர்கள் பயப்பட வேண்டும் என்று எந்த சாஸ்திரத்திலும் எழுதவில்லையே!

ஆயர்குலப் பெண்களின் அநுக்கிரகை காரணமாக டெபுடி கலெக்டர் ஜகதீ விடம் உள்ள இரண்டு குறைபாடுகள் கலெக்டரின் கண்களில் அழியாச் சித்திர மாகப் பதிந்து விட்டன. முதற் குற்றம் சோம்பேறித்தனம். இரண்டாவது குற்றம் எந்தக் காரியத்தையும் குறித்த காலத்தில் செய்யத் தெரியாதது. இது மட்டுமா? இன்னொரு விஷயத்தையும் கலெக்டர் துரை கண்டு பிடித்து விட்டார். கிராமத்தில் உள்ள பெரிய பெரிய பணக்காரக் குடும்பஸ்தர் களின் நல்ல நல்ல வண்டிகளைக் கலெக்டரின் உபயோகத்துக் கென்று இரவு - பகல் இருபத்திநாலு மணி நேரமும் ஜகதீஷ் நிறுத்தி வைக்க வில்லை. ஒருவேளை அவனால் அப்படி நிறுத்தி வைக்கத்தான் முடிய வில்லையோ, அல்லது வேண்டா மென்றுதான் வாளாவிருந்து விட்டானோ, தெரியாது. அதைக் கலெக்டர் துரை ஜகதீஷிடம் உள்ள பெரும் பல வீனமாக எடுத்துக் கொண்டு விட்டார். அதிகாரிகளுக்கு இருக்க வேண்டிய அதிகார தோரணையும் கெடுபிடியும் அவனிடம் மிக மிகக் குறைவாக இருப்பதாகக் கலெக் டர் துரையின் குற்றம் கண்டுபிடிக்கும் கண் களுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது.

இம்மாதிரி யெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்தபொழுது அவர் எதிரே ஜகதீஷ் மூது கெலும்பற்ற பலஹீனமான அதிகாரியாக ருஜுவானான். கலெக்டர் முகாம் வேலை முடிந்து ஊருக்குப் புறப்படும் பொழுதாவது யாரையாவது ஒரு பெரிய மனிதரைக் கூப் பிட்டு அவர் கழுத்தில் ஒரு பூமாலை வாங்கிப் போடச் சொல்ல வேண்டாமோ? தன் தைக்காக போகிறது என்றாவது அவன் அந்த அற்பக் காரியத்தைச் செய்திருக்கலா மல்லவா? அப்படிச் செய்யாதது அவன் பலவீனத்தை இன்னும் அதிகமாக வெளி யாக்கி மலையாகக் காட்டியது.

இதன் காரணமாக வெல்லாம், அவன் மிகுந்த அகம்பாவக்காரன் என்றும், தனது பெரிய அதிகாரிகளிடம் பழகவே தெரி யாதவன் என்றும், அப் படிப் பழகத் தெரிந்தாலும் அலட்சியமாக நடந்து கொள்கிறவன் என்றும், கலெக் டர் துரையின்




...கனவான்களே...
...நேர்த்தியான பூச்சிற்கு...
...பார்ப்பதற்கு கவர்ச்சிகரமானது...
...நீடித்த உறுதிக்கு
...உட்பூச்சிற்கோ, வெளிப்பூச்சிற்கோ...
...தொழிற்சாலைகளுக்கும், வீடுகளுக்கும்...
... அதைப்பற்றி சந்தேகமே இல்லை...
...அதுதான்... எல்லோரும் விரும்பும் ஸிந்தடிக் எனாமல்...
ஷாலிமார் சூப்பர்லாக்
ஸிந்தடிக் எனாமல்
SHALIMAR PAINT, COLOUR & VARNISH COMPANY LIMITED
Post Box 136, Madras 1
Importers & Distributors for Ceylon :
LEWIS BROWN & CO. LTD., POST BOX 85, COLOMBO

மனக் குறிப்பில் இடம் பெற்றான். கீழ் அதிகாரியைத் தகுதியற்றவன் என்று நிரூபிப்பதற்குப் பெரிய அதிகாரிகளுக்கு இதைக் காட்டிலும் வேறு என்ன பெரிய பிரமாதமான காரணம் வேண்டும்?

ஜகதீஷின் மனத்திலோ மக்களுக்கு உண்மையான ஊழியம் செய்ய வேண்டும் என்ற எண்ணம்தான் குமிழியிட்டுக் கொண்டிருந்தது. தான் வகிக்கும் பதவி மக்களுக்கு ஊழியம் செய்யச் சரியான சாதனமாக அமையும் என்றே அவன் எண்ணியிருந்தான். உண்மை ஊழியம் செய்யப்போன அவன் மீது, அதிகாரியான அவன் ஜனங்களுக்கு அதிக இடம் கொடுப்பதால், 'அவர்கள் அச்சமிழந்து யாரையும் அலட்சியப் படுத்துகிறார்கள். தங்கள் இஷ்டப்படி நடக்கிறார்கள். அதன் பலனாக ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களுக்கு அவமானம்தான் நேருகிறது!' என்பதுபோன்ற குற்றச்சாட்டுகள்தான் சுமந்தன. மேலதிகாரிகள்தான் மதிக்கவில்லையென்றால் அவனுக்குக் கீழ் வேலை பார்க்கும் காரியாலயச் சேவகர்களும் குமாஸ்தாக்களும் அவனை அப்படி அவமதிக்க வேண்டுமா? இரண்டு வருஷம் உத்தியோகம் பார்ப்பதற்குள்ளேயே அவனுக்கு அந்த வேலை போதும், போதுமென்றாகி விட்டது.

இதே சமயம் நாட்டில் சுதந்திர உணர்ச்சி தலையெடுத்தது. அதன் பலனாக உருவாகிய இயக்கம் வலுத்துப் பாரத நாடெங்கும் காட்டுத் தீயெனப் பரவியது.

கங்கைக் கரையில் நின்றுகொண்டு மாபெரும் மாந்திரீகன் ஒருவன் தனது மந்திர சக்தியின் பலத்தினால் கங்கை அலைகளைப் பொங்கச் செய்து பிறர் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு ஓடும் நீரை வழிந்தோடச் செய்வதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் தண்ணீர்க் காடாகவே ஆக்கி விட்டால் எப்படியிருக்கும்? அப்படியே குஜராத் மாகாணத்தில் அவதரித்த மாபெரும் தபஸ்வி ஒருவர் தேசத்தொண்டு என்னும் சின்னஞ் சிறு உணர்ச்சியில் ஆவேசம் ததும்பும் பேரலைகளைப் பொங்கச் செய்து பல்வேறு நாடுகளும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே பாரத நாடு முழுவதிலும் தேச பக்தி என்னும் நீரை வீறுகொண்டு எழுமாறு செய்து ஒரு மகா நதியையே சிருஷ்டித்து விட்டார்! அப்படிச் செய்தது அவருடைய மனோ பலமா, மந்திர பலமா? அதை என்னவென்று சொல்வது? பாரத நாட்டுச் சரித்திரத்தில் மட்டும் அல்ல, அகில உலகச் சரித்திரத்திலும் இந்தக் காட்சி எல்லாக் காட்சிகளைக் காட்டிலும் அழியாத நினைவுச் சித்திரமாகத் துலங்கி நிற்கும். பாரத நாட்டின் பெருமைச் சித்திரமாக வானளாவ வளர்ந்து நிற்கும். அகில உலகமும் அதன் காலடிகளிலே தலை வணங்கி நிற்கும். இதில் எவ்விதமான சந்தேகத்துக்கும் சிறிதும் இடமே இல்லை.

அந்தச் சமயம் நாடு முழுவதிலும் பரவிய உற்சாகமும் உணர்ச்சியும் ஜகதீஷையும் ஆட்கொண்டன. அதன் பலனாக உற்றார் உறவினர்களையும் நண்பர்களையும் வியப்பில் ஆழ்த்திவிட்டு அவன் விலை மதிப்பற்றதாகக் கருதப்படும் தன் உத்தியோகத்தை உதறியெறிந்து தேச சேவையில் ஈடுபட்டான்.

ஆனால் அப்புறம்?

அந்தக் கேள்வி மகாபயங்கரமானதுதான்.

** ** **

நேரம் ஏற ஏற நன்றாக இருட்டிவிட்டது. கன்னங் கரிய காரிருளில் ஜகதீஷ் தன் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். வருங்கால நிலை எப்படியிருக்கும் என்று அவனுக்கு விளங்கவில்லை. நாளை நடப்பதை யார் அறிவார் என்ற நிலையில் தான் அவன் முன்னேறிக் கொண்டிருந்தான். கரிய காரிருளைப் போலவே அவன் வருங்காலமும் கருமை இட்டு மூடிமறைந்திருந்தது.

வேலையை விட்டதற்காக எல்லோரும் அவனைத்தான் குறை கூறுவார்கள். 'ஜகதீஷ் சஞ்சல புத்தியுள்ளவன். அதனால் தான் ஓரிடத்திலும் நிலைத்து நின்று வேலை செய்வதில்லை. அவன் அசிரத்தையே தான் அவனுக்குக் கேடு விளைவிக்கிறது. அதனால்தான் ஓரிடத்தை விட்டு இன்னொரு இடம் என்று தட்டுத் தடுமாறித் திரிகிறான்!' என்று சொல்வார்கள். அடிக்கடி உத்தியோகத்தை விட்டு விட்டு வந்து நின்றால் சொல்லமாட்டார்களா?

ஜகதீஷ் தன் குறைகளைப் பற்றித் தானே சிந்தித்தவாறு நடந்து கொண்டிருந்தான். இரவின் வெளிச்சம்கூட அணைந்து விட்டது. சித்தம் போக்கு சிவன் போக்கு என்று சொல்லும் அளவுக்கு யோசனையில் ஆழ்ந்து விட்ட அவனுக்குத் தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையைப் பற்றிய நினைவே எழவில்லை.

திடீரென்று அவன் பார்வை ஒரு மிட்டாய்க் கடைமீது விழுந்தது. கடைக்காரன் நல்லது கெட்டது என்று பாராமல் பழைய ஊசிப்போன பட்சணங்களை முதற் கொண்டு விற்றுப் பணம் சேர்த்துக் கொழுத்த பணக்காரனாகி விட்டான். கொழுத்த பணக்காரன் ஆனதோடு மட்டுமா? தூக்க முடியாத கொழுத்த தேகம் படைத்தவனாகவும் அவன் ஆகியிருந்தான்!

அவன் ஒரு சிறு பையனை,- அந்தப் பையனுக்கு வயது கிட்டத்தட்ட ஏழு இருக்கலாம்—ஓங்கி ஒரு அறை வைத்தான். அந்தப் பையனுக்கு விழுந்த அடியின் காரணமாக ஜகதீஷின் சிந்தனை கலைந்தது.

அந்தப் பையன் தினம் தன் கடையின் வாசலுக்கு வந்து திருடத் தருணம் பார்த்துக் கொண்டு நிற்கிறான் என்பதற்காகத் தான் கடைக்காரன் அப்படி அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான். சிந்தனை கலைந்து அதைக் கவனித்த ஜகதீஷுக்கு மிட்டாய்க் கடைக்காரன் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அந்தப் பையன் ஏதாவது தவறு செய்திருந்தால்கூட அப்படி

ஓங்கி அடித்திருக்கக் கூடாது என்றே அவன் இளகிய நெஞ்சம் வாதாடியது.

அதைத் தூரத்திலிருந்து பார்த்துவிட்ட ஒரு ஸ்திரீ துடிதுடித்துப் போய்க் கூச்சலிட்டாள். “அடேடே! என் குழந்தையைப் போட்டு எதற்காக அடிக்கிறாய்? ஐயையோ! கொன்று விட்டானே, பாவி!” என்று கதறிய வண்ணம் ஓடி வந்த அவள், விசித்துக் கொண்டு நின்ற குழந்தையைத் தன் கரங்களால் அணைத்துக் கொண்டாள். அப்படி அணைத்துக் கொண்டவள் அவன் தாயைத் தவிர வேறு யாரா யிருப்பாள்?

“பொறுக்கிப் பிச்சைக்காரப் பயல்! மிட்டாயைத் திருடித் தின்று விட்டான்!” என்றான் அந்த மிட்டாய்க் கடைக்காரன். தினம் வாங்க வருபவர்களை ஏமாற்றித் தான் விற்கும் மிட்டாயின் மூலமாக எத்தனை திருடித் தின்கிறோம் என்பதைப் பற்றி யோசிக்க அவனுக்குப் பொழுதும் இல்லை; அவசியமும் ஏற்பட வில்லை. தன் குற்றம் தனக்குத் தெரியாதல்லவா?

“நீ தின்னக் கொஞ்சம் மிட்டாய் தரவேண்டாம். திருடாதவனைத் திருடுகிறான் என்று சொல்லிக் கொல்லுகிறாயே, உன்னைக் கடவுள் நன்றாக வைத்திருப்பானா?”-அந்தப் பெண்ணின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பீறிட்டுக் கொண்டு வெளி வந்தன அந்தச் சொற்கள்.

ஆனால் மிட்டாய்க் கடைக்காரனோ, தான் செய்ததுதான் சரி என்று இறுமாந்திருந்தான். அதனால் அவன் வெகு அலட்சியமாக, “இங்கிருந்து பேசாமல் போகிறாயா? இல்லை, உனக்கும் உதை கேட்கிறதா?” என்று தூக்கி யெறிந்தாற்போல் பேசினான்.

அந்தக் களேபரத்தைக் காண அதற்குள் அங்கே ஒரு சிறு கும்பலே கூடி விட்டது. அந்தக் கூட்டத்திலிருந்து ஒருவன், “ஏன், ராதா! உனக்கு மிட்டாய் வேண்டுமா? இந்தா, காலணா எடுத்துக் கொள்!” என்றான்.

அதைக் கேட்டு அந்தக் கும்பலே கலகலவென்று கைகொட்டிச் சிரித்தது. பிச்சைக்காரியான ராதா வாய் திறந்து பதில் ஒன்றும் சொல்லாமல் பேசாமலே நின்று கொண்டிருந்தாள். அழகிற் சிறந்து காட்சியளித்த பிச்சைக்காரியான அவளைப் பரிகாசம் செய்வதில் அங்கு கூடியிருந்த அனைவருமே அபாரமான ஆவல் காட்டினர்.

“ஏனப்பா, என்னவோ பெரிசாக காலணாத் தருகிறேன் என்கிறாயே! காலணா கொடுத்தால் போதுமா? ராதாவை இலேசுப் பட்டவள் என்று எண்ணாதே! அவள் ரூபாயை நீட்டினால்தான் மசிவாள்!” — எல்லோரும் இன்னும் பலமாகச் சிரிக்க இன்னொருவன் முதல்வன் செய்த பரிகாசத்திலேயே ஒரு திருத்தத்தைப் புகுத்தினான்.

ராதா முதலில் இலேசாகச் சிரித்தாள். அவள் சிரித்த அந்தச் சிரிப்பு, தீய நோக்கம் கொண்ட ஆண்களின் நஞ்சுப் பார்வையைக் கண்டு பொறுத்துக் கொள்ளக் கற்றுக் கொள்வது போலத் தோன்றியது. அந்தச் சூழ்நிலையில் அவள் சிரிக்காமல் வேறு என்ன தான் செய்வாள்?

அதைப் பார்த்த ஜகதீஷுக்கு ஒன்று அவள் கெட்டிருக்க வேண்டும் அல்லது கெட்டுப் போகத் தன் மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு தயாராக வந்திருக்க வேண்டும் என்றே தோன்றியது.

ஆனால் அடுத்த கணமே அவள் சிரிப்பு மறைந்து கோபமாக மாறியது. முகம் ஜிவ்வென்று ரத்தமாகச் சிவந்தது. “இந்தக் காவாலிகளைக் காளியாயி கொண்டு போக மாட்டாளா?” என்று சீறினாள்.

அதற்கு அப்புறம் அவள் அங்கே நிற்கவில்லை. அழும் தன் குழந்தையைக் கர கரவென்று பிடித்து இழுத்துக் கொண்டு வேகமாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள். அபலைப் பெண்ணைப் பரிகசிப்பதில் திருப்தி கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த கும்பலும் சிறுகச் சிறுகக் கலைந்து மறைந்தது.

அதை யெல்லாம் கண்களால் கண்ட ஜகதீஷுக்கு வந்த ஆத்திரத்தைச் சொல்லி முடியாது. அவனால் மட்டும் முடியக் கூடிய விஷயமாயிருந்தால், மிட்டாய்க் கடைக்காரனையும் கும்பல் கூடிக் கேலி செய்த ஜனங்களையும் ஆத்திரம் தீரப் பிரம்பினால் அடித்து நொறுக்கி யிருப்பான்.

ராதா போன வழியேதான் ஜகதீஷும் தன் வீட்டுக்குப் போக வேண்டும். இரண்டொரு நாட்களாக அந்தக் குழந்தையை

இழுத்துக் கொண்டு ராதா அந்தப் பக்கம் சுற்றிக் கொண்டிருப்பதை எல்லோரையும் போலவே ஜகதீஷும் கவனித்திருந்தான்.

உண்மையில் இவள் பிச்சைக்காரியாகவா இருப்பாள்?

இந்தக் கேள்வி அவன் மனத்தில் எழுந்தது.

ஆனால் அவள் யாரிடமும் கை நீட்டி எதுவும் வாங்கி அவன் பார்க்கவில்லையே!

அவன் மெதுவாக ராதாவையே பின் தொடர்ந்து நடக்கலானான். முன்னால் போய்க் கொண்டிருந்த ராதா வெளிச்சம் இல்லாத ஒரு இடம் வந்ததும் சற்றுத் தயங்கி நின்றாள். பிறகு ஒரு வீட்டு வாசலில் உள்ள ஒற்றையடிப் பாதையில் போய் உட்கார்ந்து கொண்டாள். குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு அதன் முதுகைத் தட்டிக் கொடுக்கலானாள்.

அவளுக்குப் பின்னாலேயே வந்து கொண்டிருந்த ஜகதீஷ் அதைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டான். பிறகு, ராதாவைப் பார்த்து, "ஏன், அம்மா! நீ எங்கே போக வேண்டும்?" என்று கேட்டான்.

"நான் எங்கே போனால் உனக்கு என்ன? என்னை நிம்மதியாகச் சாகக்கூட விடமாட்டார்கள் போலிருக்கிறதே!" என்றாள் ராதா.

தன்னை மறுபடியும் துன்புறுத்தத் தான் யாரோ பின்னால் வந்திருக்கிறான் என்று எண்ணி அவள் அப்படிப் பேசிவிட்டாள். அவளுடைய அந்தக் குரலில் பரிதாபமும் பயமும் தோய்ந்திருந்தன. அவள் சொன்ன அந்தச் சொற்களில் ஆண் இனத்துக்குச் சரியான சூடு கொடுக்கப்பட்டிருந்தது. ஆண் இனத்தை அவள் எவ்வளவு இழிவாக மதித்தாள் என்பதும் அவளது அந்தப் பேச்சில் தெரிந்தது. அவள் அப்படி இகழ்ந்து பேசியதைக் கண்ட ஜகதீஷுக்கு ஒரே வெட்கமாகப் போய் விட்டது. எனவே, ஆண் இனத்தின் சார்பில் பிராயச் சித்தம் செய்ய விரும்புபவனைப் போல், "அம்மா! என்னை மன்னித்துவிடு. உன்னை நான் இந்த மாதிரி கேட்டிருக்கக் கூடாதுதான்! அவர்கள் உன்னைத் துன்புறுத்தியதைக் கண்ணால் கண்ட எனக்கு, உன்னைச் சௌக்கியமாக உன் வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்துவிட வேண்டும் என்று தோன்றியது. அதனால்தான் அப்படிக் கேட்டு விட்டேன்!" என்றான்.

அவன் குரலில் கனிவும் கருணையும் தொனிப்பதைக் கண்ட ராதாவுக்கு அவன் மேல் சற்று நம்பிக்கை பிறந்தது. அவளுக்கு முழுச் சந்தேகமும் தீரவில்லை யென்றாலும், "எனக்கு வீடா? எனக்கு ஏது வீடு? நான் தங்கும் இடம் எல்லாம் என் வீடுதான். நான் இந்த மூலையிலேயே படுக்கப் போகிறேன். இங்கிருந்து யாராவது விரட்டி விட்டால் இன்னொரு மூலையைத் தேடிப் போய்த் தூங்குகிறேன். இந்த இடம் இல்லா விட்டால் சத்தை மடம்!" என்றாள்.

"அது சரி! உனக்கு இப்பொழுது நல்ல பசியாக இருக்குமே!" என்றான் ஜகதீஷ்.

"ஆமாம். இரண்டு நாட்களாகத் தின்ன ஒன்றும் கிடைக்கவில்லைதான். இந்த அறியாக் குழந்தை ஆசை கேளாமல் பசி பொறுக்காமல் அந்த மிட்டாய்க் கடை வாசலில் போய் நின்றது. அந்தக் கடைக்காரப் பாவி தின்ன எதுவும் கொடுப்பதற்குப் பதிலாக இந்தப் பூவின் கன்னத்திலே அறை கொடுத்தான். நான் யாரிடம் போய் என்ன முறை இடுவேன்!" என்றாள் ராதா பரிதாபமாக.

"என் வீட்டுக்கு வந்து விடேன்!" களங்கமற்ற உள்ளத்துடன் ஜகதீஷ் சொன்னான். "உன் வயிற்றுப் பசியைப் போக்க ஏதாவது வழி செய்கிறேன். படுக்கவும் இடம் தருகிறேன்!" என்றும் ஆறுதல் அளித்தான்.

முன்பின் அறிமுகம் இல்லாத அன்னியப் பெண்ணைச் சிறிதும் சங்கோசமோ தயக்கமோ இன்றித் தன் வீட்டில் வந்து இருக்குமாறு இவன் சொல்கிறானே என்று எண்ணிய ராதா சிறிது நேரம் ஜகதீஷைக் கண் கொட்டாமல் பார்த்தாள். நைச்சியமாகப் பேசித் தன் வலையில் சிக்கவைக்கும் கோஷ்டியைச் சேர்ந்தவனா யிருப்பானோ என்ற சந்தேகம் அவளுக்கு. ஆனால் அவளுக்கு அவனைப் பார்த்தபின் அப்படித் தோன்றவில்லை. காரணம், ஆண்களின் கண்களில் தாண்டவமாடும் குறும்பைக் கண்டு புரிந்து கொள்ளும் அறிவு ராதாவுக்கு இயல்பாகவே ஏற்பட்டிருந்தது. ஜகதீஷின் முகத்தில் அந்த மாதிரிக் குறி எதையும் அவள் காணவில்லை. தெளிவான உள்ளத்தில் கபடம் தோய்வதற்கு இடம் ஏது? எனவே, அவனுடன் போகலாம் என்றே அவளுக்குத் தோன்றியது. இருந்தாலும் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வர எண்ணி, "உங்கள் வீட்டில் இன்னும் வேறு யார் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஏன்? என் மனைவியும் ஒரு பையனும் இருக்கிறார்கள். என் வீட்டில் உனக்கு ஒருவித சிரமமும் ஏற்படாது!" என்றான் ஜகதீஷ்.

ஜகதீஷின் வீட்டுக்குப் போக ராதா சம்மதித்தாள். இன்று இல்லாவிட்டால் இன்னும் நான்கு நாட்கள் கழித்தாவது அவள் யாராவது ஒருவருடைய வீட்டில் அடைக்கலம் புகுந்துதானே ஆகவேண்டும்?

வேற்றூரிலிருந்து முன்பின் அறிமுகம் இன்றி வந்த பெண்ணை யார்தான் தங்கள் வீட்டில் சட்டென்று தஞ்சம் அளித்து வைத்துக் கொள்வார்கள்? அதோடு வாலிபப் பருவத்தினளான பெண் பிறர் வீட்டில் தஞ்சம் புகாமல் எப்படி வாழ முடியும்? இதையெல்லாம் யோசித்துப் பார்த்த அவளுக்கு ஜகதீஷ் நம்பிக்கைக்குப் பாத்திரனாகவே தோன்றினான். எனவே, சீக்கிரமாக ஒரு முடிவுக்கு வந்த ராதா அவன் வீட்டுக்குப் போவதென்று துணிந்தாள்.

"என் வீடு பக்கத்தில்தான் இருக்கிறது!" என்று சொல்லி நடந்தான் ஜகதீஷ். ராதாவும் குழந்தையை அழைத்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள். **(தொடரும்)**

ஏழைகள் வாழ வழி உண்டா?

இப்பொழுது எங்கு நோக்கினும் பகுத்தறிவு, குறுக்கு வார்த்தை இன்னும் பல விதமான போட்டிகள் நாட்டை நாசமாக்கி வருகின்றன. மேல் நாடுகளில் நீர்வாயு, அணு முதலியவற்றின் சக்தியைக் கொண்டு குண்டு தயாரித்து அதனைச் சோதனை செய்து அதனால் ஏற்படும் பலாபலன்களைக் கண்டு கும்மாளம் போடுவதைப் போல போட்டி நடத்தும் நபர்கள் எதிர்பார்த்ததற்கு மேல் ஆதாயம் கண்டு அதற்கேற்பப் பரிசுத் தொகையையும் பிரவேசக் கட்டணத்தையும் அதிகமாக்கி மக்களை உற்சாக மூட்டுகின்றனர். இதனால் யாருக்கு அழிவு, யாருக்கு நன்மை யென்பதை யோசிக்க வேண்டும்.

உதாரணமாக ஒருவன் மற்றவனுக்குப் பரிசுத் தொகை கிடைத்ததைக் கண்டு தானும் ஏன் அத்தகைய பரிசை அடையக் கூடாது என்று நினைத்துப் போட்டியில் ஈடுபடுகிறான். தன்னிடம் பணம் இல்லாவிட்டாலும் தன் நண்பர்களிடமாவது கடனைப் பெற்றுக் குறிப்பிட்ட தேதிக்கு முன்பாக, பரிசுத் தொகை கிடைத்தவன் அனுப்பியதைவிட அதிகக் கூப்பன்கள் அதிகப் பணம் செலவழித்து அனுப்புகிறான். பின் அவனுடைய முகத்தைப் பார்க்க முடிவதில்லை. ஏன்! செலுத்தின தொகை முழுவதும் இழந்து விட்டதால் தான். வீட்டிலே மனைவி மக்களுக்கு உணவில்லை. இந்த நிலையில் தன் ஊதியத்தையும் நண்பனிடம் வாங்கிய பணத்தையும் கொண்டு தான் போட்டியில் ஈடுபட்டான். பரிசு வந்த பின் கடனைக் கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கையில் தான் ஈடுபட்டான். ஆனால் அவனுக்குக் கிடைத்தது முழுத் தோல்வி. நான் மேலே கூறியது ஒரு உண்மைச் சம்பவம். இதைப் போல் எத்தனையோ பேர் தவிக்கிறார்கள்.

நான் தொழிற் கல்வி கற்று அதன் பின்பு இவ்வூரில் உள்ள மிகப் பெரிய பஞ்சாலை ஒன்றில் இலவசமாக வேலை பயின்று வருகின்றேன். தொழிற்சாலையில் போட்டியினுடைய கோரச் செயல் எப்படி இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

சுமார் 2,100 சிப்பந்திகள் தொழிற்சாலையில் வேலை செய்கின்றனர். அவர்களில் சுமார் 40 முதல் 55 சதவிகிதம் பலவிதப் போட்டிகளில் வாரந் தவறாமல் பங்கு பெறுபவர்கள். நூறு ரூபாய் வருமானமுள்ள நபர் இதற்காகச் செலவிடுவது சுமார் 20 ரூபாயிலிருந்து 27 ரூபாய் வரை; பரிசுத் தொகை கிடைப்பது ரூ 3-10-0; ஆனால் கொள்ளை போனது ரூ. 23-6-0. இதேமாதிரி பஞ்சாலை மாத்திரமன்றிச் சர்க்கார் அலுவலகத்தின் சிப்பந்திகளும் பொதுமக்களும் இதில் ஈடுபடுகின்றனர்.

ஆகவே, சர்க்கார் எல்லாவிதமான குறுக்கு வார்த்தை, பகுத்தறிவுப் போட்டிகள் முதலியவைகளையும் எந்தவிதமான நிபந்தனையுமின்றி உடனடியாக நீக்குவதற்கு முன்வர வேண்டும்.

இவ்வாறு செய்தால்தான் ஏழை எளிய மக்கள் எவ்விதக் குறைபாடுமின்றிச் சுகமாக வாழ முடியும் என்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை.

கோவை — வெ. சு. சுப்பிரமணியன்
18-5-54 — [illegible]

கால்கேட் குளோரோபில் டூத்பவுடர்



குளோரோபிலின் பூரண நன்மைகளை நீங்கள் உபயோகிக் கையில் தருகிறது!

வீரிய குளோரோபில்தான் பலன் தரும்!

வீரிய குளோரோபிலின் நன்மைகளை எல்லாம் புதிய கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் தருகிறது வீரிய குளோரோபில் தான் வாய் நாற்றம், கிரிமிகளை நீக்கி ஈறுகளைப் பலப்படுத்துகிறது. கால்கேட் முறையில் குழந்தைகளுக்கு குளோரோபில் கவனிப்பை அளியுங்கள்—அரிய சந்தர்ப்பம்.



வாய் நாற்றத்தை அழிக்கிறது

ஒரு விசேஷ சூத்திரம் காரணமாக கால்கேட் குளோரோபில் டூத்பவுடர் துரிதமாக, திருத்தமாக வேலை செய்கிறது. உங்கள் வாய் அதிகநேரம் புதுமை, இனிமையுடன் இருக்கிறது. அதன் வாசனை ஜோரானது!

கிருமிகளை ஒழிக்கிறது




சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் பற்களைச் சிதைக்கும் அமிலங்கள் ஒழிகின்றன.




ஈறுகளை பலப்படுத்துகிறது

ஈறுகளை குளோரோபில் பலப்படுத்துகிறது. தினசரி கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் குளோரோபிலின் பூரண நன்மைகளைப்பெற்று ஈறுகளைப் பாது காக்கலாம்.



CTPG/1

நீங்கள் எழுதும்போதே பேனாவைச் சுத்தம் செய்து, பாதுகாக்கிறது



பார்க்கர் க்வின்க்

உபயோகியுங்கள்

ஸால்வ்-X

அடங்கிய மை இது ஒன்றே



பெரும்பான்மையான பேனாக்கோளாறுகளும் மலிவான மைகளால் தான் ஏற்படுவது. ஸால்வ்-X அடங்கிய க்வின்க் மையை உபயோகித்து, பேனா அரிப்பு, அடைப்பு, ரப்பர்த்தேய்வு முதலியவற்றைத் தவிருங்கள். க்வின்க் பேனாவை சுத்தமாக வைத்துக் காப்பாற்றுகிறது. எழுதுவதற்கு வெகு லாகவமான மை இது. எழுத்துக்கள் ஒரே சீராயும் அமைகின்றன. அழியா வர்ணங்களிலோ அல்லது கழுவக்கூடிய நிறங்களிலோ, நீங்கள் விரும்பிய படி வாங்கலாம். சிறந்த பயனுக்காக, எந்தப்பேனாவிலும் பார்க்கர் க்வின்க்கையே உபயோகியுங்கள்.

விநியோகஸ்தர்கள்: டாட்ஜ் & ஸேமர் (இந்தியா) லிட்.
த. பெ. 51, மதராஸ்

PKQ. 8692



அருமைத் தங்கை

‘சோபனா’

சகோதரனின் திடீர் மௌனமும், கோபமான அவனுடைய வார்த்தைகளும் லட்சுமியைத் துக்கத்தில் ஆழ்த்தின. தான் படிக்காத கடிதத்தைப் பற்றி அவன் அவ்வளவு வீம்புடன் கேட்டால் அவள்தான் என்ன பதில் சொல்ல முடியும்! இத்தனை நாட்களாகத் துளிக்கூடச் சண்டையோ, வாக்கு வாதமோ இல்லாமல் அன்யோன்யமாகப் பழகின அவர்களைத் திடீரெனச் சண்டை மூட்டி விட்ட அந்தக் கடிதத்தில் அப்படி என்ன விஷயம்தான் அடங்கி யிருக்கிறது என்று அறிந்து கொள்ள அவளுடைய பெண்ணுள்ளம் விழைய ஆரம்பித்தது.

“அண்ணா!” என்று பயத்துடன் மெதுவாகத் தன்னுடைய சகோதரனை அழைத்த லட்சுமி, அந்த அறையில் அதுவரையில் நிலவி யிருந்த பயங்கரமான அமைதியைக் கலைத்தாள்.

“என்னோடே பேசாதே லட்சுமி. என் மனசு சரியாயில்லை. நீ உடனுக்குள்ளேயே நாக்கை வளைக்க ஆரம்பித்து விட்டாய்!” என்று விரக்தியுடன் கூறிப் பெருமூச்சுவிட்டான் மகாலிங்கம்.

சகோதரனின் வார்த்தைகள் லட்சுமியின் மனதை ஈட்டிபோல் குத்தின. மிகப் பெரிய அர்த்தங்களைத் தாங்கின அந்த வார்த்தைகளை அவன் அவ்வளவு சர்வ சாதாரணமாகத் தன்மீது பிரயோகிப்பான் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஒரு கணம் திடுக்கிட்டாள்.

“என்ன!” என்று கேட்க வாயெடுத்தாள் அவள். வாயிலிருந்து வார்த்தைகள் வருவதற்கு முன் கண்ணின் ஓரத்தில் இதுகாறும் காத்திருந்த கண்ணீர் வெள்ளம் போல் பெருகி அவள் வாயை அடைத்து விட்டது. ‘உஸ்’ என்ற நீண்ட பெருமூச்சு அவளுடைய இதயத்தின் அடித்தளத்திலிருந்து புறப்பட்டுத் துக்கக் கனலைக் கக்கிக் கொண்டு வெளியே வந்தது. அவ்விடத்தில் நிற்காமல் காரியங்களைக் கவனிக்க உள்ளே வந்தாள். அடுப்பில் கெட்டிலில் வைத்திருந்த பால் பொங்குவதற்கு இருந்தது. அதைக் கீழே இறக்கி வைத்து மூடிவிட்டு, பக்கத்தில் இருந்த செம்பை எடுத்து அதிலிருந்த தண்ணீரை அடுப்பில் ஊற்றி அணைத்து விட்டு, சமையல் அறையின் நிலைப்படியில் தலையை முட்டுக் கொடுத்துக் கொண்டு தன்னுடைய ஆதரவற்ற அவல நிலைமையை எண்ணி எண்ணிக் கலங்கினாள் லட்சுமி.

** ** **

லட்சுமி சிறுவயதிலேயே தந்தையை இழந்து விட்டாள். விதவையான அவள் தாயும் தன்னுடைய மகளைச் சில வருஷங்கள்தான் பாதுகாக்க முடிந்தது. பன்னிரண்டாவது வயது அவளுக்கு நடக்கும் போது தாயாரும் காலமாகவே அவளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு உடன் பிறந்த அண்ணன் மகாலிங்கத்தின் தலைமேல் வந்து விழுந்தது. அப்போதுதான் வேலையில் அமர்ந்திருந்த அவன் கையிலிருந்த சிறிது பிதிரார்ஜித சொத்தைக் கொண்டு ஒரு வேலைக்காரியை ஏற்படுத்தி அக்கம் பக்கத்தவர்களின் யோசனைப்படி குடும்பத்தை ஒருவாறு நடத்தி வந்தான்.

காலச் சக்கரச் சுழற்சியில் லட்சுமி பதினாறாவது வயதை அடையவே, அதே சமயம் மகாலிங்கத்தின் வேலையிலும் மாறுதல் கண்டது. சிறிது உயர்ந்த சம்பளத்துடன் சென்னைக்கு மாற்றப் பட்டான் அவன். திருச்சியிலிருந்து தங்கையுடன் சென்னைக்கு வந்து சேர்ந்தான் மகாலிங்கம்.

லட்சுமியிடம் மகாலிங்கத்துக்கு எப்போதுமே தனிப்பட்ட அன்பு இருந்து வந்தது. ஆரம்பத்தில் அவள் பிறந்தவுடன் ‘தகப்பனாரை உருட்டிவிட்டாள்’ என்ற வெறுப்பு சிறிது இருந்த போதிலும் காலடைவில் அது மறைந்து போய் அவ்வளவுக்கவ்வளவு அவளை நேசிக்க ஆரம்பித்தான்.

தன்னைத் தவிர வேறு திக்கற்ற அவளைக் கட்டுப்பாடின்றி வளர்த்தான் மகாலிங்கம். அவள் வயதடைந்ததும், அவளுக்கு வரன்தேட அவன் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பல பேர் சொன்ன போதுங்கூட அவன் மனம் அதில் ஈடுபடாமல் இருந்தது! ‘லட்சுமியின் கரங்களைப் பற்றுபவன் அவளுடைய கண்களில் கண்ணீரின் சாயலே இல்லாமல் அவளை அன்புடன் வைத்துக் கொள்வானா! அவளைத் தான் அடிக்கடி பார்த்துக் கொண்டே இருக்க முடியுமா!’ என்றெல்லாம் யோசித்துப் பார்த்தான் மகாலிங்கம்.

லட்சுமியையே அதைப்பற்றிக் கேட்டுவிட்டால் என்ன என்றுகூட அவன் சிந்தனை ஓடிற்று. அவள் என்ன சொல்லப் போகிறாள்! ‘உன்னை விட்டு என்னைப் பிரித்துவிடப் பார்க்கிறாயா!’ என்றுதான் பதிலுக்குக் கேட்பாள்.

மகாலிங்கம் தனக்குத்தானே கேள்வி கேட்டு, அவைகளுக்குத் தானே பதில் கூறிக் கொள்ள விழைந்தானே தவிரத் திருமணத்தைப் பற்றி லட்சுமி என்ன தீர்மானம் கொண்டிருந்தாள் என்பதை அறிய முயலவே இல்லை.

லட்சுமியுடன் படித்த அநேக பெண்களுக்குக் கல்யாணம் நடந்து கணவனுடன் குடும்பம் நடத்தி வந்தனர். சிலர் பிள்ளை பெற்றெடுக்கப் பிறந்தகத்துக்குக்கூடச் சென்றிருந்தனர்.

ஒரு தினம் காலையில், கொஞ்ச நாட்களாக லட்சுமியுடன் தொடர்பேற்படுத்திக் கொண்டிருந்த ராதா என்ற பக்கத்து வீட்டுப் பெண் அவளைக் காண வந்திருந்தாள்.

“வா, ராதா! உன்னைத்தான் நினைத்தேன்” என்று வந்தவளை வரவேற்றாள் லட்சுமி.

கொஞ்ச நேரம் தோழிகளுக்குள் சம்பாஷணை நடைபெற்றது. திடீரென்று, "ரொம்ப நாட்களாக உன்னை ஒன்று கேட்க வேண்டுமென்று ஆவல்!" என்ற நீண்ட பீடிகை போட்டுக் கொண்டே ஆரம்பித்தாள் வந்தவள்.

"என்னடியம்மா அது. ஏதோ புதிர் போடற மாதிரி சொல்றே!" என்று வாய்விட்டுச் சிரித்துக் கொண்டே கேட்டாள் லக்ஷ்மி.

கூடத்து அறையில் உட்கார்ந்து ஏதோ புத்தகத்தில் ஈடுபட்டிருந்தான் மகாலிங்கம். தோழிகளின் மர்மமான சம்பாஷணை அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. புஸ்தகத்தைப் படிப்பதை நிறுத்தி விட்டுக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"ஒன்றுமில்லே! உங்க அண்ணா உனக்குக் கன்னிகா மாடம் கட்டுவதாகத் தீர்மானம் பண்ணியிருக்காரா!" என்று சொல்லி விட்டு ராதா சிரித்தது அவன் காதில் விழுந்தது.

"இதுதானா விஷயம்! என்னவோ ஏதோன்னு பிரமித்தேன்; எனக்குத்தான் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமில்லே என்று வைத்துக் கொள்ளேன். கன்னிகா மாடம் என்னத்துக்காகக் கட்டவேண்டும்!" என்றாள் லக்ஷ்மி தன் இயல்பான புன்முறுவலுடன்.

"எப்படி இஷ்டமில்லாமல் இருக்குமோ தெரியல்லே! இரண்டு பின்னையும் குட்டியும் அன்போடு அளவளாவுகிற அகமுடையானும் இருந்தால் அந்த ஆனந்தமே வேறுதான். திடீர் என்று உங்கண்ணாவுக்கு ஒருத்தி வருகிறாள் என்று வைத்துக் கொள் லக்ஷ்மி. அவள் எப்போதுமே உன்னிடம் அன்பாய் இருப்பாளா! இல்லே உங்க அண்ணாதான் இப்போ உன்னிடம் காட்டுகிற வாஞ்சையோடு அப்போதும் இருப்பாரா!" என்று மறு கேள்வி ஒன்றைப் போட்டு மடக்கினாள் அவள். பிறர் விஷயங்களிலெல்லாம் தலையை நீட்டி அவைகளைச் சொந்த விஷயம்போல் நினைத்துப் பேசுவதில் இந்தப் பெண்களுக்கு என்ன ஆனந்தமோ தெரியவில்லை!

மகாலிங்கம் தன் கையில் வைத்திருந்த புஸ்தகத்தை மடக்கித் தூரத்தில் இருந்த மேஜை மீது வீசி எறிந்தான். 'டொபீர்' என்ற சத்தத்துடன் அது போய் மேஜையில் விழுந்தது. அந்தச் சத்தம் கேட்டாவது சம்பாஷணை அறுந்து போகும் என நினைத்தான். ஆனால் அது முற்றுப் பெறுவதாக இல்லை. அதுபாட்டுக்குச் சுவாரஸ்யம் குன்றாமல் நீண்டு கொண்டிருந்தது.

"உனக்குத் தெரியாத விஷயத்தைப் பற்றிப் பேசாதே, ராதா. என் அண்ணா அப்படிப்பட்ட ஆள் இல்லே" என்றாள் லக்ஷ்மி அமைதியுடன்.

"நீ அப்படி நினைக்கிறே; சரி, அப்படியே உங்க அண்ணா உன்னிடம் பிரியமாகவே இருக்கட்டும். வருகிறவள் உங்கண்ணாவின் மனசைக் கலைக்க மாட்டாள் என்பது என்ன நிச்சயம்! எவ்வளவு யோக்கியமாயிருந்த புருஷர்கள் கல்யாணம் ஆனவுடன் பெண்டாட்டி தாசர்களாக மாறிவிடவில்லே!" என்று அடுக்கினாள் ராதா.

"நீ கூட உன் புருஷனை அப்படித்தான் ஆட்டி வைக்கிறாயோ!" என்று கேட்டாள் லக்ஷ்மி.

"நான் மாத்திரம் என்ன! நீ கூட நாளைக்குக் கல்யாணம் ஆனபிறகு அப்படித்தான் செய்வே லக்ஷ்மி! உன்னைக் கவனிக்காமல் ஒரு புருஷன் இருந்தால் அவன் மனசை நீ உன்னிடம் வசப்படுத்த விரும்ப மாட்டாயா!" என்றாள்.

விஷயம் தீவிரமாகப் போய்க்கொண்டிருந்தது.

அதற்கு மேல் மகாலிங்கம் பொறுமையுடன் இருக்க அசக்தனாய் இருந்தான்.

"லக்ஷ்மி!" என்று தங்கையை அழைத்த அவன் குரல் உள்ளே சென்று திரும்பி எதிரொலிக்கும்படி உச்சஸ்தாயியில் இருந்தது.

"சரி, உங்கண்ணா கூப்பிடுகிறார். நான் போய் விட்டு வருகிறேன்" என்று மூன்னை விறைத்து விட்டுச் சென்று விட்டாள் ராதா.

"என்ன அண்ணா!" என்று அன்பு ததும்பக் கேட்டுக் கொண்டே மகாலிங்கம் இருந்த அறையில் நுழைந்தாள் லக்ஷ்மி.

"இன்னிக்கு உனக்கு ஒழிவாய்த் தானே இருக்கு! ஸினிமாவுக்குப் போகலாமே!" என்று நிதான குரலில் தங்கையை வினவினான் மகாலிங்கம்.

"திடீரென்று எதற்கண்ணா! உனக்குப் போக வேண்டும் என்றிருந்தால் போய் விட்டு வரலாம். நானும் வரேன்" என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தாள் அவள்.

"இல்லே படம் பார்க்கப் போய் ரொம்ப நாளாச்சேன்னு கேட்டேன்!" என்று மகாலிங்கம் மறுப்பினான்.



கொஞ்ச நேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் என்ன பேசினோம் என்று அறியாமலேயே அவர்களுடைய வாய் பேசிக்கொண்டிருந்ததே தவிர இருவருடைய உள்ளமும் வெவ்வேறு திக்கில் யாத்திரை கிளம்பியிருந்தது. ராதா சொன்ன வாக்கியங்கள் லக்ஷ்மியின் மனத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தன. மகாலிங்கமும் தான் எதிர்பாராதபடி கேட்க நேர்ந்த தோழிகளின் அந்தரங்க சம்பாஷணையைப் பற்றி மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தான்.

'உனக்குக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற ஆவல் இருக்கிறதா!' என்ற கேள்வி மகாலிங்கத்தின் உள்ளத்தில் எழுந்ததும் வெளியில் சொல்ல அவனுக்கு நா எழவில்லை.

"மன்னி எப்போது அண்ணா வரப்போகிறாள்! வந்தால் எப்போதும் போல் நீ இருப்பாயா, அல்லது அவள் உன்னைக் கரைத்து விடுவாளா!" என்று வேடிக்கையாகக் கேட்க எண்ணினாள். ஆனால் தான் கேட்பதை அவன் தவறாக எடுத்துக்

கொண்டு தன் மேல் கோபம் கொள்வானோ என்று பயப்பட்டாள் அவள்.

முதல் தினம் நடந்த சம்பவங்கள் பனித்திரையைப் போல் மனசில் லேசாக இருந்தபோதிலும் காலையில் வழக்கம்போல்தான் அண்ணனும் தங்கையும் தங்கள் தங்கள் காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

"நான் தனியாயிருக்கேன். ஆபீஸ் விட்டதும் வீட்டுக்கு வந்துவிடு!" என்று தினப்படி தன் சகோதரனுக்கு விடுக்கும் வேண்டுகோளை இன்று விடுத்தாள் லக்ஷ்மி.

சிரித்துக் கொண்டே ஊம்பினான் மகாலிங்கம்.

அவன் சென்று கால் மணி கூட ஆகியிராது. லொட்டென்ற சத்தம் கேட்டு வாசற் கதவைத் திறந்தாள் லக்ஷ்மி. கதவிடுக்கு வழியாக நான்கு மூலைகளிலும் மஞ்சள் தடவப்பட்ட ஒரு கடிதம் கீழே விழுந்தது. அவளைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருந்தது. அவசரம் அவசரமாக அதைக் கையிலெடுத்துப் பார்த்த லக்ஷ்மி வியந்தாள். அதன் வாய்ப்புறம் அரை குறையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கவரில் என்ன இருக்கிறது என்று அறியும் ஆவலில் அதை மேலும் கொஞ்சமாகத் திருப்பிப் பார்த்தாள். அதனால் பிரயோஜனம் எதுவும் ஏற்படவில்லை. ஏற்கெனவே இருந்ததைவிட அதன் வாய்ப்புறம் இன்னும் சற்றுப் பிரிந்ததுதான் மிஞ்சிற்று!



ஒருகால் ஜாதகங்களாக இருக்குமோ! அவள் இளம் உள்ளத்தில் திடீரென்று ஒரு சிறு ஒளி பிரகாசித்து ஜொலிக்க ஆரம்பித்தது.

"தனக்கு வரன் தேடுவதில் அண்ணா முனைந்திருக்கிறானோ! தன்னிடம் சொல்லாமல் இருக்க மாட்டானே!" என்ற எண்ண அலைகள் மலையாக எழும்பி அவள் இருதயத்தை மோதின.

கவரை மெதுவாக கீராசினில் காட்டிப் பிரித்துப் பார்த்துவிட்டுப் பின்னர் முன்பு இருந்ததைவிட நன்றாக ஒட்டி வைத்து விட்டாள்!...

"சீ! சீ!! எல்லாம் அண்ணன் வந்த பிறகே தெரியட்டும். அதற்குள் எதுவும் கெட்டுப் போய் விடாது!" என்ற நிர்மானத்துக்கு வந்து கவரை கோட் ஸ்டாண்டின் மேல் வைத்தாள். காரியாலயத்திலிருந்து வந்ததும் கோட்டைக் கழற்றி வைத்தவுடன் தனக்கு வரும் கடிதங்களைப் படிப்பது மகாலிங்கத்தின் வழக்கமாக இருந்தது.

கடிதத்தை வைத்த பிறகு மற்றொரு நினைவு அவள் சந்தேக மனத்திடையே எழுந்தது. ஒருகால் வந்தது அண்ணனின் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கும் பெண்ணின் ஜாதகமாக இருந்தால்!

"அசம்பாவிதம்!" என்று தன் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு புதிய வழி எதுவும் அவளுக்குத் தோன்றவில்லை.

பொழுது சட்டென்று கழிந்தது. கடிகாரம் ஐந்தடித்தது லக்ஷ்மியைத் திடுக்கிடச் செய்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் காரியாலயத்திலிருந்து மகாலிங்கம் வந்துவிடுவான். விஷயம் என்னவென்று விளங்கி விடும்! அவள் எத்தனை ஆவலுடன் இன்று தன் தமையனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்!

கண்ணாடியைப் பார்த்துத் தலைவாரிப் பௌடர் பூசிக் கொண்டு தமையனை வரவேற்கத் தன்னைத் தயார் செய்து கொள்ள எழுந்தாள் லக்ஷ்மி. தன்னுடைய முகத்தைக் கண்ணாடியில் பார்த்தபோது அவள் பிரதிபிம்பம் அவள் கண்களை ஏய்ப்பது போல் இருந்தது. முகம் ரத்தமேறிச் சிவந்துபோய் இருந்தது. கண்கள் இரண்டும் வெளியே விழுந்து விடுவது போல் முண்டிக் கொண்டு நின்றன. அவசரம் அவசரமாக முகத்தைச் சோப்பால் சுத்தம் செய்து கொண்டு நெற்றியில் திலகமிட்டுக் கொண்ட போதுதான் அவளுக்குத் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துச் சகிக்க முடிந்தது. உதட்டில் புன்னகையை மலரவிட்டுக் கொண்டு காப்பி அடுப்பைப் பற்றவைத்தாள் அவள். தண்ணீர் காய்ந்து கொண்டிருக்கும்போது வாசலில் காலடிச் சத்தம் கேட்டது. தண்ணீரை அவசரமாக இறக்கிவிட்டு, கெட்டிலில் பாலை ஊற்றி அடுப்பில் வைத்துவிட்டுக் கூடத்துக்கு ஓடி வந்தாள் லக்ஷ்மி.

"என்ன லக்ஷ்மி! ஏன் ஒரு தினுசா இருக்கே!" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் மகாலிங்கம். அவன் கேள்வி அவளது முகம் பழைய நிலையை அடையவில்லை என்பதை அவளுக்குத் தெரிவித்தது.

"ஒன்றுமில்லை, அண்ணா!" என்று சொல்லிவிட்டுப் பலவந்தமாக முகத்தில் மலர்ச்சியை வரவழைத்துக் கொண்டு நின்றாள்.

கோட்டைக் கழற்றிவிட்டுக் கடிதத்தைக் கையிலெடுத்த மகாலிங்கம் அதன் நிலையைக் கவனித்துவிட்டுச் சட்டென்று தங்கையின் பக்கம் திரும்பினான். எதிர்பாராதபடி சகோதரனின் கண்களைச் சந்தித்த லக்ஷ்மி அவைகளில் பிரகாசித்த நிஷ்டூரத்தைத் தாங்காமல் தன் தலையைக் கவிழ்த்துத் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'தன்னை அடிக்கடி லக்ஷ்மியின் ஜாதகத்திற்காக வற்புறுத்தின எவரோதான் பிள்ளையின் ஜாதகத்தை அனுப்பியிருக்கின்றனர். அதைப் பார்த்ததும்தான் லக்ஷ்மிக்கு வருத்தமோ என்னவோ!'

படிப்பும் தொழிலும்

நான் 1953-ம் வருடம் மார்ச் மாதம் இண்டர் பாஸ் செய்தேன். இதுவரையிலும் தண்டச் சோறு சாப்பிட்டு வருகிறேன். தங்கள் கல்கியில் "கவர்னர் மகன் கூலி வேலை செய்கிறான்" என்ற கட்டுரையைப் படித்த நான் சர்க்கார் வேலையை எதிர்பாராமல் ஓர் மண்டிக்குச் சென்று வேலை கொடுக்குமாறு கேட்டேன். படித்த பையனுக்கு அத் தொழில் எதற்கு! என்று கூலி வேலை தர மறுத்து விட்டார்கள். பிறகு ஒரு தையற்காரர்களிடம் சென்று எனக்கு அத்தொழில் கற்றுக்கொடுக்கும்படி கேட்டேன். 'இவ்வளவு படித்த உனக்கு இத் தொழில் எதற்கு?' என்று அவர்களும் சொல்லி விட்டார்கள். இவ்வாறே சில ஜவுளிக் கடைக்காரரும் சொல்லி விட்டார்கள். நான் பலரிடம் சென்று வேலை கோரியும் நான் படித்தவன் என்ற ஒரே காரணத்தால் எனக்கு வேலை கிடைக்கவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க, படித்த மாணவர்கள் எல்லாத் தொழில்களையும் செய்ய வேண்டுமென்ற பிரசாரம் செய்வதால் யாருக்கு லாபம்! படித்தவர்களை அலட்சியப் படுத்துவதால் தான் பலரிடையே தற்கொலை அதிகரித்து வருகிறது.

திருப்பத்தூர்
18—5—54
சோ. அ. சுந்தரராமன்

என்று நினைத்துக் கடிதத்தை எடுத்துக் கொண்டு தன் அறைக்குப் போனான்.

அநேகமாகப் பிரித்திருந்த கடிதத்தைத் திறக்க அவன் சிரமப்படவில்லை. ஜாதகம் ஒரு பெண்ணினுடையது. மகாலிங்கத்தின் ஜாதகத்தைக் கேட்டுப் பெண்ணைப் பெற்றவர் எழுதியிருந்தார்.

மூன்றினம் லக்ஷ்மியின் சிநேகிதியின் சம்பாஷணைகள் அவன் செவிகளில் ரீங்காரம் செய்தன. 'லக்ஷ்மி தனக்கு வந்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்திருக்கிறாள்' என்ற முடிவைப் பெறுவது அவனுக்குக் கஷ்டமாக இல்லை. 'தனக்கு வந்த கடிதத்தை அவள் பிரித்ததால் தானே இந்த விவகாரமெல்லாம்! பிறருக்கு வரும் கடிதத்தை அவள் எவ்வாறு பிரித்துப் பார்க்கலாம்!' என்று ஆத்திரமாக வந்தது அவனுக்கு.

நாற்காலியிலிருந்து விருட்டென்று எழுந்து கூடத்துக்கு வரும் அறை வாசற்படியைத் தாண்டினான். அதற்குள் காய்ந்த வரையில் போதும் என்று இரண்டு கரண்டி பால் எடுத்துக் காப்பி கலந்து எடுத்துக் கொண்டு எதிரே வந்த லக்ஷ்மியின் மீது மோதினான். நிலை கலங்கின லக்ஷ்மி கையிலிருந்த பாத்திரத்தின் பிடிப்பை விட்டாள். தம்ளரில் அடங்கியிருந்த காப்பி எதிர்பாராத அதிர்ச்சியில் கீழே விழுந்து எட்டு மூலைகளிலும் சிதறிப் பாய்ந்தது. அதே போன்ற நிலையில்தான் மகாலிங்கமும் இருந்தான்.

"எனக்கு வந்த கடிதத்தை நீ எப்படிப் பிரிக்கலாம்!" என்று அவன் முகவுரையும், பின்னுரையும் இல்லாமல் திடுதிப்பென்று லக்ஷ்மியைப் பார்த்துக் கோபமாகக் கேட்டான்.

"ஏன் அண்ணா, நான் பிரித்தேன் என்று யார் சொன்னது!" என்று பயம் மிகுந்த குரலில் தடுமாறிக் கொண்டே கேட்டாள் லக்ஷ்மி.

"அக் கடிதத்தை நீ படித்திருக்கிறாய் என்று நான் சொல்லுகிறேன்!" என்று கைவிரலை ஆட்டிக் கொண்டே அடிபட்ட வேங்கை போல் பலத்த குரலில் கத்தினான் அவன்.

நான் சொன்ன பதிலை லக்ஷ்மி வற்புறுத்தத் தயங்கவில்லை. "நான்தான் படிக்கவில்லை என்று சொல்கிறேனே. அப்புறம் இடைவிடாது கேட்டால்!" என்ற பதிலையே அவள் தன்னைக் கேட்ட நூறு தரமும் கூறினாள் லக்ஷ்மி. ஆரம்பத்தில் அவளுக்கு இருந்த பயமும், நடுக்கமும் மறைந்து முடிவில் தைரியமாகச் சொன்ன போது தான் மகாலிங்கத்தின் மனதில் விரக்தி தென்பட்டது.

** ** **

"நான் ரொம்ப நேரமாகக் கூப்பிடறேனே! ஏன் இப்படிப் பிசாசு பிடித்தவள் மாதிரி வாசற்படிக் கதவில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாய்!" என்று தன்னைப் பிடித்து ஒருதரம் ராதா அசைத்தபோது தான் சுயநினைவை அடைந்தாள் லக்ஷ்மி.

ராதாவைப் பார்த்த போது, 'இவளால் தானே இவ்வளவு குழப்பமும்' என்று அவள் உள்ளுணர்வு பொருமிற்று. ஆனாலும் அவள் முகத்தைக் கனிவுடன் வைத்துக் கொண்டு, "அண்ணா ஏதோ கோபமா இருக்கான் ராதா. நீ பிறகு வா பேசலாம்!" என்று கூறி அவளை அனுப்பி வைத்தாள்.

ராதா சென்ற பின் வாசற் கதவைத் தாளிட நினைத்தாள். வெள்ளிக் கிழமையும் பொழுதுமாய் அதைச் செய்யத் துணிவில்லை அவளுக்கு.

தன் வருத்தத்தை எல்லாம் மறைத்துக் கொண்டு, "அண்ணா, என்னோடு பேசமாட்டாயா!" என்று குழந்தை மாதிரி கேட்டுக் கொண்டே மகாலிங்கத்தின் அறைக்குள் பிரவேசித்தாள் லக்ஷ்மி. இத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த துக்கம் அவ்வளவும் பீறிட்டுக் கொண்டு வந்தது அவளுக்கு.

"நீ என்னிடம் 'நீ கல்யாணம் செய்து கொள்ளத் தான் வேண்டும்' என்று சொல்லியிருந்தால் நான் மறுத்திருப்பேனா அண்ணா!" என்று மகாலிங்கத்தினிடம் கெஞ்சும் குரலில் கேட்டாள் லக்ஷ்மி.

"என்ன!" என்று திடுக்கிட்டான் அவன்.

"ஆமாம். நானும் தான் உன்னோடு எத்தனை நாளைக்கு இருக்க முடியும்! அல்லது நீதான் எத்தனை நாட்களாக எனக்காகக் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பாய்!" என்று தன் விக்கலுக்கிடையே திக்கித் திக்கிச் சொன்னாள் லக்ஷ்மி.

மகாலிங்கம் இப்பொழுது விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டான்!

"நீ பொய் சொல்லவில்லை லக்ஷ்மி. நான்தான் உன்னைச் சந்தேகப் பட்டேன். நீ கடிதாசைப் பிரிக்கவில்லை. இதெல்லாம் உன் சிநேகிதியால் வந்த வினைதான்" என்று லக்ஷ்மியின் கண்களைத் துடைத்துக் கொண்டே அவளைச் சமாதானப் படுத்த முயன்றான் மகாலிங்கம். அவனுடைய குரல் தழுதழுத்துக் கம்மிப் போயிருந்தது. இந்த நெருக்கடியில் கையில் வைத்திருந்த ஜாதகம் கீழே விழுந்ததைக்கூட அவன் அறியவில்லை.

"சௌபாக்யவதி ஜானகி, பாரத்வாஜ கோத்திரம்...!" என்று கட்டங்களுக்குக் கீழ் பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருந்ததைக் கண்ணீருக்கிடையே கவனித்தாள் லக்ஷ்மி.

அவள் வருத்தம், கண்ணீர், யாவும் பறந்தன.


"என் மன்னி வந்த பிறகுதான் நான் கல்யாணம் செய்து கொள்வேன்!" என்று குதூகலமிக்க குரலில் கத்திக் கொண்டே கீழே விழுந்த ஜாதகத்தை எடுத்தாள் லக்ஷ்மி.

அரை குறையாய்ப் பிரிந்தபடி வந்த கவர் மட்டும் மேஜையில் இருந்தபடியே படபடவென்று காற்றில் அடித்துக் கொண்டது. அது தன் செய்கைக்காக வருத்தப்படுவது போல் இருந்தது!

'கோடக்' பிலிம்கள்

நீங்கள் விரும்பும் ஒவ்வொரு படத்திற்கும் பூர்ண வெற்றி அளிக்கிறது


உங்கள் காமிராவில் 'கோடக்' பிலிமை நிறைப்பதில் உங்களுக்கு எவ்வித அச்சமும் வேண்டியதில்லை. ஏனென்றால், ஜொலிக்கும் அதிப்பிரகாசமான ஒளியிலிருந்து ஆழ்ந்த நிழல்வரை எச்சமயத்திலும், ஒவ்வொரு சிறு பொருளையும் மிகத் தெளிவாக நீங்கள் பதிவு செய்துகொள்வதற்கு அதுவே உத்தமமானது.



வெரிக்ரோம்— படம் பிடிப்பதை பிரியமான பொழுது போக்காக கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானவர்கள் அதிகப் பிரகாசத்துடன் திகழும் வெளிப்புறக் காட்சிகளை (அவுட்-டோர் ஸ்னாப்ஸ்) படம் பிடிப்பதற்கு வெரிக்ரோமையே விரும்புகிறார்கள்.



சூப்பர்—X X— மங்கிய ஒளியிலோ, செயற்கை ஒளியிலோ எடுக்கும் படங்களுக்கும், அதே போல் துரிதமான செயல் காட்சிகளை (ஆக்ஷன் பிக்சர்ஸ்) படம் பிடிப்பதற்கும் மிகவும் சிறந்தது.




ப்ளஸ்—X— நல்ல தெளிவான உயர்ந்த ரகப்படங்களுக்கு மிகவும் இசைந்தது. அத்துடன், சிறு நெகடிவ்களிலிருந்தும் கூட மிக அழகான பெரிய என்லார்ஜ்மென்ட்கள் செய்யலாம்.

● அடுத்தாற்போல் படம் பிடிப்பதற்கு வரும் அவசரத்தை ஒருக்காலும் முன்பே தெரிந்துகொள்ள இயலாது. இன்றே இரண்டு ரோல்கள் —ஒன்று உங்கள் காமிராவில் நிறைப்பதற்கு. இன்னொன்று அதிகப்படியாக கையிருப்பிற்கு—வாங்கி வைத்துக்கொள்ளுங்கள்.

கோடக் லிமிடெட்.
(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது)
பம்பாய் • கல்கத்தா.
டில்லி • மதராஸ்

K. 9018



பூங்கொடி

கே.வி.முருகன்



அன்பான கணவன் கிடைத்து விட்டது பற்றிப் பூங்கொடிக்கு அளவில்லா மகிழ்ச்சி. உலகத்தில் ஒரு பெண்ணுக்கு அதைக் காட்டிலும் ஆனந்தம் கொடுக்கக் கூடியது வேறேது! ஆனால் அன்னையை விட்டுப் பிரிய வேண்டியிருக்கிறதே என்ற நினைவு வந்து அவள் உள்ளத்தைத் தாக்கும் போது அளவற்ற வேதனை யடைந்தாள். அவளுடைய மெல்லிய இதயம் அந்த நிகழ்ச்சியைத் தாங்குமா! 'பெண்ணாகப் பிறந்தவள் என்றாவது ஒரு நாள் பெற்றோர்களை விட்டுப் பிரிய வேண்டியவள் தானே! கணவனுடன் வாழ்வதுதானே ஓர் உத்தமப் பெண்மணிக்குச் சுவர்க்கம்!' இதையெல்லாம் கதைகளில் படித்து மகிழ்ந்திருக்கிறாள் பூங்கொடி. மானசீகமாக எண்ணிப் பார்த்தும் ஆனந்த மடைந்திருக்கிறாள். இருந்தும் இன்று அவளுக்கு ஆறுதல் தேவையாக இருக்கிறது.

அழகான கணவன், பெரிய குடும்பம். பெரிய குடும்பம் என்றால் பணத்தில்! பெற்றோர்களுக்கு ஒரே புதல்வன். பெயர் ரவிச்சந்திரன். நன்கு படித்தவன். குணக் குன்று. எல்லாவற்றிற்கும் மேலாகப் பூங்கொடியின் பேரில் உயிரையே வைத்திருந்தான். பின் ஏன் அவளுக்குத் தயக்கம்! யாருக்கும் கிடைக்காத பாக்கியம் அவளுக்குக் கிட்டி யிருக்கிறது; இருந்தும் ஏன் ஏக்கப் பெருமூச்சு அவளைப் படாதபாடு படுத்துகிறது! அது தான் புரியாத புதிர்!

உலகம் தோன்றி, மனிதன் தோன்றி, சமுதாயம் அமைந்த காலிலிருந்து மனிதக் குலத்தைப் பாசமும் பந்தமும் பிடித்துக் கொண்டதே! பூங்கொடிக்கு மட்டும் அது விலக்கல்லவே!

பதினெட்டு ஆண்டுகள் அன்னை மடியில் விளையாடியவள் பூங்கொடி. ஒரே மகள்; பெற்றோர்களின் குலக் கொடி. அவளுக்கு வயது பதினெட்டு ஆகிவிட்ட போதுங்கூட அவளுடைய அன்னைக்கு அவள் இன்னும் சிறு குழந்தைதான்!

பூங்கொடியினுடைய அன்னையின் கவலையைத் தேற்றுவார் யார்! மகளுக்கு மணமாகும் வரை மனம் குதூகலித்தாள். பூங்கொடியின் கழுத்தில் தாலி ஏறியபோது பெருமூச்செறிந்தாள் கௌரி. தன் புதல்வி, அருமை மகள், இனி தன்னுடையவளல்ல என்று நினைக்கக் கூட கௌரியால் முடியவில்லை. பின்பு சிலகாலம் மகளையும், மருமகனையும் சீராட்டிய போதெல்லாம் உவகை மேலிட்டு உள்ளமெல்லாம் பூரித்து மகிழ்ந்தாள்!

இன்று! என்ன செல்வமாகவளர்த்தாலும், தன்மகள் பெண் தானே! அவள் கணவன் வீட்டுக்கு ஒருநாள் போய்த்தானே தீர வேண்டும்! இதை எண்ண எண்ண அவள் மனம் நிலை கெட்டுத் தடுமாறியது. இன்னும் இரண்டே நாள்! அப்புறம் பூங்கொடி போய் விடுவாள். பகலிலும் இரவிலும் தன்னுடன் வைத்துப் பாதுகாத்து வந்த பைங்கொடி பறந்து விடுவாள். பறவை இனத்தில் இறகு முளைத்து, குஞ்சு பறக்கத் தொடங்கியதும் தாய்ப்பறவை குஞ்சுகளை மறந்து விடுவது இயற்கை! பகவானே அத்தகைய தன்மையை ஏன் மனிதக் குலத்துக்கு மட்டும் அளிக்கவில்லை! மகள் போய் விடுவாள். பின்பு! பின்பென்ன! தானுண்டு; வீடுண்டு, வீட்டின் நான்கு பக்கத்துச் சுவர்களுண்டு! கணவன்! அவரா! நல்ல காலத்திலேயே நாலு மணி நேரம் சேர்த்தாற் போல் வீட்டில் தங்க மாட்டார். மகளைப் பிரிந்த ஏக்கம் அவருக்கு மட்டும் இராதா என்ன! ஏக்கத்தில் வீட்டில் இடிந்து கிடப்பதைவிட எங்காவது செல்வோம் எனச் சென்றுவிடமாட்டாரா! ஆகப் பூங்கொடி புருஷன் வீடு சென்று விட்டால் இந்த வீடே வெறிச்சோடி இருளடைந்து விடுமே, என்ற அவள் ஏக்க உள்ளத்தில் மற்றொரு பழைய சம்பவம் படம் விரித்து ஆடியது.

• • •

கௌரி அப்போதுதான் கணவன் வீட்டில் காலடி எடுத்து வைக்கிறாள். முதல் அடி எடுத்து வைத்த வுடனே, முதல் முதல் அவள் காதில் கேட்ட குரல் அவ்வளவு ரம்யமாயில்லை. மாமியாரின் குரலை எந்த மருமகள் தான் ரசித்ததுண்டு!

''வாம்மா! வா! இன்றுவரை அவனுக்கு மட்டும் கொட்டி வளர்த்தேன். இன்று முதல் நீயும் சேர்ந்து கொள். இந்த வீட்டில் நான் ஒருத்தி தான் எல்லாம்! தெரிந்து கொள்.''

இது மாமியாரின் முதல் வரவேற்பு. கௌரிக்குச் சோரேலென்றது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''அத்தை! இன்று முதல் நான் உங்கள் பெண். நீங்கள் கூறுபவைகளைக் கேட்டு அதன்

படி நடப்பேன். தவறு செய்தால் திருத்துங்கள் அத்தை!" எப்படியோ நீர் மல்கிய கண்களுடன், தட்டுத்தடுமாறிக் கூறி விட்டாள் கௌரி.

"ஆமாண்டியம்மா! முதன் முதலில் அப்படித்தான் இருப்பாய்! இந்த வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டவுடன் அப்புறம் எப்படி மாறிவிடுவாயோ! எல்லாம் போகப் போகத் தெரியும்" என்று கூறி விட்டு விசுக்கென்று உள்ளே போய்விட்டாள்.

கௌரி அன்று பூராவும் கண்ணீர் வடித்தாள். அன்று ஆரம்பித்த கண்ணீர் அவள் வாழ்க்கையில் பல வருடகாலம் நிற்கவே இல்லை. அவள் மாமியாரின் கொடுமைகள்; அப்பப்பா! அதை அளவிட முடியாது. சாதுப் பெண்ணாக இருந்துமே கௌரி அத்தனை பாடு பட்டாள். மாமியார்கள் ஏன் மருமகளைப் படுத்தவேண்டும்!

வாழ்க்கை பூரணத்துவம் அடையாத பெண்கள், சிறு வயதிலேயே கணவனைப் பறிகொடுத்து விட்ட பெண்கள். வாழ்க்கையில் இன்பமே அனுபவிக்காத பெண்கள், துன்பமயமான வாழ்க்கையை ஏற்றுக் கொண்ட பெண்கள் வயது ஆக ஆக, தங்களின் நிறைவேறாத ஏக்கத்தையும், மனத்திலே அடங்கிக் கிடந்த வேகத்தையும், தன் வீட்டுக்கு வந்து சேரும் அப்பாவி மருமகள் பேரில்தானே காட்ட முடிகிறது! அதனால்தான் மனித வாழ்க்கையில் மாமியார்—மருமகள் சண்டை ஒரு பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டது போலும்!

கௌரி எப்படியோ பல்லைக் கடித்துக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தாள். மாமியாரின் மறைவுக்குப் பின்தான் கௌரி தனது வாழ்நாளிலே இன்பத்தைக் கண்டாள்!

இன்று அந்தப் பழைய நினைவு வந்து விட்டது. அந்த நினைவு வந்தவுடன், கௌரியின் உள்ளமே ஒடிந்தது. தன் செல்வப் புதல்வி, பூங்கொடி இதுவரை ஒருமுறை கூடக் கடின வார்த்தையே கேட்டறியாதவள்; புக்ககத்தில் சென்று என்ன பாடு படப் போகிறாளோ!

'என்றாவது ஒரு நாள் பெண்ணானவள் கணவன் வீடு போக வேண்டியவளாயிற்றே! அங்கு சென்றால் வேலை வெட்டிகளைக் கவனிக்க வேண்டி வருமே!" என்ற எண்ணம் ஒரு நாள் கூட கௌரிக்கு ஏற்பட்டதில்லை. அப்படி என்றாவது எண்ணம் வந்திருந்தால் பூங்கொடிக்கு வேலை செய்யக் கற்றுக் கொடுத்திருப்பாளல்லவா!


இப்போது என்ன செய்வது! இன்னும் இரண்டு நாளில் மகள் சென்று விடுவாள். மறு நாள் பகலெல்லாம் மகளுக்குப் போதித்தாள். மாமியாரிடம் எப்படி எப்படி நடக்க வேண்டும்; கணவனிடம் நடந்துகொள்ள வேண்டிய விதம் இவைகளைப் போதித்தாள். கடைசியாக, "பூங்கொடி! என் கண்ணே! உன் அம்மாவுக்கு நல்ல பெயரைத் தேடிக் கொடு. இந்த லட்சணத்தில் உன்னை வளர்த்திருக்கிறேனே, என்ற கெட்ட பெயரைத் தேடித் தந்து விடாதே. அடிக்கடி என்னை நினையாதே. இனி எல்லாம் உனக்கு உன் மாமியாரே. அவரைத் திருப்தி செய்வதில்தான் உன் வாழ்க்கை இருக்கிறது" என்று கூறி முடித்தாள்.

பூங்கொடி புத்திசாலி. படித்திருக்கிறாள் பல கதைகளை. மாமியார் மருமகள் சண்டை பற்றிக் குறிப்பிடாத கதை ஏது! கேட்டிருக்கிறாள் பல சம்பவங்களைத் தனது தோழிகளிடம். மாமியாரைக் குறைகூறாத மருமகள் ஏது! தன் வரையில் ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். எப்பாடு பட்டேனும் வரப் போகும் தனது மாமியாரிடம் நல்ல பெயரெடுக்க வேண்டும் என்ற உறுதி பூண்டிருந்தாள். ஏற்கனவே ஒரு முடிவு கொண்டிருந்தவளாதலின், அன்னை கூறுவதை அக்கறையுடன் கேட்டாள். கடைசியாக, 'அம்மா! உனது புதல்வி, 'உன் மகள்' என்ற பெயரை உனக்குப் பெருமையுடன் வாங்கித் தருவாளம்மா! கவலைப்படாதே" என்றாள். கௌரிக்கு உடம்பெல்லாம் குளிர்ந்தது. ஒருவாறு கவலை குறைந்தது.

பூங்கொடி புக்ககம் வந்தடைந்தாள். பெரிய பங்களா, மோட்டார் கார் இவைகளெல்லாம் அவள் மனத்தைக் கவரவில்லை. அவளின் அகன்று விரிந்த கண்கள், அந்தப் பங்களாவில் அவள் நுழைந்ததும், சுற்றிச் சுழன்றன. யாரையோ, எதையோ அவைகள் தேடின! கடைசியாகக் கண்டுபிடித்து விட்டன!

பூங்கொடியின் மாமியார் சிரித்த முகத்துடன் தோன்றினாள். அவள் ஒரு நடுத்தர வயதுடைய மாது. களங்கமில்லாக் களை பொருந்திய முகம். அந்த அம்மாள் பூங்கொடியை ஆவலுடன் வரவேற்றாள். பூங்கொடி காலைத் தொட்டு வணங்கினாள். லக்ஷ்மி, அதுதான் அந்த அம்மாளின் பெயர்—பூங்கொடியை அணைத்துக் கொண்டே, "என் வீட்டுக்கு விளக்கேற்றி வைக்க வந்த செல்வமே வாம்மா!" என்று ஆதரத்துடன் கூறி வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள். அந்த அணைப்பிலும், அன்பு கலந்த வார்த்தையிலும் இருந்த இன்பம் பூங்கொடியை என்னவோ செய்துவிட்டது. அன்னையின் மாதுரியம் நிரம்பி வழிவதைக் கண்டாள்.

பூங்கொடிக்கு ஆரம்பம், அவள் அன்னை கௌரிக்குப் போலில்லை. இன்பகரமான வரவேற்பில் அவள் உள்ளம் பெருமிதம் அடைந்தது!



தன் மகனுக்குப் பெண் தேடிப் பூங்கொடியை முடிவு செய்த போதே அவளைப் பற்றி நன்றாக விசாரித்துக் கொண்டாள் லக்ஷ்மி. லக்ஷ்மிக்கு இந்த உலகத்தில் ஒரே ஒரு ஆசை! தனக்கு வரக் கூடிய மருமகளைத் தான் நடத்தும் விதம் உலகத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும் என்பதே அந்த ஆசை! மாமியார் மருமகள் சண்டை என்பது தன் வீட்டில் எதிரொலிக்கக் கூடாது. அதற்குத் தகுந்த ஒரு சாது மருமகள் கிடைக்க வேண்டுமே என்று எல்லா தெய்வத்திடமும் பிரார்த்தித்துக் கொண்டாள் லக்ஷ்மி. லக்ஷ்மியின் குரலுக்குத் தெய்வம் செவி சாய்த்தது.

பூங்கொடியைப் பற்றிக் கேட்டதிலிருந்து, அவளைப் பார்த்து வந்தது முதல், அவளைப் பார்த்த முதல் பார்வையிலேயே ஓர் முடிவுக்கு வந்து விட்டாள் லக்ஷ்மி. பூங்கொடி தனக்குகந்த மருமகள். தான் எப்படி வேண்டுமென நினைத்தாளோ, அப்படிப்பட்ட பெண் பூங்கொடி என்ற முடிவுக்கு வந்தாள்.

பூங்கொடி தன் வீட்டுக்கு வந்த பின்தான் அவளை எப்படி நடத்த வேண்டும் என்பதைத் திட்டமிட ஆரம்பித்தாள். பூங்கொடி வந்தால் அவளை ஒரு வேலைகூடச் செய்ய விடக் கூடாது. அந்த மெல்லிய மலரை வாடிப் போகும்படி செய்து விடக் கூடாது. தனக்கு உடலில் வலுவுள்ள வரையில் தானே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். பூங்கொடி தன் மகனுடன் ஆனந்த வாழ்க்கை நடத்த வேண்டும். அதைக் கண்டு தான் ஆனந்தம் அடைய வேண்டும். தனக்கு வலுக் குறைந்த போது, பூங்கொடியின் கையில் குடும்பப் பொறுப்பை ஒப்புக் கொடுத்தால் போதுமானது. அப்போது பூங்கொடியும் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் அடைந்து விடுவாள். இவ்விதமெல்லாம் ஏற்கெனவே ஓர் முடிவு செய்து வைத்திருந்தாள் லக்ஷ்மி.

அதற்கும் காரணம் இருந்தது. லக்ஷ்மியும் சூடு கண்ட பூனைதான். 'வீட்டுக்கு வீடு மண் அடுப்பு'' என்றவாறு லக்ஷ்மியும் சின்ன வயதில் தன் மாமியாரால் படாத பாடு பட்டவள்தான். அவள் வாழ்க்கையில் மிகக் குறுகிய பகுதிதான் மாமியார் கொடுமையை அனுபவித்தாள் என்றாலும் தனது மாமியார் இருந்த கொஞ்ச காலத்திலும் நரக வேதனையை அனுபவித்தாள். அந்த எண்ணம் அவள் உள்ளத்தில் தழும்பேறிக் கிடந்தது. அன்றே தன் மனத்தில் ஓர் முடிவு செய்து வைத்திருந்தாள். வரும் காலத்தில் தனக்கும் ஒரு மருமகள் வரவேண்டும்; அவளைத் தான் நடத்தும் விதத்தைக் கண்டு ஊரே மூக்கின் மேல் விரலை வைத்து அதிசயப் பட வேண்டும். அத்தனை பெருமையுடன் மருமகளை நடத்த வேண்டும் என்பதுதான் அந்த முடிவு. அதற்குரிய காலம் வந்து விட்டது. மருமகள் வந்து விட்டாள். இனி தன் கடமை ஒன்றுதான் பாக்கி.

பூங்கொடியோ, தன் மாமியாரிடம் நல்ல பெயரெடுக்க வேண்டும், அவரை ஒரு வேலையும் செய்ய விடக் கூடாது, எல்லாவற்றையும் தானே செய்து விட வேண்டும், மாமியாருக்கும் தக்க பணிவிடை செய்து அவரைத் திருப்திப் படுத்த வேண்டும் என்று உறுதி பூண்டிருந்தாள்.

வீட்டுக்கு வந்த மறுநாள் காலை ஆறு மணிக்கெல்லாம் பூங்கொடி எழுந்து விட்டாள். அடுப்படிப் பக்கம் அவசரம் அவசரமாகச் சென்று கொண்டிருந்தாள்.

"பூங்கொடி, எங்கே செல்கிறாய்! ஏன் இத்தனை சீக்கிரம் எழுந்து விட்டாய்! நேற்றுத்தானே ஊரிலிருந்து வந்தாய்! அந்த அலுப்பு இராதா! போம்மா! போய்த் தூங்கு!'' என்ற அன்புக் குரலைக் கேட்டுத் திரும்பினாள். சிரித்துக் கொண்டே மாமியார் நின்றிருந்தார். அந்த அம்மாவின் குரலிலிருந்த கனிவு பூங்கொடிக்கு இன்பமளித்தது. புளகாங்கிதம் அடையச் செய்தது. அவளுக்கு முற்றிலும் புதுமையாகப் பட்டது. தான் நிற்பது மாமியாரின் முன்பா! அல்லது தன் அன்னையின் முன்பா என்று ஒரு கணம் சந்தேகப் படும்படி இருந்தது.

இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''இல்லை அத்தை, உங்களுடன்கூட, உங்களுக்கு உதவியாக இருந்து நானும் வேலை கற்றுக் கொள்கிறேன், அத்தை!'' என்றாள்.

லக்ஷ்மிக்கு ஆனந்தம் தாங்க வில்லை. தனக்கு மருமகள் பற்றிப் பெருமை பிடிபட வில்லை. '' இரு பூங்கொடி! அதெல்லாம் இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும். அப்புறம் செய்து பழகிக் கொள்ளலாம்'' என்று அன்பாகக் கடிந்தாள்.


பூங்கொடி சுவர்க்கத்துக்கே சென்று விட்டாள். அன்னையைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அன்பு செலுத்தும் மாமியார் கிடைத்து விட்டால் ஒரு பெண்ணின் வாழ்வு சுவர்க்கம்தானே!

நாட்கள் சென்று, மாதங்கள் மறைந்தன. பூங்கொடி புகுந்த இடத்திலும் வீட்டின் செல்வப் புதல்வியாக விளங்கினாள்.

நாளாக நாளாக இந்தச் சோம்பேறி வாழ்க்கை பூங்கொடிக்கு மிகவும் அலுப்புத் தட்டி விட்டது. சலித்தே போய் விட்டது!

இவ்வித சௌஜன்ய நிலைமையைப் பார்த்துக் கொண்டும். பொறுத்துக் கொண்டும் பக்கத்து வீட்டுப் பெண்மணிகள் எத்தனை நாள்தான் இருக்க முடியும்! அவர்கள் தலை வெடித்து விடாதா! மெல்ல மெல்லப் பூங்கொடியைச் சிநேகம் பிடித்தனர். ஓய்ந்த வேளைகளில் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் உபதேசிக்க மட்டும் அவர்கள் மறந்து விடவில்லை.





பெரம்பூர் மாதர் சங்கத்தார் சென்ற இரண்டு ஆண்டுகாலமாக அரிய சமூகத் தொண்டு செய்து வருகிறார்கள். காந்திமகான் தினம் முதலிய விசேஷ நாட்களைச் சிறந்த முறையில் கொண்டாடுவ தற்குப் பொதுக் கூட்டங்கள், காலட்சேபங்கள் முதலிய நிகழ்ச்சி களை நடத்தி வருகிறார்கள். சகோதரிகளுக்குத் தையல் வேலை கற்றுக் கொடுத்தல், ஹிந்தி மொழி கற்பித்தல் முதலிய பணி களும் ஆற்றி வருகிறார்கள். சமீபத்தில் இச்சங்கம் அகில இந்திய மாதர் சங்கத்துடன் இணைக்கப்பட்டது. ★ ★ ★

"நீ எங்கே வேலை பழகிக் கொண்டால், இந்த வீட்டின் அதிகாரம் உன் கைக்கு வந்து விடுமோ, என்ற பயத்தால்தான் உன் மாமியார் உன்னை ஒன்றையுமே செய்ய விடாது, பூப்போல்வைத்துப் பாதுகாக்கிறாள். நீ ஒரு அப்பாவி! உனக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது! பின்னால் ஒரு காலத்தில் இதை நினைத்து நீயே வருத்தப் படப் போகிறாய்" என்றெல்லாம் ஓதினர்.

ஆரம்பத்தில் இதெல்லாம் பூங்கொடிக்கு ஏறவே இல்லை. அவர்கள் கூறுவதை யெல்லாம் ஆரம் பத்தில் வெறுத்தாள். அப்புறம் வேடிக்கையாக ரசித்தாள். வர வரச் சிரத்தையுடன் கேட்டாள்! பிறகு அது பற்றி நினைத்துப் பார்க்கவே ஆரம் பித்து விட்டாள்.

எத்தனை நாட்களுக்குத்தான் வீட்டு வேலைகளைக் கற்றுக் கொள்ளாமல் ஒரு பெண் இருப்பது! தன்னோடொத்த பெண்களெல்லாம் என்னமாய் ஓடியாடி வேலை செய்கின்றனர். தான் மட்டும் இப்படிச் சோம்பேறியாகக் கிடப்பதா என்று மனத்துக்குள் பொருமினாள்.

ஒரு நாள் தனது கணவனிடமே கூறிவிட்டாள். இரவில் அகால வேளையில் விளக்கெரிவதைக் கண்ட லக்ஷ்மி அதை அணைக்க வந்தவள் பேச்சுக் குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்றாள். பேச்சில் தன்னைப் பற்றி அடிபடுவது அவளைக் கூர்ந்து கவனித்துக் கேட்க வைத்தன.

மனித குலத்தில் இயற்கையாகப் புதைந்து கிடக்கும் கபாவம் லக்ஷ்மியின் உள்ளத்திலும் தலை தூக்கியது. மெள்ளச் சுவரருகே சென்று என்ன பேசுகிறார்கள் என்று கவனித்தாள்!

பூங்கொடியின் குரல்தான்! "அத்தை என்னை ஒரு வேலையும் செய்ய விட மாட்டேன் என்கிறார்கள். நான் என்றுதான் வேலையைக் கற்றுக் கொள்வ தாம்! அவர்களிடம் கூறவா மென்றால் பயமா யிருக்கிறது. நீங்கள்தான் கூற வேண்டும்" என்றாள் பூங்கொடி.

"அடி, அசடே! ராணிமாதிரி உன்னை வைத்திருக்க வேண்டு மென்று அம்மா நினைக்கிறார்கள். நீ என்னடா வென்றால் மகிழ்ச்சி யடைவதற்குப் பதில் துயரப்படு கிறாயே!" என்றான் ரவிச்சந்திரன்.

"அடி அசடே!" என்று லட்சுமி தனக்குள் சிரித்துக் கொண்டே அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டாள்.

மறு நாளிலிருந்து அந்த வீட்டில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. பூங்கொடியிடம் சிறு சிறு வேலை களை லக்ஷ்மி கூறலானாள். பூங் கொடிக்கு இது ஆச்சரியமாக இருந்தது. ஆசையுடன் ஓடியாடி வேலைகளைச் செய்து வந்தாள்.

சின்னஞ்சிறிசு. வேலை செய்தே அறியாதவள். தட்டுத் தடுமாறிச் செய்தாள். கையிலும் காலிலும் போட்டுக் கொண்டாள்.

இதை யெல்லாம் லட்சுமி கவ னிக்காமல் இல்லை. அதை அவள் பார்த்தாலும் பார்க்காதது மாதிரி நடந்து கொண்டாள்.

பாவம், பூங்கொடியின் மனத் தடுமாற்றத்தைக் கண்டு முறுவலிப்பாள். ஏதாவது சொல்ல நினைப் பாள். தன்னைத்தானே கட்டுப் படுத்திக் கொள் வாள். பூங்கொடியின் பிஞ்சுள்ளத்தைப் பயப்படுத் தும்படியாக எதையும் சொல்லி விடக்கூடாதே என்ற உயர்ந்த எண்ணத்தால், எதுவுமே சொல்வதில்லை. மேலும் பூங்கொடி தானாகச் செய்து பழகட்டுமே! அதனால் என்ன நஷ்டம் வந்து விடப் போகிறது என்றும் நினைத்தாள்.

நாட்கள் செல்லச் செல்ல இந்த நிலைமையும் பூங்கொடிக்குக் கஷ்டத்தைக் கொடுத்தது. இந்தப் பபாக்கு அவளுக்குச் சகிக்க வில்லை.

ஒரு நாள் பூங்கொடி தைரியத்தை வரவழைத் துக் கொண்டு, "அத்தை!" என்றாள்.

"என் கண்ணே!" என்றாள் லட்சுமி.

"நான் வேலை செய்யும் போது எனக்குத் தெரி யாததைச் சொல்லிக் கொடுங்கள் அத்தை! தவறு ஏற்பட்டால் திருத்துங்கள் அத்தை! நீங்கள் தானே எனக்குத் தாய் தந்தை எல்லாம்! நான் என்ன குற்றம் செய்தேன்!" என்று அழாக்குறை யாகக் கண்ணீருடன் கேட்டாள்.

"அழாதே கண்ணே! அப்படியே செய்கிறேன். உன் இளம் உள்ளம் நோகக் கூடாதே என்பதால் தான் எதுவும் சொல்லவில்லை. தவிரவும் நீயாகத் தவறு என்று தெரிந்து திருத்திக் கொள்வது நலம் என்று நினைத்தேன். இனி உன் மனம் போலக் குற்றம் கண்ட இடத்தில் கண்டிக் கிறேன்" என்று அவளைத் தேற்றினாள்.

பூங்கொடி ஆனந்த மடைந்தாள். 'எத்தகைய உயர்ந்த பண்புடைய மாமியார்' என்று வியர்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

போன்: 250 (5 லைன்) மதுரை தந்தி: "ஹார்வி"

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

50,00,000 நூற்கும் கதிர்கள் - நெம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள்

கைத்தறி, மில் தறி, பின்னல் தறிகளுக்கேற்ற சகலவித மான ஒற்றை, இரட்டை, மடக்கு காரிக்கன் நூல்கள்

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

போன்: 420 (4 Lines) மதுரை தந்தி: "ஹார்வி"

அரித்து, எரிந்து, கொப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது



நிக்ஸோடேர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடேர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுபாசமாக வைத்துக் கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தாரீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. பே

: 250 (5 லைன்) மதுரை தந்தி

மீன் இலாகாவும் குடி தண்ணீரும்

திருத்துரைப்பூண்டி பஞ்சாயத்துக்குச் சொந்தமான தச்சன் குளம் குடி தண்ணீர் குளமாக இருந்ததை 1941-ம் ஆண்டு ஜூன் மாதம் மீன் இலாகா அதிகாரிகள் மூன்று ஆண்டுகளுக்குக் குத்தகை எடுத்துக் கொண்டார்கள். குத்தகை எடுத்துக் கொண்ட வருஷங்கள் முடிந்து மேலும் ஒன்பது வருஷங்கள் ஆகிவிட்டன. இதுவரையில் மேற்படி குளம் பஞ்சாயத்து போர்டிடம் ஒப்படைக்கப் படவில்லை. தச்சன் குளத்தின் நான்கு கரைகளும் கரைந்து குளத்தில் உள்ள மூன்று படித்துறைகளும் உடைந்து போய்ப் பொது ஜனங்கள் இறங்குவதற்கும் அசௌகரியமாய் இருக்கிறது. குளக்கரைகளில் இருந்த 52 தென்னை மரங்களில் புயலினால் பாதிக்கப்பட்ட 23 மரங்கள் ஒரு பகுதி மேற்படி குளத்துக்குள்ளேயே எடுக்க முடியாமல் கிடந்து அழுகிக் கொண்டே இருக்கிறது. அதனால் ஊரில் காலரா முதலிய தொத்து நோய்கள் பரவுவதற்கு ஏதுவாயிருக்கிறது. மீன் வளர்க்கும் அதிகாரிகளும், மீனுக்கு ஆகாரம் என்ற பெயரில் பலதரப்பட்ட பாசி வகையறாக்களைக் கொண்டுவந்து கொட்டிக் குளமும் தூர்ந்து போய் விட்டது. இப்போது குளத்துத் தண்ணீர் கெட்டு துர்நாற்றம் வீசிக் கொண்டே இருக்கிறது. மேற்படி அசௌகரியங்களைப் போக்கிப் பொது மக்களுக்குச் சௌகரியமாகக் குளத்தைச் சுகாதார முறையில் வைத்திருப்பதற்குப் பஞ்சாயத்துப்போர்டார் தயாராக இருக்கிறார்கள். குளத்தில் உள்ள தண்ணீர் பூராவையும் இறைத்துக் குளத்துக்குள் கிடந்து கொண்டே அழுகிக் கொண்டிருக்கும் மரங்களையும் அப்புறப்படுத்திக் குளத்தை ஆழமாக வெட்டி, நான்கு கரைகளையும் நன்றாகக் கட்டி, படித்துறைகள் மூன்றையும் செப்பனிடவும், கரைகளில் புதிதாகத் தென்னங் கன்றுகள் வைத்துப் பயிர் செய்யவும் ஏதுவாக மீன் இலாகா அதிகாரிகள் உடனடியாக மேற்படி தச்சன் குளத்தைப் பஞ்சாயத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

திருத்துரைப்பூண்டி
17—5—54

எஸ். ரத்தினம்
(பஞ்சாயத்துப் போர்டு அங்கத்தினர்)

தான். நாட்கள் ஓடிக் கொண்டே இருந்தன. இப்போதெல்லாம் பூங்கொடி ஓடியாடி வேலை செய்வாள். ரொம்பவும் தேர்ச்சி யடைந்து விட்டாள். அப்போதைக் கப்போது மாமியாரின் அன்பான கண்டிப்பும் இருக்கும். ஓரேமாதிரி ஒரு குடும்பம் நடந்து கொண்டிருந்தால் அப்புறம் வாழ்க்கையில் சுவாரஸ்யம் ஏது; பூங்கொடி வீட்டு வேலைகளில் மிகவும் திறமைசாலியாகி, ஒரு குடும்பத்தைத் தனியாக நடத்தக் கூடிய தன்மை பெற்று விட்டாள்.

ஆனால் !...

கண்டித்துப் பழகிப் போன மாமியாருக்கு, அந்தப் பழக்கம் மட்டும் நிற்கவில்லை !

பூங்கொடி சரியாகவே ஒரு வேலையைச் செய்தாலும், ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு கண்டித்துக் கொண்டே இருந்தாள். பழக்கத்துக்கு அடிமையாகி விட்டாளே தவிர லக்ஷ்மியின் உள்ளத்தில் எந்தவித கெட்ட எண்ணமும் தவறான நோக்கமும் இல்லைதான் !

வர வரப் பூங்கொடி இதைக் கவனிக்க ஆரம்பித்தாள். ஆரம்பத்தில் அவளுக்கு இது புரியவேயில்லை. தவிரவும் இப்போது பழைய பூங்கொடியல்ல ! இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்ட பூங்கொடி; கொஞ்சம் உலகம் தெரிந்த பூங்கொடியாகிவிட்டாள். அவள் உள்ளம் குரு குரு வென்றது. 'இந்த மாமியார் கூட்டமே இப்படித் தானோ ! ஆரம்பத்தில் எப்படி யிருந்த தனது மாமியார் இப்படியாகிவிட்டாரே ! ஒரு காலத்தில் தான் எத்தனை உயர்வாக தனது மாமியாரைப் பற்றி நினைத்திருந்தாள் ! இன்று அதெல்லாம் போய்விட்டதே ! மாமியார் என்றாலே அதிகாரம் செய்பவள் என்று அர்த்தமா என்ன ! மருமகள் மாமியாருக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று தான் படித்த ஹிந்து சாஸ்திரம் எதிலும் எழுதி வைக்கவில்லையே! வேண்டுமானால் இந்த வீட்டுக்குத் தான் வந்ததற்குச் சில வருடங்களுக்கு முன் வந்தவள் என்ற உரிமை உண்டு மாமியாருக்கு. அதை விட வேறு என்ன அதிகாரம் தன்னைக் காட்டிலும் அதிகமுண்டு. இந்தக் குடும்பத்தில் உள்ள நல்லது கெட்டதற்கு மாமியார் மட்டும்தான் பொறுப்பா ! மாமியாரைவிட மருமகளுக்குத் தானே அதிகப் பொறுப்பு. மாமியார் காலம் என்னவோ ஓடி விட்டது. குடும்பத்தின் எதிர் காலத்தைப் பற்றி மாமியாரை விட மருமகளுக்குத்தான் கவலை அதிகம். இதை எங்கே மாமியார்கள் உணரப் போகிறார்கள். இன்று தான் வந்து விட்டபின் எல்லாவற்றையும் ஒப்புவித்து விட்டுப் பேசாமல் இருக்க வேண்டியது தானே!' இப்படிச்சிந்தனை விரிந்தது பூங்கொடிக்கு.

தன் கணவனிடமே இதைப் பேசித் தீர்த்துவிட முடிவு செய்து விட்டாள் பூங்கொடி. ஒரு நாள் தன் கணவனிடம் இரைந்து கொண்டிருந்தாள்.

" இதோ பாருங்கள். நானும் போதும் போதுமென்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். வேண்டாத மருமகள் கால் பட்டாலும் குற்றம், கை பட்டாலும் குற்றம் என்பார்களே ! அது உண்மையாகத்தான் இருக்கிறது. உங்கள் அம்மாவின் போக்கு வர வர நன்றாகவே இல்லை. அவர்களை நீங்கள் கண்டிக்கிறீர்களா ! அல்லது நானே கண்டிக்கட்டுமா ! ஏதோ நான் கூறிவிட்டேன். அப்புறம் உங்கள் இஷ்டம். இத்தனை நாள் இந்தக் குடும்பத்தில் அமைதி நிலவி இருந்ததென்றால் அது என்னுடைய பொறுமையினால் தான். எனது பொறுமைக்கும் ஓர் எல்லை இல்லையா ! நானும் ஒரு பெண் இல்லையா ! நானென்ன இன்னும் சின்னக் குழந்தையா ! இன்று இதற்கு ஏதாவது ஒரு முடிவு கட்டியாக வேண்டும்..."

நாடத்திலிருந்த லட்சுமியின் காதில் இந்த இரைச்சல் விழுந்தது. ஓடோடி வந்தாள். அவளுக்குத் தலை சுற்றியது. தனது லட்சியமெல்லாம் நினைவுக்கு வந்தன. வேகமாக வந்தவள் பூங்கொடியின் வாயைப் பொத்தினாள்.

" இதோ பார் பூங்கொடி ! இந்த வீட்டுக்கு நீயேதான் எஜமானி ! நீ பார்த்து எனக்குச் சாப்பாடு போட வேண்டியவள். இன்று முதல் குடும்பப் பொறுப்பு முழுதும் உன்னுடையதுதான். நான் எதிலும் குறுக்கே வரவில்லை" என்று ஆவேசம் வந்தவள் போல் கூறினாள்.

பூங்கொடி இதைச் சற்றும் எதிர்பார்த்தவளல்ல ! " அத்தை !" என்று ஆவலாகக் கட்டிக் கொண்டாள். பசுவுக்குக் கன்றின் ஸ்பரிசம் கிட்டும் போது என்ன உணர்ச்சி ஏற்படுமோ அந்த உணர்ச்சி லட்சுமிக்கு ஏற்பட்டது !

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.

REGISTERED No. M. 4392

Registered as a newspaper in Ceylon